நன்னூல் உரை வளம்

18

தொல்காப்பிய நன்னூல்

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

நன்னூல் உரைவளம் (தொகுதி-18)

இ. சாமுவேல் பிள்ளையின்

தொல்காப்பிய நன்னூல்

பதிப்பாசிரியர்
முனைவர் இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
இரண்டாம் முதன்மைச் சாலை,
தரமணி, சென்னை-600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Nannūl uraivaḷam (Vol. 18)** **E. Sāmuvēl Piḷḷaiyiṉ** **Tolkāppiya nannūl**
Author	:	Dr. R. Kannan Associate Professor Dept. of Tamil Language Presidency College, Chennai - 5
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	706
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2010
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	11 Point
No. of Pages	:	280
No. of Copies	:	1200
Price	:	Rs. 120/- (Rupees One hundred and twenty only)
Printed by	:	Sri Venkateswara Offset New No. 47, Rajanga Mathya Street Vadapalani, Chennai - 600 026. Phone : 23621409
Subject	:	Tamil Grammar

முனைவர் கரு.அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை — 113

அணிந்துரை

வாழ்வை இலகுவாக்க மனிதன் படைத்துக் கொண்ட கருவிகள் பற்பல. அவற்றுள் மொழியும் ஒன்று. ஆயினும் பிற கருவிகள் யாவற்றுள்ளும் தலையாயதும் தனிச் சிறப்புடையதும் மொழியே. மொழி இன்றேல் வேறு எக்கருவியும் தோன்றி யிராது. மொழி, மனத்தின் உயிர்; பிறபிற கலைகளுக்கும் கருவிகளுக்கும் தாய். மாந்தரின வாழ்விற்கு இத்துணை இன்றியமையாக் கருவியாய்த் திகழும் மொழி, உலகம் யாண்டும் பரவிக் கிடக்கும் மக்களினக் குழுக்களிடையே பலவாகக் காணக் கிடக்கிறது. அம் மொழிக்கூட்டத்திடையே பன்மீன் நாப்பண் விளங்கு பால்மதி போல் இலங்குவது தமிழ்.வரலாற்றுக்காலந் தொடங்கி இன்றளவும் தன்னேரிலாத் தகைசால் சீர்மை யுடன் திகழும் இத் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பரப்பு அளந்திட்டுக் கூற ஒண்ணா விரிவினை உடையது. காலமும் கடும்புனலும் கொண்டது போக எஞ்சியன சிலவே யாயினும், மறைந்து போனவற்றிற்கு மாற்றாகக் காலந் தோறும் தோன்றிய பனுவல்களோ பற்பல. அழகு தமிழில் அமைந்த அந்நூல்களின் பொதிபொருளைப் பழகு தமிழில் விளக்க எழுந்த உரைகளும் மிகப் பல.

ஓல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்குப் பின் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி இன்றளவும் தனிச் சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்பவே தமிழின் இலக்கணத்தை நலம்படவும் நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரைவிளக்கம் கண்டோர் பலர். அவ்வுரைகளுள் பல, தம் பெயரை மட்டுமே நிறுத்தி தாம் மாய்ந்தன. வேறுபலவோ, அச்சேறியபோதும் இன்று காணுதற்கும் அரியனவாய் உள்ளன. இவ்வாறு காலச் செலவால் அருகி உள்ள உரைகளை அரிதின் முயன்று திரட்டி இருபத்திரண்டு தொகுதிகளாக உருவாக்கப் பெற்றுள்ள இவ்வுரைவளத்தினைஎம் நிறுவனத்தின் வழி வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர்,சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, இராமானுச கவிராயர், கா.கோபாலா சாரியார், தி.கோ.ரங்காசாரியார், ஆறுமுக நாவலர், வ.குமார சாமிப்புலவர்,வை.மு.சடகோபராமானுசாசாரியார், சே.கிருட்டிணமாசாரியார், பவானந்தம் பிள்ளை, கொ.இராமலிங்கத் தம்பிரான், கா.நமச்சிவாய முதலியார், மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகளும், என்றி பவார் செய்த பாயிரப் பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பும், இலாசரசு செய்த எழுத்ததிகாரம் மற்றும் சொல் லதிகாரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இவ்வுரை வளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. நன்னூலைத் தழுவி இயற்றப் பெற்று ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் மீள்பதிப்புக் காணாத திருப்பாற்கடல்நாதன் கவிராயரின் தமிழிலக்கணம், சி.அருணாசலம் பிள்ளையின் TAMIL GRAMMAR, இ.சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், G.U.போப்பின் காண்டிகையுரை, ஆ.முத்துத் தம்பிப்பிள்ளையின் நன்னூல் இலகுபோதம் ஆகியன இவ்வுரைவளத் திரட்டில் தனித்தனி நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வுரைவளம் தமிழன்னைக்கு அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நன்னூல் உரைவளத்தின் பதிப்பாசிரியரான முனைவர் **இரா.கண்ணன்**, சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவ்வுரைவளத்தின் பதிப்புப்பணியோடு எழுத்துக் கோர்த்தல், மெய்ப்புத் திருத்தல், வடிவமைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தனியொருவராக இருந்து சிறப்புடன் செய்துள்ள இப்பதிப்பாசிரியரை மனதார வாழ்த்துவதுடன் நன்றி நவிலுங் கடப்பாடுமுடையேன்.

நிறுவனப் பணிகளில் எம்முடன் இணைந்து பணியாற்றும் துணை இயக்குநர், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

கரு.அழ.குணசேகரன்

சென்னை – 113.

12.10.2010.

முன்னுரை

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐம்பெரும் பிரிவுகளை உடையது என்பர். இது பொது வழக்கே யாயினும் பிற்காலத்தில் பாட்டியல் அனைய புதுப்புது இலக்கணப் பிரிவுகள் தமிழில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்துள்ளன. அவ்வாறே எழுத்து, சொல் முதலான ஒவ்வொரு பிரிவினிலும் தோன்றிய இலக்கண நூல்களும் பல உள. தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களை உடையதாதலான் அது மூன்றிலக்கணம் கூறும் நூல் என்பது போதரும். ஆயினும் பொருளதிகாரத்துள் அமைந்து கிடக்கும் உவமவியலும், செய்யுளியலும் முறையே அணியிலக்கணத்தையும், யாப்பிலக்கணத்தையும் வேண்டுமளவிற்கு விளக்கிக் கூறுதலான், அந்நூல் ஐந்திலக்கண நூலுமாம். தொல்காப்பியத்திற்குப் பின் பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்தன.பழங்காலத்தில் பெருவழக்காய் வழங்கிய அவ்விலக் கண நூல்கள் இன்று வீழ்ந்து போயின. இன்று வழங்கப் பெறும் இலக்கண நூல்களுள் வீரசோழியம், தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த முதல் ஐந்திலக்கண நூலாகும். ஆயினும் அந்நூல் வடமொழி சார்பினைப் பெரும்பான்மை தழுவிச் செல்வதால் அது அவ்வளவாகப் போற்றப் படுவதில்லை. வீரசோழியத்திற்குப் பின் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண் டளவில் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. நன்னூல் ஐந்திலக்கணம் கூறிய நூல் என்றும், இன்று எழுத்து மற்றும் சொல்லிலக் கணம் உரைக்கும் பகுதி மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றும் எஞ்சிய பகுதிகள் காலச் செலவால் அழிந்திருக்கக் கூடும் என்றும் கருதுவாரும் உண்டு. இன்று வழக்கில் உள்ள நன்னூலின் மொத்த நூற்பாத் தொகை நானூற்று அறுபத்திரண்டு. பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என மூன்று பகுதிகளாய் அமைந்துள்ள இந்நூலின்கண் பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும் சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. பாயிரம், பவணந்தியால் இயற்றப்பட்டதன்று என்பர்.

நன்னூலிற்கு இன்றுகாறும் எழுந்துள்ள உரைகள் பல. ஆயினும் மயிலைநாதரின் உரையே முதலில் எழுந்த உரையாகும். மயிலைநாதர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியின் சம காலத்தவர். மயிலைநாதரின் உரை நன்னூலிற்கு இன்று வரை எழுந்துள்ள உரைகள் யாவற்றிலும் தலைமை யானது, தனிச் சிறப்புடையது. இவ்வுரைக்குப் பின் பல உரைகள் எழுந்தன. அவற்றுள் சில அச்சேறாமலேயே இறந்தன.வேறுசில அச்சேறிய பின்னும் இன்று அருகியுள்ளன.இவ்வாறு காலச்செலவான் அருகி வரும் உரைகளைக் காத்தற் பொருட்டும், தமிழாய்விற்குத் தக்க கருவி நூலாய் அமையும் திறம் நோக்கியும் இவ்வுரைவளம் உருவாக்கப் பெற்றுள்ளது.இதில் நன்னூலின் சிறந்த உரைகள் அனைத்தும் திரட்டப் பெற்றுள்ளன.

நூற்பா அதன்கீழ் சீர் பிரிக்கப் பெற்ற நிலையில் நூற்பா,ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, இலாசரசு செய்த மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில் இருந்து தரப்பெற்றுள்ள ஒப்புமைப் பகுதி,நன்னூல் உரைகள் ஆகியன இவ்வுரைவளத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ளன. மூலநூலின் பாட வேறுபாடும், மயிலை நாதர் உரையின் பாடவேறுபாடும் காட்டப் பெற்றுள்ளன.

நன்னூலிற்கு விருத்த யாப்பில் எழுந்த ஆண்டிப்புலவர் உரை அழிந்து போனது. அச்சேறிய உரைகளுள் பல இன்று அருகி பெயரளவில் மட்டுமே அறியப் பெறுபவையாக உள்ளன. அச்சேறிய அரிய உரைகளை யேனும் காக்கும் வகையில் இவ்வுரைவளம் இருபத்திரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் ***கரு.அழ.குணசேகரன்*** அவர்களும், துணை இயக்குநர் **திரு.க.ந.வீரபாகு சுப்பிரமணியன்** அவர்களும் நன்னூல் உரைவள நூல்கள் அனைத்தையும் விரைந்து வெளிக் கொணர்ந்தனர். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வுரைவளத் திரட்டுப் பணியின்போது பல்லாற்றான் உதவிய சென்னை இராணிமேரி கல்லூரிப் பேராசிரியை ***முனைவர் ந.கலைவாணி*** அவர்களுக்கும், உற்றுழி உதவிய அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்வதோடு, தோன்றாத் துணையாய் இருந்து எம்மை இயக்கி வரும் தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து அமைகிறேன்.

10.10.2010

இரா.கண்ணன்.

சென்னை–55

****

தொல்காப்பிய நன்னூல்;

இதனுள்

தொல்காப்பியமும் நன்னூலும், தம்முள்ளொற்றுமைவேற்றுமைகள்விளங்க, ஒருபான்மை உதாரணசகிதமாய்ச் சூத்திரசம்பந்தத்துடனே அச்சிடப்பட்டிருக்கின்றன:

இந்நூல்,

ஐந்திரபாணிநீயம்என்றும் சமரசபாஷியசித்தாந்தம்என்றும் இனிப்பெயர் பெறும் பெற்றிக்கேற்ப உத்தேசித்து, வடமொழிவழக்கும் தமிழ்மொழி வழக்கும் ஐங்கிலியவழக்குங்கொண்டிருக்கின்ற சம்பந்தா சம்பந்தங்களைக் காட்டிப் பூரணவிருத்தியா யெழுதப்புகுந்திருக்குமுறைநூலுக்கு,

முதற்பிரயத்தனம்.

இப்பதிப்பு

இ. சாமுவேல்பிள்ளையினால், வால்ற்றர் ஜாயீஸ்

துரையவர்களுதவியைக்கொண்டு நிறைவேறியது.

நூற்பயன்,

இத்தேசத்தாரிடத்தில் ஐங்கிலியதுரைத்தனத்தார் கல்விவிருத்திபண்ணி வருமுயற்சியினால், இனித்தமிழ்நாட்டின் நன்மைக்கென்று புது நூலியற்றுவோர்க்குப் பாஷாநடைகளின் பேதாபேதக் கியானத்திற்குவேண்டிய, தெளிவு.

இஃது, ௲௮௱௫௰௮

சென்னைமாநகரம், கிறிஸ்துமதக்கியான விளக்கச்சங்கத்தார் அச்சுக் கூடத்தில் கானர்துரையவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

இ. சாமுவேல் பிள்ளையின்

தொல்காப்பிய நன்னூல்

முனைவர் இரா. கண்ணன்

செயப்படுபொருள்

மன்பதைத் தொகுதிவாழ் வளாக வையகந்
தன்னிடை முந்துநூன் மன்னிய பன்மொழி
ஒருங்கெலா மொருபகுதிய தெனுந்து ணிபிணை
மருங்குலா மொற்றுமை நயவளம் வல்லுநர்
கண்ண்டு சமரச பாடியங் கண்டனர்
அண்டர் நாட்டதுவெனு மாரியமா தியாங்
கூரிய பழமையின் கோட்பா டுடைய
ஆரிய மொழிகளு மமிழ்துறழ் தமிழார்
கிளைபடு மொழிகளும் கிழக்கு ரியனவும்
விளைந்தியல் விரிந்த மேற்கிடைப் பட்டவும்
முற்றியன் மொழிக்கொடுஞ் சேமியன் மொழிக்கொடும்
உற்றுணர்ந் துய்ந்துணர் வைப்பெனு முத்தியான்
ஒற்றுமை வேற்றுமை தம்முண் முடித்தனர்
பட்டபல் பாடைக் கொருப்பட வொன்றா
இலக்கண சித்தாந்த மெனவிரித் தியற்றிய
இலக்கணங் களையே யியற்றமிழ் முதலிய
பஞ்ச திராவிடம் பாற்பட வொருநெறி
யெஞ்ச விலளம்பூ ரணமொடு சேனா
வரைய முநச்சினார்க் கினியமு மாறாத்
திரைபுரை யுரைபுத் தம்புது ரைத்தேம்
நமச்சிவா யனுஞான தேசிகனும்
அமச்சவுந் தீக்கத னறைஞ்ச விவேகமும்
நன்னூனி றுத்த முறைக்குண் ணடக்கும்
பன்னூற் றொல்காப்பியம் படர்ப தார்த்தம்
வெளிப்பட விரிந்த வேற்றிலக் கணங்களும்
தெளிதமிழ்க் கண்ணுந் தெரிந்து விளங்கச்
செந்தமிழ் நடைமற் றேனைய நடைக்குப்
பிந்திய தன்மை பெரிதுஞ்ஞ் சிறப்பத்
தொல்காப் பியநன்னூ லெனுந்தொல் பெயர்க்
கெல்லாங் கொள்கையி னிதுபெ யராகச்
சமரச விருத்தி சாலத்
தமிழ்மொழிப் படுவதாஞ் செயப்படு பொருளே.

PREFACE

PANAMBARAN'S INTRODUCTION TO THE THOLCAPYAM

வடவேங்கடந் தென்குமரி, ஆயிடைத், தமிழ்கூறு நல்லுகத்து, வழக்குஞ் செய்யுளுமாயிரு முதலின், எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச், செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு, முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப், புலந் தொகுத்தோனே போக்கறு பனுவல், நிலந் தருதிருவிற் பாண்டிய னவையத், தறங்கரைநாவி னான்மறை முற்றிய, அதங்கோட்டாசாற் கரிறபத்தெரிந்து, மயங்காமரபி னெழுத்துமுறை காட்டி, மல்குநீர்வரைப்பின் ஐந்திரநிறைந்த, தொல்காப்பிய னெனத் தன் பெயர்தோற்றிப், பல்புகழ் நிறுத்த படிமையோனே.

This introduction or சிறப்புப்பாயிரம் was furnished to the Author of this work as a certificate by Panambaran, a pupil like himslef of the great Rishi Agastyan. It is said in the above document that this work had been read, discussed and approved of before the King Pandyan's Conclave of Poets, the Adjudicator being Athancottassan, another School-fellow of Tholcapyan and disciple of Agastyan These there personages were Rishis and seem to with regard to Tamil Literature, in which Agastyan always stands first, Athancottasan second and Tholcapyan third

HISTORY, TRADITION AND MYTHOLOGY

"ஐந்திரநிறைந்த தொல்காப்பியம்," Tholcapyam in which Eyndrum is much followed or consulted. By this phrase, commentators infer that Tholcapyan, in consequence of some disagreement with his Master Agastyan, had left him and joined the conclave at Benares, who advised him to follow the Eyndra system founded by India in Sanscrit Enydrum is more ancient than Panineum, even as the Tholcapyam is more ancient than the Nunnool; and the more recent works are on both cases more read in moder days.

The cause of disagreement above alluded to, was this:- When, on the occasion of Siva's marriage with Parvati at Kailas, all the inhibitants of the three worlds were present there upon invitation, of course Agastyan and Tholcapyan were also asked, more especially from the fact of their being esteemed celestial Rishis. Now the Himalayas, in which Kailas is only a peak, not being able to support

the universal concourse of the three worlds, began to sink down like on of the sides of a balance, while Cape Comorin became more elevated in proportion, and gradually rose up together with the Peninsula of Southern India. At this crisis Sivas having grown very uneasy applied to Narada Rishi for advice, and he recommended that Agastyan sould be put in possession of the Viswamantrum, that he might go and rest upon Podigai (Mountain near Cape Comorin). This was done, and by the influence of that Mantrum, Agastyan grew so big like another globe, that the balance was adjusted, and the marriage-ceremony happily completed.

But on Agastyan's sudden starting from the Himalayas, he entrusted his wife to Tholcapyan, with his injunction, that he was to bring her to him safe after the marriage, and that during the journey they should never walk at less than three feet distance from one another. This Tholcapyan failed to do, for when crossing the Cavery, the current being strong, he helped the poor women forward leading her by her hand to the opposite bank For this violation of his commend, Tholcapyan was cursed by his Teacher to the effect that he was never to enter Swergham. Being provoked in no small degree, Tholcapyan re-cursed the foolish Rishi, saying that he too would never enter Swergham, and that all the works which he had written in Tamil would be lost. This circumstance in Hindu Mythology serves to acccount for the loss of the original works of that great man, and for the production by Tholcapyan of the following celebrated Treatise of Tamil Grammer after the Eyndra System, in opposition to Agastyan's work wich the Rishi had produced in opposition to the generally received opinions of the conclave of sages at Neimisaranyam near Benares

DIVINE ORIGIN OF THE TAMIL LANGUAGE

The Sanscrit Language was once withdrawn into heaven from earth by the immortals, as a punishment upon men, and then a Rishi by name Panini invoked Siva to instruct and inspire the language into him. After thousands of years of austere penance and contemplation, Siva condenscended to appear before Panini, and beat his Tamarakum (a little hand drum) from wich emanated fourteen sounds; each sound formed a sutrum, and communicated a certain class of letters of the celestial Alphabet. Panini was further inspired to work out the Grammer of the Language for which he had so long entreated The Sutrums run thus -

The whole is termed Sivasutra-Jalam in Panini. Vide Wilson's Sanscrit Grammer, p.6.

This, says Tradition, is the origin of the Sanscrit language; and to rival it, Tamulians too claim divine origin for their tongue. The Tamil Language owes its origin to the disagreement of Agastyan with the College of Sanscrit Scholars at Benares. The Rishi, ever known in the Puranas as an unyielding and obstinate character, on one occasion carried his opposition so far as to bring down upon him expulsion from the College. Enraged at this treatment, he appeared before Soobramanyan at Kailas, and while entreating the god to bestow upon him power and ability to create a new language to rival Sanscrit, and thereby check the pride of the haughty conclave, the court where they were conversing, was gradually filled by a very agreeable smell. Agastyan asked Soobramanyan what this meant, and was ordered to approach a croner of the Court; and there he found deposited a large bundle sending forth most delicious odour. "தமிழ் தமிழ்" Tamil, Tamil; exclaimed the sage. Well that is the language, replied the god which I delegate you to propagate among the people in South, so as to subdue to your oppenents. The bundle "Tamil" consisted of some olei books which the offspring of Siva taught the Rishi, who proceeded at once to the South of India and composed his works and systems with the assistance of his twelve disciples. See. p.121. The term தமிழ் signifies good, or sweet. Wide the Nigandu, Thivagarum and Rottler, under the word.

COMPARATIVE MERITS OF THE THOLCAPYAM AND THE NUNNOOL

The Tholcapyam and the Nunnool are in other words no other than the Eyndrum and the Panineum in principle. The former is treated more upon the Inductive method The Nunnool lays down general rules and divides its subjects orderly into general classes, species and particulars; the Tholcapyam gives a few general rules only, and that too, in no regular order. It is for the most part one continued string of particulars and individuals and the reader has the reader has the labour either to commit the Sutrums to memory or to compare them with other before he can arrive at a definite conclusion. Pavananti studied the Tholcapyam Eyndrum and the confused heap of the Agastyam, and must have well digested the whole plan of the Panineum before he wrote his celebrated Nunnool, which is executed of Niti Neri Vilakkum (நீதிநெறி விளக்கம்), Preface, p.VIII. However the Tholcapyam stands unrivalled in respect of its particular and minute

rules on individual subjects. It is still more unrivalled in its third or last Chapter, the Grammer of General Knowledge (பொருளதிகாரம்); and its style and wording are of great use to all students of ancient Tamil works.

II. SAMANA MUNIVAR'S INTRODUCTION TO THE NUNNOOL

மலர்தலையுலகின் மல்கிருளகல, இலகொளிபரப்பி யாவையும் விளக்கும், பருதியினொருதா னாகிமுதலீ, றொப்பள வாசை முனிவிகந் துயர்ந்த, அற்புதமூர்த்திதன் னலர்தரு தன்மையின், மனவிருளிரிய மாண் பொருண் முழுவதும், முனிவற வருளிய மூவறுமொழியுளும், குணகடல்குமரி குடகம் வேங்கடம், எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள், அரும் பொருளைந் தையும் யாவருமுணரத், தொகைவகை விரியிற் றருகெனத் துன்னார், இகலறநூறி யிருநிலமுழுவதுந், தன தெனக்கோலித் தன்மத வாரணந், திசை தொறுநிறுவிய திறலுறு தொல்சீர்க், கருங்கழல்வெண் குடைக் கார்நிகர் வண்கைத், திருந்திய செங்கோற் சீயகங்கன், அருங்கலை வினோதன் அமராபரணன், மொழிந் தனனாக முன்னோர் நூலின் வழியேநன்னூற் பெயரின் வகுத்தனன், பொன்மதிற்சனகைச் சன்மதி முனியருள், பன்னருஞ்சிறப்பிற் பவணந்தி, என்னுநாமத் திருந்தவத்தோனே.

This is the சிறப்புப்பாயிரம் of the Nunnooli in which the name of the Author பவணந்தி and that of his patron சீயகங்கன் Seya-Gunghan are mentioned. It is the production of Saman Munivar, சமண முனிவர், the disciple of Pavananti, and the earliest Commentator of the Nunnool See Joyes' Grammatica Tamulieusis, Book I, Chap I, Sect I.

CONTENTS

N.B The words or commentaries consulted in this Book are, the (இளம்பூரணம்) Ilamboornum, (நச்சினார்க்கினியம்) Nachinarkynium, (சேனாவரையம்) Sanavaryam, (புத்தம்புதுரை) the New Exposition by Sangra Namachyvayar and Sivagnana Dasighar, and (தொன்னூல்) the Thonnool by Beschi. See p. 121. Paras 5, 6, 9, 10, 11, 17.

பொதுப்பாயிரம்

A GRAMMAR OF GENERAL PREFACES.

1. முகவுரை பதிகமணிந்துரை நூன்முகம், புறவுரைதந் துரைபுனைந் துரை பாயிரம்.

2. பாயிரம்பொதுச் சிறப்பென விருபாற்றே.

3. நூலே நூவல்வோ னுவலுந்திறனே, கொள்வோன் கோடற் கூற்றாமைந்து, மெல்லா நூற்கு மிவைபொதுப்பாயிரம்.

4. நூலினியல்பே நுவலினோரிரு, பாயிரம் தோற்றி மும்மையி னொன்றாய், நாற்பொருட்பயத்தொ டெழுமதந்தழுவி, யையிரு குற்றமுமகற்றியம் மாட்சியோ, டெண்ணான் குத்தியி னோத்துப் படல, மென்னுமுறுப்பினிற் சூத்திரங் காண்டிகை, விருத்தியாகும் விகற்பநடை பெறுமே.

5. முதல்வழிசார் பெனநூன் மூன்றாகும்.

6. அவற்றுள், வினையினீங்கி விளங்கிய வறிவின், முனைவன் கண்டது முதனூலாகும்.

7. முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப், பின்னோன் வேண்டும்விகற்பங்கூறி, யழியாமரபினதுவழி நூலாகும்.

8. இருவர்நூற்கு மொருசிறை தொடங்கித், திரிபு வேறுடையது புடைநூலாகும்.

9. முன்னோர்மொழிபொருளேயன்றியவர்மொழியும்பொன்னே போற்போற்றுவமென்பதற்கு–முன்னோரின்வேறுநூல் செய்துமெனு மேற்கோளி லென்பதற்குங் கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்.

10. அறம்பொருளின்பம்வீடடைதனூற்பயனே.

11. எழுவகைமதமேயுடன்படன்மறுத்தல், பிறர்தம் மதமேற் கொண்டு களைவே, தாஅனாட்டித்தனாது நிறுப்பே, யிருவர் மாறு கோளொருதலை துணிவே, பிறநூற் குற்றங் காட்டலேனைப், பிறிதொடு படாஅன் றன்மதங் கொளலே.

12. குன்றக்கூறன் மிகைபடக்கூறல், கூறியதுகூறன்மாறுகொளக் கூறல், வழூஉச்சொற் புணர்த்தன் மயங்கவைத்தல், வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்திறுத னின்றுபயனின்மை,யென்றிவை யீரைங் குற்றநூற்கே.

13. சுருங்கச்சொல்லல் விளங்கவைத்த, னவின்றோர்க் கினிமை நன்மொழிபுணர்த்த, லோசையுடைமை யாழமுடைத் தாதன், முறையின் வைப்பே யுலகமலையாமை, விழுமிய துபயத்தல் விளங்கு தாரணத்த, தாகுனூலிற் கழகெனும் பத்தே.

14. நுதலிப்புகுதலோத்து முறைவைப்பே, தொகுத்துச்சுட்டல் வகுத்துக்காட்டன், முடித்துக்காட்டன் முடிவிடங்கூற, றானெடுத்து மொழிதல் பிறன்கோட்கூறல், சொற்பொருள் விரித்த றொடர் சொற்புணர்த்த, லிரட்டுறமொழித லே துவின்முடித்த லொப்பின் முடித்தன் மாட்டெறிந்தொழுக, லிறந்ததுவிலக்க லெதிரது போற்றன், முன்மொழிந்து கோடல் பின்னதுநிறுத்தல், விகற்பத்தின் முடித்தன் முடிந்ததுமுடித்த, லுரைத்துமென்ற லுரைத்தாமென்ற, லொருதலை துணிதலெடுத்துக்காட்ட, லெடுத்த மொழி யினெய்தவைத்த, லின்னதல்ல திதுவென மொழித, லெஞ்சிய சொல்லினெய்தக் கூறல் பிறநூன் முடிந்தது தானுடன்படுத, றன்குறிவழக்கமிக வெடுத்துரைத்தல், சொல்லின் முடிவின்ப்பொருண் முடித்த, லொன்றின முடித்ததறன்னின முடித்த, லுய்த்துணர்வைப் பெனவுத்தி யென்ணான்கே.

15. நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக்காட்டி, யேற்புழி யறிந்திதற் கிவ்வகையாமெனத், தகும்வகை செலுத்து தறந்திரவுத்தி.

16. நேரினமணியை நிரல்படவைத்தாங், கோரினப் பொருளை யொருவழிவைப்ப, தோத்தெனமொழிப வுயர்மொழிப் புலவர்.

17. ஒருநெறியன்றி விரவியபொருளாற், பொதுமொழி தொடரி னதுபடலாமாகும்.

18. சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச், செவ்வ னாடியிற் செறித்தினிதுவிளக்கித் திட்பநுட்பஞ் சிறந்தன சூத்திரம்.

19. ஆற்றொழுக்கரிமா நோக்கந்தவளைப், பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத்திரநிலை.

20. பிண்டந்தொகைவகை குறியேசெய்கை, கொண்டியல் புறனடைக் கூற்றன சூத்திரம்.

21. பாடங்கருத்தே சொல்வகை சொற்பொரு, டொகுத்துரையு தாரணம் வினாவிடை விசேடம், விரிவதிகாரந் துணிவு பயனோ டாசிரியவசன மென்றீரேழுரையே.

22. கருத்துப்பதப்பொருள் காட்டுமூன்றினு மவற்றொடு வினாவிடை யாக்கலானுஞ், சூத்திரத்துட்பொரு டோற்றுவ காண்டிகை.

23. சூத்திரத்துட்பொரு ளன்றியுமாண்டைக், கின்றிய மையாதி யாவையும் விளங்கத், தன்னுரையானும் பிற நூலானு, மையமகலவைங் காண்டிகை யுறுப்பொடு, மெய்யினையெஞ்சா திசைப்பது விருத்தி.

24. பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா – வெஞ்சாத
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூன் முடியுமாறு.

25. உரத்தின் வளம்பெருக்கி யுள்ளிய தீமைப்

புரத்தின்வளமுருக்கிப் பொல்லா – மரத்தின்
கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

26. குலனருடெய்வங் கொள்கை மேன்மை, கலைபயி றெளிவு கட்டுரை வன்மை, நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியு, முலகியலறிவோ டுயர்குணமினையவு, மமை பவனூலுரை யாசிரியன்னே.

27. தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும், பருவமுயற்சி யளவிற்பயத்தலு, மருவியநன்னில மாண்பாகும்மே.

28, அளக்கலாகா வளவும்பொருளுந் துளக்கலாகா நிலையுந் தோற்றமும் வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே.

29. ஐயந்தீரப் பொருளை யுணர்த்தலு மெய்ந்நடுநிலையு மிகுநிறை கோற்கே,

30. மங்கலமாகி யின்றியமையா, தியாவருமகிழ்ந்து மேற்கொளமெல்கிப் பொழுதின்முகமலர் வுடையதுபூவே.

31. மொழிகுணமின்மையு மிழிகுணவியல்பு, மழுக்காற வாவஞ்ச மச்சமாடலுங், கழற்குடமடற்பனை பருத்திக் குண்டிகை, முடத்தெங்கொப்பென முரண்கொள் சிந்தையு, முடையோரிலரா சிரியராகுதலே.

32. பெய்தமுறையன்றிப் பிறழவுடன்றருஞ், செய்திகழற் பெய் குடத்தின்சீரே.

33. தானேதரக்கொளி னன்றித்தன்பான், மேவிக்கொளக் கொடா விடத்ததுமடற்பனை.

34. அரிதிற்பெயக்கொண் டப்பொருடான்பிறர்க், கெளிதீவில்லது பருத்திக்குண்டிகை,

35. பல்வகை யுதவிவழிபடு பண்பினல்லோர்க் களிக்குமது முடத்தெங்கே.

36. ஈதலியல்பேபியம்புங்காலைக், காலமுமிடனும் வாலிதி னோக்கிச், சிறந்துழியிருந்துதன் றெய்வம்வாழ்த்தி, யுரைக்கப்படும்பொரு ளுள்ளத்தமைத்து, விரையான் வெகுளான் விரும்பிமுகமலர்ந்து, கொள்வோன் கொள்வகை யறிந்தவனுளங்கொளக், கோட்டமின் மனத்தினூல் கொடுத்த லென்ப.

37. தன்மகனாசான் மகனேமன்மகன், பொருணனி கொடுப்போன் வழிபடுவோனே, யுரைகோளாளற் குரைப்பது நூலே.

38. அன்னமாவே மண்ணொடுகிளியே, யில்லிக்குடமா டெருமை நெய்யரி யன்னர் தலையிடை கடைமாணாக்கர்.

39. களிமடிமானி காமிகள்வன் பிணியனேழைபிணக் கன்சினத்தன், றுயில்வோன்மந்தன் றொன்னூற்கஞ்சித், தடுமாறுளத்தன் றறுகணன்பாவி, படிறனின்னோர்க்குப்பகரார் நூலே.

40. கோடன்மரபே கூறுங்காலைப், பொழுதொடுசென்று வழிபடன் முனியான், குணத்தொடு பழகியவன் குறிப்பிற் சார்ந்திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப், பருகுவனன்னவார் வத்தனாகிச், சித்திரப்பாவையி னத்தவடங்கிச், செவிவாயாக நெஞ்சுகளனாகக், கேட்டவை கேட்டவை விடாதுளத்தமைத்துப், போவெனப் போதலென்மனார் புலவர்.

41. நூல்பயிலியல்பே நுவலின்வழக்கறிதல், பாடம்போற்றல் கேட்டவை நினைத்த, லாசாற்சார்ந்தவை யமைவரக்கேட்ட, லம்மாண்புடை யோர் தம்மொடுபயிறல், வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை, கடனாக்கொளினே மடநனியிகக்கும்.

42. ஒருகுறிகேட்போ னிருகாற்கேட்பிற்பெருக நூலிற்பிழை பாடிலனே.

43. முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்.

44. ஆசானுரைத்த தமைவரக்கொளினுங் காற்கூறல்லது பற்றலனாகும்.

45. அவ்வினையாளரொடு பயில்வகையொருகாற், செவ்விதி னுரைப்பவவ் விருகாலு, மையறு புலமை மாண்புடைத் தாகும்.

46. அழலினீங்கானணுகானஞ்சி, நிழலினீங்கானிறைந்த நெஞ்சமோ, டெத்திறத் தாசானுவக் குமத்திற, மறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே.

பொதுப்பாயிர முற்றிற்று.

சிறப்புப் பாயிரம்

OF PARTICULAR PREFACES OR INTRODUCTIONS.

1. ஆக்கியோன் பெயரே வழியேயெல்லை, நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே, கேட்போர்பயனோ டாயெண்பொருளும், வாய்ப்பக்காட் டல்பாயிரத்தியல்பே.

2. காலங்களனே காரணமென்றிம், மூவகையேற்றி மொழி நருமுளரே.

3. முதனூல்கருத்த னளவுமிகுதி, பொருள்செய்வித்தோன் றன்மை முதனிமித்தினு, மிடுகுறியானுநூற் கெய்தும்பெயரே.

4. தொகுத்தல்விரித்த றொகைவிரி மொழிபெயர்ப்பெனத் தகுநூல் யாப்பீரிரண்டென்ப.

5. தன்னாசிரியன் றன்னொடுகற்றோன், றன்மாணாக்கன்ற குமுரைகாரனென், றின்னோர்பாயிர மியம்புதல்கடனே.

6. தோன்றாதோற்றித் துறைபலமுடிப்பினுந், தான்றற்புகழ்தற குதியன்றே.

7. மன்னுடைமன்றத் தோலைத்தூக்கினுந், தன்னுடையாற் றலுணராரி டையினு, மன்னியவவையிடை வெல்லுறு பொழுதினுந், தன்னைமறுதலைப ழித்தகாலையுந், தன்னைப்புகழ் தலுந்தகும் புலவோர்க்கே.

8. ஆயிரமுகத்தா னகன்றதாயினும் பாயிரமில்லது பனுவலன்றே.

9. மாடக்குச்சித்திரமு மாநகர்க்குக்கோபுரமு
மாடமைத்தோணல்லார்க் கணியும்போ – னாடிமு
னைதுரையாநின்ற வணிந்துரையையெந் நூற்கும்
பெய்துரையாவைத்தார் பெரிது.

சிறப்புப்பாயிர முற்றிற்று.

சமரசபாஷிய சித்தாந்தம்.

(அகவல்)

உலகம்விரிந்த வொருசொல் லதுபோற்
பலகம்பலைப்படப் பட்டபல்பாடையும்
ஆதியினனாதியா னருளுபு மானவர்க்
கோதியவொருமுதல் வழிப்பிறந்தனவவ்
வாதிநூலொருசா ரறிவினரும்மதம்
வாதநூல்வழாஅ மரபின ருணர்த்தின்
பகுதியதொருமையும் விகுதியதொருமையுந்
பகுதிவேற்றுமையும் விகுதிவேற்றுமையும்
திரிபதுமரபுந் தெரியாவிகாரமும்
உரிமையும்பொதுமையும் பாற்படவோர்ந்து
பன்மையாப்படர்ந்தவற் றினஞ்சிலகண்டு
சின்மையிலக்கணந் திறப்படத்தெரிந்தாங்
கவ்வத்தொகைவகை விரிகளையவையவை
யெவ்வெவ்வழிகளி னியலுமவ்வழிகளிற்
சேர்த்தித்தெளிந்த திறன்மூவகைய
பாத்தவையாசிய வைரவப்பாலன; –
ஓரசையொருமொழி யுள்ளசைமுழுமொழி
ஓரிருமொழியுஞ் சேமியஞ்சீனமா
ஆரியமநாரிய மாமிரண்டொருபொது
வாகியவுறுப்பியன் மொழிகளிப்பரதமா
நிலன்பெறநிகழ்வன வனைத்தையுமுணர்த்திய
இலக்கணமொருகலை யெனும்பொதுவாய்பாட்
டியற்கையேசமரசஞ் சிறப்பிலக்கணங்கள்
வயின்வயினொழிய மாறாமரபுடை
வாய்மையுமுண்மையு நிலைஇயவழக்காற்
சேய்மையின்முனைவன் றெரித்துமொன்றே
அவனுமொருவனே யவனருண்மனுவோ
ரவர்முதலதுவுமா ரொன்றவர்குலமும்
பாடையினிலத்திற் கொள்கையிற்படர்ச்சியிற்
கூடியபிரிந்தன கொண்டனவிண்டன
பலவும்பலவாய்ப் பல்கியுமவற்போல்
நிலவியவொருமையே நிறுப்புணர்த்திந்நூன்
முடிபினைமொழிவது சமரசபாடியம்,
கடைப்பிடிக்கருவிகள் கருதியநிறுத்திற்
சித்தாந்தமென்னுஞ் செம்பெயர்பெறுமால்,

உத்தியுமுகமு மொருமுதலனந்தன்
செப்புமாபாடியஞ் செப்பியபதஞ்சலி
யிப்புவித்தமிழி னியற்கையுந்தழீஇக்
கொண்டகோள்பிழையாக் கூரியதாகலின்
வண்மையந்திராவிட மாபாடியமெனா
வகத்தியமுதலாச் சான்றோரறைந்தவை
யிகத்திகலாமை யியலும்பாலதென்
றறிவறியாரிய ரரிறீர்த்
திறையுமிலேன்செய லினிதுகொள்குவரே.

N.B.:-

This number or volume of the Tamil Museum is a complete book in itself, containing besides a synopsis of the whole system, the Original Texts of the Tholcapyam and the Nunnool, the only two standard works on the subject.

முருகன் றுணை

சிறப்புப் பாயிரம்

பூமிசையகலா நான்முகத் தொருவன்
படைப்புழி யின்சொலி னியக்கந் தெரிப்பான்
இருக்கை யாய்வாழிய ரெனாமே னிறுவிய
வேங்கடங் குமரி யோங்கிய மேல்கீழ்ப்
புணரிசூழ் வரைப்பி லணவிய முத்தமிழ்
ஆன்றதொல் கடலுட் டோன்று றுமைம்பொருள்
ஈரைஞ்ஞூற்றுச் சீரமை பணமணிச்
சூட்டருணெட்டுடற் கோட்டமில் பாப்பர
சேந்து புகிடந்த மாண்ப மைநீணிலத்
தேவரு முணராத் தாவரும் பயன்கொள
உயிர்தொறுஞ் சிவணிய செயிரறு பொதுநட
நவிலுந் தனிமுதல் தவலருங் கைவலத்
தமிழிசைக துவிய தமருகத் தெழுமேழ்
இரட்டிய வெழுத்தொலி தெருட்டிய வாரிய
நெடுமொழிப் பாணிநி மடனிகு முதியோன்

இஃது இவரது இஷ்டராகிய புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியாரவர்கள் இயற்றியது.

போன்மென விருந்தமிழ்ப் பான்மைமுழு துணர்
முகட்டுயர் பொதியப் பொருட்டுழி யிருந்தருள்
பரமாசிரியற் பற்பகல் வழிபட்
டரும்பெறலியல் பெறீஇப் பொருந்திய பன்னிரு
மாணவக் குழாத்து ணிணிலை கொளுவிய
அல்காப் பெருஞ்சீர்த் தொல்காப் பியமுனி
தற்பெயர்தோற்றி யற்புறத்தந்த
ஐந்திர நிறைந்த வியந்தகு நுண்பொருட்
டொன்மைசால் காப்பியத் துண்மரீஇப் பொதிவன
பாட்டுரை பெறுமேம் பாட்டுடை மையினில்
ஆனாக்கங்கன் மேனாள் வேண்டலின்
சனகா புரத்து ளினையாச் சால்பமை
சன்மதி தந்த வண்மைகூர் சிறப்பிற்
பவணந்தி யுரவோன் றுவள றவகுத்த
நன்னூ லென்னு மந்நூற் கிடந்தன
பொருளொரு சேரத் தெருளுறச் சூழ்ந்து
செந்தமிழ் நாடே யன்றியு மாந்திர
மலாடு கருநடங் குலாவு மிவ்வாதித்
தேத தும்வழங்குந் திறன் றிறம்பாமை
யொருமொழிக் குரியவ ரன்றியும் விரவும்
ஐங்கிலியம்முத லறிஞரு மேற்க
ஆரியந் திரவிட மாந்திரங் கருநடம்
ஒருமைங் கிலியத் துரைபொதுச் சிறப்பு
நடைநுத லியன வடைவிற் கற்பவர்
பல்வகை நலனறி மல்கு முணர்ச்சியின்
உள்ளக் கிளர்ச்சியுங் கொள்ளப் பெறுவன
நூன்மொழி பெயர்க்கும் வாய்மைக் கருவியுந்
தெள்ளியோர் பயனடை செவ்வியுட் கொள்ளுபு
நந்தியம் பொருப்பி னந்தியும் பகலும்
அருகா வளங்கெழூஉம் வருவாய்த் திரிபிலாப்
பார்வயி னின்பு நீள்வழி யுதவுறூஉம்
பாற்பெயராற் றொழுக் கேற்பதெஞ் ஞான்றும்
ஏனைநாட வைபோ லாதிரு மைக்கும்
பிறவிக் கெல்லை காணூஉ நிறைவுறக்
கல்லாப் புணரு நயனுடை நல்லோர்
பெட்புறுந் திருவின தொட்பமார் தொண்டை
நன்னாட் டிடைநீள் பன்மாண் புகழ்மை
மன்னுதெண் டிரைசூழ் சென்னை யம்பதிக்க
ணிறைகொளும் புலமைத் துறைவந்த வர்தங்
குழுவகங் கவரா மகிழ்தலை சிறப்ப

ஒருதான் கண்டவை பிறருந் தெரிகெனு
நீக்க மிலுள்ளத் தார்வநன் கூக்கத்
தண்டரும் பெயரிய பண்டையோர் நூல்வழிப்
பன்னுதொல் காப்பிய நன்னூ லெனவும்
ஐந்திர பாணி நீய மெனவும்
சமரச பாடிய சித்தாந்த மெனவும்
வளம்பா டிலாத இளம்பூ ரணமும்
மெய்ச்சொலாற் பழிச்சு நச்சினார்க் கினியமும்
வானோர் மாண்பமை சேனா வரையமும்
சங்கர நமச்சி வாயமு மென்றிவை
*ஐந்துரையுந் தொகுத் தின்புற வுண்மையின்
பூரண விருத்தி யெனவும் பெயர்புனைந்
திந்நூலியற்றி யெழுதா வெழுத்திற்
பன்னூ னெறியிற் பதித்து நல்கினன்;
வ்ளைநீர்க் கருங்கடன் மறிதிரை கொழிக்கும்
உளைவுறிஇப் பணில முயிர்த்த நித்திலம்
கருங்கோட்டுப் புன்னை நறுங்கேழரும்பர்
குருகின முயிர்க்கும் பரூஉமணி யொண்கரு
இஃதஃதெனா வயிர்ப் புறவயின் றொறுந்தொகூஉம்
நறைவார் சோலைப் பறையா றெனுநகர்
வதிதருசோழ வேளாளமரபிற்
பதிதரு தாண்டவ ராயவேள் பயந்த
நாட வருகவி சேடசித் தாந்தி
செங்குவளை யந்தார் தங்குமணி மார்பன்
நாமவேலைப் புவிநயக்கும்
சாமு வேலெனுந் தகைமை யோனே.

---

*சங்கர நமச்சிவாயர் உரையில் சிவஞான முனிவர் உரையும் இருக்கின்றாகலின் ஐந்துரை என்றார்.

சாத்துக் கவி

புதுவைத் தமிழ்ப்புலவர்
பொன்னுசாமி முதலியாரவர்கள்
இயற்றியவை

ஓதநெடுங் கடலுலகோ ரறமுதனாற்பொருட்பயனுற்
றுய்வானான்றோ,
ரோதியபல்லியற்றமிழ் நூற் கொள்கையொருங் குண
ர்வரிதென் றுளத்தூடுன்னி,
மேதகுதொல்காப்பியநன் னூலினைக்காட் டொடுவிரி
த்து விளங்கத்தந்தான்,
றாதுகுபூம் பொழிற்பிறைசைச் சாமுவேல்மன்னனெ
னுந் தமிழ்வல்லோனே. 1

இருநிலவரைப்பி னிருளறவிமைக்கு மிருசுடரெனத்
தமிழ் முனிவ,
னருட்கிடனாய புலவருட்டலைவ னரும்பவணந்தியீங்
கிருவர்,
தருமியற் றமிழொற் றுமையிடையிடைக்கண் டகும்
வகைவிரித்தினி தளித்தா,
னொருதனிக் கவிஞன் றாண்டவராய னுதவிய சாமு
வேல்மன்னே. 2

தரங்காபுரம்
சண்முகக் கவிராயரவர்கள்
இயற்றியவை

நிறையாற்றைக் கடக்குனர்போ லிலக்கியமோடிலக்
கணமா நெடுநீர்நீந்தித்,
துறையாற்றினொழுக்கியதொல் காப்பியநன் னூற்ப
யனைத் தொகுத்துமுந்நான்,

முறையாற்றிப் பலபாடைச் சொற்குமிஃதொக்குமெ
　　னமுதற் பேர்தந்தான்,
பிறையாற்றில் வளர்சோழ குலச்சாமு வேலென்னும்
　　பெற்றியோனே. 1

ஆண்டவனாலருள் சமயத்தமைந்து பலபூசையெலா
　　மடைவேமுற்றுந்,
தாண்டவராய்க் குரிசிற் றரங்கையொன்றும் பிறை
　　யாறாந் தலஞ்சேர்சைவன்,
காண்டவருட் சாமுவேற் கா்தலன்றொல் காப்பியத்தி
　　ன் கருத்துநன்னூற்,
றூண்டவரும் பொருட்பகுத்துந் தொகுத்தறி ஞரு
　　வப்ப விருந்துதவினானால். 2

25th June, 1858.

JUST PUBLISHED NO.1

O F

"***The Tamil Museum and Review of Oriental Philology,***" containing Part I. of the Tholcapya-Nunnool, or, A Comparative Reference Edition of the Tholcapyam and the Nunnool, the most ancient and the only standard systems of Grammatical literature in Tamil, with Examples, and Notes Critical and Explanatory. The first Appendix contains a complete Synopsis of the whole of the Dravidian Philology, and an account of the standard Authors and Commentators. The Second Appendix comprises the hitherto unpublished Original Texts or Sootrums of the Second and Third Books of Tholcapyan, for the perusal of students as well as tutors. The entire work is designed to be hereafter amplified as a large Comparative Classical and Colloquial Commentary of Sanscrit, Tamil, and English Syntax, containing not only all the opinions of Native Writers, but also the best points of Beschi's Rhenius', and Caldwell's Treatises, to aid those who, either in connection with educational institutions, or independently, may engage in translations, or in compilations of original works, for the benefit of the people of this country. Price - Rupees 2-8-0.

PROSPECTUS

It is proposed that a Periodical, under the appellation of »uªjkªjzTl« Tamil Museum and Review of Oriental Philology, shall be published from time to time according to the Editor's leisure, convenience and means. Each issue will be a number complete in itself, i.e.an entire book as in the instance above, of Tholcapys-Nunnool. The Editor of the Tamil Museum proposes to publish in it, only those subjects that he is already in possession of, or which he has himself mastered. The articles tharefore which may appear in its numbers are as follow. - viz: 1. Hitherto unpublished Manuscripts. 2. Translations from English and Sanscrit. 3. Original Essays styled jÄœ kŠrÇ in initation of the British Essayists. 4. Philological Criticisms or Comparative Syntax of the English Tamil and Sanscrit languages. 5. A Vocabulary of Idiomatic Compounds. 6. Tamil Version of the Rig-veda 7. A Review of the Tamil Authors Ancient and Modern. 8. Offerings to Children and School Boys. 9. A few Medical works. 10. Comparative Readings of Portions of the three versions of the Bible by Percival, Rhenius and Fabricius, with observations. 11. Shastrology or a Collection of Hindu superstitions. 12. A Vocabulary of proper names. N.B. This will simply contain some hundreds of names with a few remarks and cursory explanations, having been left by the Editor uncompleted, since the appearance of a Prospectus of a Classical Dictionary from another quarter.

தொல்காப்பிய நன்னூல்

தொகுதி – 1

(BOOK - 1)

எழுத்ததிகாரம் ORTHOGRAPHY

CHAPTER - 1. நூன்மரபு

OF LETTERS IN GENERAL AND THE ELEMENTARY PRINCIPLES OF LANGUAGE

1. எழுத்தெனப்படுப, அகரமுதல், னகரஇறுவாய்முப்பஃதென்ப, சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே. Nunnool எழுத்தியல். Sootrum 1,3,4. Ex. அ.ஆ.இ.ஈ.உ.ஊ.எ.ஏ.ஐ.ஒ.ஓ.ஔ– க்.ங்.ச்.ஞ்.ட்.ண்.த். ந்.ப்.ம்.ய்.ர்.ல்.வ். ழ்.ள்.ற்.ன்.
2. அவைதாம்; குற்றியலிகரம் குற்றியலுகரம், ஆய்தமென்ற முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன. Nunnool எழுத்தியல். Sootrum 5,6 See the First Seven Sootrums of the next Chapter
3. அவற்றுள்; அ இ உ எ ஒ என்னும் அப்பாலைந்தும், ஓரளபிசைக்கு ம்குற்றெழுத்தென்ப. Nunnool எழுத்தியல்,, Sootrum 9.
4. ஆ ஈ ஊ ஏ, ஐ ஓ ஔ என்னும் அப்பாலேழும், ஈரளபிசைக்கும் நெட்டெழுத்தென்ப. Nunnool எழுத்தியல். Sootrum 10
5. மூவளபிசைத்தல் ஓரெழுத்தின்றே. A remark upon Quantity.
6. நீட்டம்வேண்டின் அவ்வளபுடைய, கூட்டியெழூஉதல் என்மனார்புலவர், Nunnool எழுத்தியல். Sootrums 36, 37
7. கண்ணிமைநொடியென அவ்வேமாத்திரை, நுண்ணிதின் உணர்ந்தோர்கண்டவாறே. Nunnool எழுத்தியல். Sootrums 44,45 Definition of மாத்திரை.
8. ஔகார இறுவாய்ப், பன்னீரெழுத்தும் உயிரெனமொழிப. Nunnool எழுத்தியல். Sootrum 8.
9. னகாரவிறுவாய்ப், பதினெண்ணெழுத்தும் மெய்யெனமொழிப. Nunnool

எழுத்தியல். Sootrum 8.

10. மெய்யோடியையினும் உயிரியல் திரியா. Nun. எழுத்தியல். Soot.34. A remark upon Syllables or the Combination of vowels and consonants

11. மெய்யின் அளபே அரையெனமொழிப. Nun. எழுத். Soot.44.

12. அவ்வியல்நிலையும் ஏனைமூன்றே. Ex. கேண்மியா, நாகு, எஃகு. Nunnool எழுத்தியல். Sootrum 44.

13. அரையளபுகுறுகல் மகரமுடைத்தே, இசையிடன் அருகும் தெரியுங்காலை. Nunnool எழுத்தியல். Sootrum 41. Ex. போன்ம், வரும் வண்ணக்கன்.

14. உட்பெறு புள்ளி யுருவா கும்மே. Ex. ပ.ம. An unnecessary Rule as to the formation of certain two characters.

15. மெய்யின் இயற்கைபுள்ளியொடுநிலையல். Nun. எழுத் Soot.34.

16. எகரஒகரத் தியற்கையும்அற்றே. Nunnool எழுத்தியல். Sootrum எழுத்தியல், Sootrum 43. Ex. v.x.

17. புள்ளியில்லா எல்லாமெய்யும், உருஉருவாகி அகரமொடுயிர்த்தலும், ஏனையுயிரோடுருவுதிரிந்துயிர்த்தலும், ஆயீரியல உயிர்த்தலாறே. Nunnool எழுத்தியல். Sootrum 34. Definition of Vowel-Consonants.

18. மெய்யின்வழிய துயிர்தோன்றுநிலையே. Nunnool எழுத். Soot.34.

19. வல்லெழுத்தென்ப க ச ட த ப ற. Nunnool எழுத். Soot.13.

20. மெல்லெழுத்தென்ப ங ஞ ண ந ம ன. Nunnool எழுத். Soot.14.

21. இடையெழுத்தென்ப ய ர ல வ ழ ள. Nunnool எழுத். Soot 15

22. அம்மூவாறும் வழங்கியல்மருங்கின், மெய்ம்மயங்குடனிலை தெரியுங்காலை. Nunnool எழுத்தியல். Sootrum 55. Letter capable of going together in the middle of a word.

23. ட ற ல ள வென்னும் புள்ளிமுன்னர்க், க ச பவென்னு மூவெழுத்துரிய. Nunnool எழுத்தியல். Sootrum 58.

24. அவற்றுள்; லளஃகான்முன்னர் யவவுந்தோன்றும், Nunnool எழுத்தியல். Sootrum 62

25. ங ஞ ண ந ம ன எனும் புள்ளிமுன்னர்த், தத்தம்இசைகள் ஒத்தன நிலையே. Nunnool எழுத்தியல். Sootrum 56, 57, 59.

26. அவற்றுள்; ணனகான்முன்னர்க், கசஞபமயவவ் வேழும் உரிய. Nunnool எழுத்தியல். Sootrum 59

27. ஞ ந ம வ, என்னும் புள்ளிமுன்னர், யஃகான்நிற்றல் மெய்பெற்றன்றே. Nunnool எழுத்தியல். Sootrum 60

28. மஃகான்புள்ளிமுன் வவ்வுந்தோன்றும். Nunnool எழுத்தியல். Sootrum 60 See 35, of புள்ளிமயங்கியல் following. Ex. r«t‰ru«.

29. யரழ என்னும் புள்ளிமுன்னர், முதலாகெழுத்து ஙகரமொடுதோன்றும்.

Nunnool எழுத்தியல். Sootrum 64. Not in the Nunnool.

30. மெய்ந்நிலைசுட்டின் எல்லாவெழுத்தும், தம்முற்றாம்வரூஉம் ரழவ லங்கடையே. Nunnool எழுத்தியல். Sootrum 55. Ex. காக்கை, எங்ஙனம், பச்சை, மஞ்ஞை, பட்டை, மண்ணை, தத்தை, வெந்நெய், அப்பு, அம்மை, வெய்யர், எல்லி, எவ்வி, கள்ளி, கொற்றி, கன்னி, போன்ம், மருண்ம், See also Nunnool எழுத்தியல். Sootrums 64, 65

31. அ இ உ அம்மூன்றும்சுட்டு. Nunnool *எழுத்தியல். Sootrum* 11 Ex. அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன், அவன், அவள், அது, இவன், இவள், இது, அங்கே, இங்கே, &C. அவண், இவண், ஆங்கு, அங்ஙனம், ஆண்டு, ஈண்டு, &c.

32. ஆ ஏ ஒ அம்மூன்றும் வினா. Nunnool எழுத்தியல். Sootrum 12. Ex. உண்கா, உண்கே, உண்கோ. ஹளடி அவனா, சொன்னேனா, ஏவன், கொற்றனே, நானோ, சொன்னேனோ. &c.

33. அளபிறந்துயிர்த்தலும் ஒற்றிசைநீடலும், உளவெனமொழிப இசையொடு சிவணிய, நரம்பின்மறைய என்மனார்புலவர். Nunnool எழுத்தியல். *Sootrum 46. An Observation on Quantity connected with music. See* Sootrum 46. An lObservation on Quantity connected with music. *See Sootrum 17. மொழிமரபு. N.B. The Subdivisional parts given inh* the Second Soot. of the Nunnool vG¤ may be collected from the system of arrangement of the Chapters of Tholcapyan's Orthography.

CHAPTER - II. மொழிமரபு

OF LETTERS AS CONSTITUENT PARTS OF WORDS

1. குற்றியலிகரம் நிற்றல்வேண்டும், யாவென்சினைமிசை உரையசைக்கிளவிக், காவயின்வரூஉம் மகரமூர்ந்தே. *Nun.* எழுத். *Soot* 38. See also 1st and 2nd Soots, Chapter 1. Ex கேண்மியா, சென்மியா.

2. புணர்இயல் நிலையிடைக் குறுகலுமுரித்தே, உணரக்கூறின் முன்னர்த்தோன்றும். Nunnool எழுத்தியல். Sootrum 38. Tholcapyam குற்றி. Sootrum 5. These two Sootrums are put into one by Pavananti.

3. நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழியீற்றும், குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே. Nun எழுத்தியல். Soot 39. Thol. குற்றி. Sootrum 1.

4. இடைப்படின், குறுகும் இடனுமாருண்டே, கடப்பாடறிந்த புணரியலான. Tholcapyam ஊ குற்றி. Sootrum 4 Ex. செக்குக்கணை.

5. குறியதன்முன்னர் ஆய்தப்புள்ளி, உயிரொடுபுணர்ந்த வல்லாறன்

மிசைத்தே. Nun. எழுத். Soot.35. Ex. எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு, அஃது, இஃது, உஃது, அஃகம், அஃகாமை, அஃகி.

6. ஈறியன்மருங்கினும் இசைமைதோன்றும். Nun. எழுத். Soot.42. tholcapyam புள்ளி, Sootrums 74, 104. Ex. கஃறீது, முஃடீது.

7. உருவினும் இசையினும் அருகித்தோன்றும், மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தின்இயலா, ஆய்தமஃகாக் காலையான. A rule relating to Prosody. Ex. கஃஃறென்னும், சுஃஃறென்னும்.

8. குன்றிசைமொழிவயின் நின்றிசைநிறைக்கும், நெட்டெழுத்திம்பர் ஒத்தகுற்றெழுத்தே. Nunnool எழுத்தியல். Sootrum 36. Thol நூன் மரபு. Soot. 6. Also a rule for prosody. Ex. ஆ அ, ஈ இ, ஊ உ, &c,

9. ஐ ஔவென்னும் ஆயீரெழுத்திற், கிகரஉகரம் இசைநிறைவாகும். Nunnool எழுத்தியல். Sootrum 16. EX. ஐஇ, ஔஉ.

10. நெட்டெழுத்தேழே ஓரெழுத்தொருமொழி. Nunnool பதவியல். Sootrum 2. Ex ஆ–ஈ–ஊ–ஏ–ஐ–ஓ–கௌ.

11. குற்றெழுத்தைந்தும் மொழிநிறைபிலவே. Nunnool எழுத்தியல். Sootrum 53. Nunnool பதவியல். Sootrum 2.

12. ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழி, இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி உளப்பட, மூன்றேமொழிநிலை தோன்றியநெறியே. Nun. பதவியல். Sootrums 1,2. Read the comments upon this Sootrum by Siva Gnanamoonivan. Compare Sootrum 2. பெயரியல். Nunnool.

13. மெய்யின் இயக்கம்அகரமொடுசிவணும். Elakkanakotoo Pref.p.8.

14. தம்மியல்கிளப்பின் எல்லாவெழுத்தும், மெய்ந்நிலைமயக்கம் மானமில்லை. Nunnool எழுத்தியல். Sootrums 54, 55.

15. யரழவென்னும்மூன்றுமொற்றக், கசதபஙஞநமஈரொற்றாகும். Nunnool எழுத்தியல். Sootrum 64. Ex. வேய்க்க, வாய்ச்சி, பாய்த்தல், வாய்ப்பு: பீர்க்கு, நேர்ச்சி, வார்த்தல், ஆர்ப்பு: வாழ்க்கை, தாழ்ச்சி, தாழ்த்தல் தாழ்ப்பு: காய்ங்கனி, தேய்ஞ்சது, காய்ந்தனம், காய்ம்புறம்: நேர்ங்கல், நேர்ஞ்சிலை, நேர்ந்திலை, நேர்ம்புறம்: Also வாழ்ந்தனம், தாழ்ங்குலை, தாழ்ஞ்சினை, வீழ்ம்படை.

16. அவற்றுள்; ரகார ழகாரம் குற்றொற்றாகா. Nun. எழுத். Soot. 64. Ex. கார், வீழ்: கரு, மழு: புகர், புகழ்: These are contaries of the subject of the Sootrum and shew that there cannot be கர், கழ், &c.

17. குறுமையும் நெடுமையும் அளவிற்கோடலின், தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத்தியல. Ex. வருவர்கொல்வயங் கிழாஅய், foantfd§FHhmŒ, &c. Compare Soot. 33. ükuò. Not in the Nunnool.

18. செய்யுளிறுதிப்போலிமொழிவயின், னகாரமகாரம் ஈரொற்றாகும். Nunnool எழுத்தியல். Sootrum 65. Ex. போன்ம்.

19. னகாரைமுன்னர் மகாரங்குறுகும். Nun. எழுத். Soot. 41. Ex. போன்ம், மருண்ம். These are instances of abbreviation of the quanty of ம்.

20. மொழிப்படுத்திசைப்பினும், தெரிந்துவேறிசைப்பினும், எழுத்தியல் திரியா என்மனார்புலவர். Nun. எழுத். Soot. 72. Ex. அல், இல், உண்: ஆல், ஈர், ஊர்: கால், சீர், சூல்: கடம், கடாம், உடையரன், திருவாரூர், அகத்தியனார். &c. The mute consonants in these examples though to be reckoned in Orthography have no intrinsic value in Prosody.

21. அகர இகரம் ஐகாரமாகும். Nunnool, எழுத்தியல். Sootrum 70.

22. அகர உகரம் ஔகாரமாகும். Nunnool எழுத்தியல். Sootrum. 70.

23. அகரத்திம்பர் யகரப்புள்ளியும், ஐயெனெடுஞ் சினைமெய்பெறத் தோன்றும். Nunnool எழுத்தியல். Soot. 68,70 Ex. ஐவனம், அய்வனம்.

24. ஒரளபாகும் இடனுமாருண்டே, தேருங்காலை மொழிவயினான. Ex. ஐப்பசி, இடையன், கைப்பை. Relates to abbriveate ஐ.

25. இகர யகரம் இறுதிவிரவும். Ex. நாய், நாஇ. Obsolete.

26. பன்னீருயிரும்மொழிமுதலாகும். Nunnool எழுத்தியல். Sootrum 47. Vowel-Initils.

27. உயிர்மெய்யல்லன மொழிமுதலாகா. See Soot. 4,5. புணரியல்.

28. கதநபமவெனும் ஆவைந்தெழுத்தும், எல்லாஉயிரொடுஞ் செல்லுமார்முதலே. Nun. எழுத். Soot. 47. See the table of vowel consonants

29. சகரக்கிளவியும் அவற்றோரற்றே, அஐஔவெனு மூன்றலங்கடையே. N B. r has examples in modern Tamil as சறுக்கு, சையெனல், சௌரியம்.

30. உஊஒஓ என்னுநான்குயிர், வ என்னெழுத்தொடு வருதலில்லை. Nunnool எழுத்தியல். Sootrum 48.

31. ஆஎ, ஒஎனுமூவுயிர் ஞகாரத்துரிய. Nunnool எழுத்தியல். Soot.50.

32. ஆவோடல்லது யகரமுதலாது. Nunnool எழுத்தியல். Sootrum 47. Ex. யாடு, யானை.

33. முதலாவென தம்பெயர்முதலும். Nunnool எழுத்தியல். Sootrum 66. Ex. ஙக்களைந்தான், டப்பெரிது, &c.

34. குற்றியலுகரம் முறைப்பெயர்மருங்கின், ஒற்றியநகரமிசை நகரமொடுமுதலும், Ex. நுந்தை.

35. முற்றியலுகரமொடுபொருள்வேறுபடாஅ, தப்பெயர்மருங்கினிலையியலான. Prononuce சாது and நுந்தை observe the protrusion of the lips. But நுந்தாய் is முற்றியலுகரம்.

36. உயிர் ஔஎஞ்சிய இறுதியாகும். Nunnool எழுத்தியல். Sootrum 52, Vowel-Finals

37. கவ்வோடியையின் ஔவுமாகும். Nunnool எழுத்தியல். Sootrum 53. Ex. கௌ, வௌ.

38. எ எனவருமுயிர் மெய்யீறாகாது. Nunnool எழுத்தியல். Soot. 53.

39. ஒவ்வும்அற்றே நவ்வலங்கடையே. Nunnool எழுத்தியல். Sootrum 53 Ex. நொ அலையனின்னாட்டை நீ.

40. எ ஒ எனுமுயிர் ஞகாரத்தில்லை. Ex. உரிஞ, உரிஞா, உரிஞி, உரிஞீ, உரிஞு, உரிஞூ.

41. உ ஊகாரம் நவவொடுநவிலா. Ex. பொருந், நா, நீ, நே, நை, நொ, ஹடளடி பொருளை, உவ, வே, உவா, செவ்வி, வீ, வை ஒருவ, ஒருவா, ஒருவி, ஒருவீ, ஔவை; ஹடளடி கதவு, துரவு, புணர்வு, குலவு, நொவ்வு, நுகர்வு. These latter are modern words not in use in the days of Tholcapyan

42. உச்சகாரம் இருமொழிக் குரித்தே. Ex. cR. An insect causing rottenner; KR, a species of quadumana gR being sanscrit is not included

43. உப்பகாரம் ஒன்றெனமொழிப, இருவயின்நிலையும் பொருட்டாகும்மே. Ex. தபு. Many in modern days, as படிப்பு, முடிபு, &c

44. எஞ்சிய எல்லாம் எஞ்சுதலிலவே. Ex. வருக.புகா–வீக்கி–புகீ. செரு–கூ. ஈங்கே–மங்கை–எங்கோ கட்ட. கடா–மடி–மடீ–மடு–படு–படை: மண்ண–எண்ணா–கண்ணி–உண்ணி–நணு–நண்ணு–பண்ணை: அத–புதா–பதி–வதீ–அது–கைதூ–தந்தை–அந்தோ: கம–நென்மா–அம்மி–மீ–செம்மு–கொண்மூ–யாமை–காத்தும்வம்மோ: செய–காயா–கொய்யூ–ஐயை–ஐயோ: வரதாரா–பரி–குரீ–கரு வெரூ–நாரை: சில–பலா–வலி–வலு–வலீ–கொல்லூ–வல்லே–கலை: தொழ–விழா–நாழி–வழீ–மழு–எழு–தாழை: உள–உள்ளா–வெள்ளி–குளீ–உளு–எள்ளூ–களை கற்ற–கற்றா–உறி–உறீ–மறு–உறூ–கற்றை–எற்றோ: நன–சனா–வன்னி–துனீ–முன்னு–துன்னூ–ஏன்னே–அன்னை–அன்னோ:

45. ஞணநமனயரலவழள என்னும், அப்பதினொன்றே புள்ளியிறுதி. Nunnool எழுத்தியல். Sootrum 52. Consonant-Finals.

46. உச்சகாரமொடு நகாரஞ் சிவணும். Ex. பொருந், வெரிந்.

47. உப்பகாரமொடு ஞகாரையும் அற்றே, அப்பொருளிரட்டா திவணையான. Ex உரிஞ்.

48. வகரக்கிளவி நான்மொழியீற்றது. Ex. அவ், இவ், உவ், யனே தெவ்.

49. மகரத்தொடர்மொழி மயங்குதல்வரைந்த, னகரத்தொடர் மொழி ஒன்பஃதென்ப, புகாறக்கிளந்த அஃறிணைமேன. Nunnool எழுத்தியல். Sootrum 67. Ex. எகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான். நிலம், நிலன்; பிலம், பிலன்; குலம், குலன்; வளம் வளன்.

CHAPTER - III. பிறப்பியல்
ARTICULATION OF LETTERS

1. உந்திமுதலாமுந்துவளிதோன்றித், தலையினுமிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப், பல்லுமிதழு நாவுமூக்கும், அண்ணமு முளப்பட வெண்முறைநிலையான், உறுப்புற்றமைய நெறிப்படநாடி, எல்லா வெழுத்துஞ் சொல்லுங்காலைப், பிறப்பினாக்கம் வேறுவேறியல, திறப்படத்தெரியுங் காட்சியான. Nunnool எழுத்தியல். Sootrum 19. Pronunciation of letters.

2. அவ்வழி; பன்னீருயிருந்தந்நிலைத்திரியா, மிடற்றுப்பிறந்த வளியின் இசைக்கும். Nunnool எழுத்தியல். Sootrum 20.

3. அவற்றுள், அஆ ஆயிரண்டங்காந்தியலும். Nun. எழுத். Soot. 21.

4. இஈஎஏஐயெனஇசைக்கும், அப்பாலைந்தும் அவற்றோரன்ன: அவை தாம், அண்பன் முதல்நாவிளிம்புறலுடைய, Nunnool எழுத். Soot 22

5. உஊஒஓ ஔவெனவிசைக்கும், அப்பாலைந்து மிதழ்குவிந்தியலும், Nunnool எழுத்தியல். Sootrum 23

6. தத்தந்திரிபே சிறியவென்ப. Deviations. Nunnool எழுத்தியல். Sootrum 33.

7. ககார ஙகாரம் முதனாவண்ணம். Nunnool எழுத். Soot.24.

8. சகார ஞகார மிடைநாவண்ணம். Nunnool எழுத். Soot.24.

9. டகார ணகாரம் நுனிநாவண்ணம். Nunnool எழுத். Soot.24.

10. அவ்வாறெழுத்தும் மூவகைப்பிறப்பின. An Observation on the above three Sootrums

11. அண்ணநண்ணிய பன்முதன்மருங்கின், நாநுனிபரந்து மெய்யுறவொற்றத், தாமினிதுபிறக்கும் தகாரநகாரம். Nunnool எழுத். Soot. 25.

12. அணரிநுனிநா அண்ணமொற்ற, றஃகா னஃகானா யிரண்டும் பிறக்கும். Nunnool எழுத்தியல். Sootrum 31

13. நுனிநாவணரி யண்ணம் வருட, ரகாரழகாரமா யிரண்டும் பிறக்கும். Nunnool எழுத்தியல். Sootrum 28.

14. நாவிளிம்புவீங்கி யண்பன்முதலுற, ஆவயினண்ணம் ஒற்றவும் வருடவும், லகாரளகாரமா யிரண்டும்பிறக்கும். Nunnool எழுத். Soot.29.

15. இதழியைந்து பிறக்கும் பகாரமகாரம். Nunnool எழுத். Soot.26.

16. பல்லிதழியைய வகாரம் பிறக்கும். Nunnool எழுத். Soot 30.

17. அண்ணஞ்சேர்ந்த் மிடற்றெழுவளியிசை, கண்ணுற்றடைய யகாரம் பிறக்கும். Nunnool எழுத்தியல். Sootrum 27.

18. மெல்லெழுத்தாறும் பிறப்பினாக்கம், சொல்லியபுள்ளி நிலையின வாயினும், மூக்கின்வளியிசை யாப்புறத்தோன்றும். Nun. எழுத்.Soot.20.

19. சார்ந்துவரினல்லது தமக்கியல்பிலவெனத், தேர்ந்துவெளிப் படுத்த வேனைமூன்றும், தத்தஞ்சார்பிற் பிறப்பொடுசிவணி, ஒத்த காட்சியில்தம் மியல்பியலும். Nunnool எழுத்தியல். Sootrum 32.

20. எல்லாவெழுத்தும் வெளிப்படக்கிளந்து, சொல்லியபள்ளி யெழுதருவளியிற், பிறப்பொடுவிடுவழி யுறழ்ச்சிவாரத், தகத்தெழுவளி யிசையரில்தபநாடி, யளபிற்கோட லந்தணர் மறைத்தே, அஃதி வணுவலா தெழுந்து புறத்திசைக்கும், மெய்தெரிவளியிசை யளபு நுவன் றிசினே. Nun. எழுத்.33.

N.B. Pronunciation of ordinary Letter-sounds as distinguished from Vedik sounds.

CHAPTER - IV. புணரியல்

PRINCIPAL OF COMBINATION AND TERMINOLOGY

N.B. Combination includes not only Sandhi but also Syntax Tholcapyan has in this Chapter laid down all the fundamental and preliminary Rules of புணர்ச்சி together, in one view. The following Sootrums are abridged in the Nunnool by Pavananti into, of which, உயிரீற்றுப்புணரியல் has 7 as introductory rules, மெய்யீற்றுப் புணரியல் 2, and உருபுபுணரியல் 5.

1. மூன்று தலையிட்ட முப்பதிற்றெழுத்தின், இரண்டு தலையிட்ட முதலாகிருபஃ, தறுநான்கீறொடுநெறிநின்றியலும், எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும், மெய்யே உயிரென் றாயீரியல. Nunnool உயிரீ. 1 Ex மரம், இலை, ஆல், விள.

2. அவற்றுள்: மெய்யீறெல்லாம் புள்ளியொடுநிலையல். Thol. நூன் மரபு.15. Ex. பொன், மெய், வேர் &c. Hence மெய்ம்முதலெல்லா முயிர்மெய்யாகும். Ex. காரியம், காதம். &c.

3. குற்றியலுகரமும் அற்றெனமொழிப. Ex. நாகரிது See 1st Sootrum மெய்யீற்றுப்புணரியல் Nunnool.

4. உயிர்மெய்யீறும் உயிரீற்றியற்றே. Nun. உயிரீ.1 Ex.விள, பலா &c.

N.B. On this Sootrum depends the following the least complicated

portion of புணர்ச்சி. The contrary of this Sootrum உயிர்மெய்ம்முதல் கண் மெய்ம்முதலிய ல, ளை also true.

5. உயிரிறுசொல்முன் உயிர்வருவழியும், உயிரிறுசொன்முன் மெய்வரு வழியும், மெய்யிறுசொன்முன் உயிர்வருவழியும், மெய்யிறுசொன்முன் மெய்வருவழியுமென், றிவ்வென அறியக் கிளக்குங்காலை, நிறுத்த சொல்லே குறித்துவருகிளவியென் றாயீரியல புணர்நிலைச்சுட்டே Nun. உயிர்.1

6. அவற்றுள்; நிறுத்த சொல்லின் ஈறாகெழுத்தொடு, குறித்து வருகிளவி முதலெழுத்தியையப் பெயரோடு பெயரைப் புணர்க்குங்காலும், பெயரொடு தொழிலைப் புணர்க்குங்காலும், தொழிலோடு பெயரைப் புணர்க்குங்காலும், தொழிலோடு தொழிலைப் புணர்க்குங்காலும், முன்றேதிரிபுடன் ஒன்றே இயல்பென, ஆங்கந்நான்கே மொழி புணரியல்பே, Nunnool உயிரீ. 1, 3, 4. General definitions புணர்ச்சி

7. அவைதாம்; மெய்பிறிதாதல் மிகுதல் குன்றலென் றிவ்வென மொழிப திரியுமாறே. Nunnool உயிரீ.4. The three Mutations.

8. நிறுத்தசொல்லும் குறித்துவருகிளவியும், அடையொடு தோன்றினும் புணர்ச்சி நிலைக்குரிய. Ex பதினாயிரத்தொன்று, உண்ட சாத்தன் வந்தான்: Not in the Nunnool. See Thol. வேற்றுமையியல். Sootrum 6.

9. வன்றொடர்மொழியும் மென்றொடர்மொழியும், வந்தவல் லெழுத் தொற்றிடைமிகுமே மெல்லொற்றுத்தொடர் மொழிமெல்லொற் றெல்லாம், வல்லொற்றிறுதி கிளையொற் றாகும். Ex. கொக்குக்கால், எட்குக்குட்டி. குரங்குக்கால், குரக்குக்கால், அற்புத்தளை, ஏற்புக்காடு.

10. மரப்பெயர்க்கிளவிக் கம்மேசாரியை. Ex. தேக்கங்கோடு, கமுகங்காய், தெங்கங்காய், சீழ்கம்புல், கம்பம்புலம், பயற்றங்காய்.

11. மெல்லொற்றுவலியா மரப்பெயருமுளவே. Ex. புனகஞ்செதிள்.

12. ஈரெழுத்துமொழியும் வல்லொற்றுத்தொடரும், அம்மிடை வரற்கு முரியவை யுளவே, அம்மரபொழுகும் மொழிவயினான. Ex. ஏறங்கோள், சூதம்போர், வட்டம்போர், புற்றம்பழஞ்சோறு, அரசக்கன்னி, முரசக்கடிப்பு.

13. ஒற்றுநிலைதிரியாதக்கொடுவரூஉம், அக்கிளைமொழியும் உளவென மொழிப. Ex. குன்றக்கூகை, மன்றப்பெண்ணை, கொங்கத்துழவு, வங்கத்துவாணிபம்.

14. எண்ணுப்பெயர்க்கிளவிஉருபியல்நிலையும். Ex. ஒன்றன்காயம், இரண்டன்சுக்கு, ஒன்றன்ஞாண், இரண்டன்யாழ், &c.

15. வண்டும்பெண்டும் இன்னொடுசிவணும். Ex. வண்டின்கால், பெண்டின்கால். Individual instance.

16. பெண்டென்கிளவிக் கன்னும்வரையார். Ex. பெண்டன்கை.

17. யாதெனிறுதியுஞ் சுட்டுமுதலாகிய, ஆய்தவிறுதியும் உருபியல்நிலையும். Ex. யாதன்கோடு, அதன்கோடு, &c.

18. முன்னுயிர் வரும்இடத்தாய்தப்புள்ளி, மன்னல்வேண்டும் அல்வழி யான. Ex. அஃதாடை, அஃதொடுக்கம், அஃதடை, அஃதொட்டுக, &c.

19. ஏனைமுன்வரினேதான்நிலையின்றே. Ex. அதுகடிது, இதுஞான்றது, &c.

20. அல்லதுகிளப்பின் எல்லாமொழியுஞ், சொல்லியபண்பின் இயற்கையாகும். Inasual Combination Ex. நாகுகடிது, வரகுசிறிது, தெள்குதீது, எஃகுபெரிது, குரங்குபெரிது. Also, கிடந்ததுகுதிரை, கரிதுகுதிரை, காட்டுக்கானம், குருட்டுக்கோழி, திருட்டுப்புலையன், களிற்றுப்பன்றி, வெளிற்றுப்பனை, எயிற்றுப்பல், வரட்டாடு, குருட்டெருது, ஓர்யாட்டையானை, ஐயாட்டையெருது, அற்றைக்கூத்தர், இற்றைக்கூத்தர், மன்றைத்தூதை, மன்றைப்பானை, பண்டைச் சான்றோர்.

21. வல்லொற்றுத்தொடர்மொழி வல்லெழுத்துமிகுமே. Ex. கொக்குக் கடிது, பக்குச்சிறிது, &c.

22. சுட்டுச்சினைநீடிய மென்றொடர்மொழியும், யாவினாமுதலிய மென்றொடர்மொழியும், ஆயியல்திரியா வல்லெழுத்தியற்கை. Ex ஆங்குக்கொண்டான், யாங்குச்சென்றான்.

23. யாவினாமொழியே இயல்புமாகும். Ex. யாங்குகொண்டான், &c.

24. அந்நால் மொழியும் தம்நிலைதிரியா. Hence also, முந்து கொண்டான்,பண்டுசென்றான், இன்று தந்தான் அன்றுபோயினாள், என்று தொட்டு.

25. உண்டென்கிளவி உண்மைசெப்பின் முந்தையிறுதி மெய்யொடுங் கெடுதலும், மேனிலைஒற்றே ளகாரமாதலும், ஆமுறையிரண்டும் உரிமையுமுடைத்தே, வல்லெழுத்து வரூஉங் காலையான. Ex. உள்பொருள் உண்டுபொருள்:

26. இருதிசைபுணரின் ஏஇடைவருமே தெற்கேவடக்கு, கிழக்கேமேற்கு. See 36. உயிரீற்றுப்புணரியல், Nunnool.

27. திரிபுவேறுகிளப்பின் ஒற்றும்உகரமுங், கெடுதல்வேண்டும் என்மனார்புலவர், ஒற்றுமெய்திரிந்து னகாரமாகுந், தெற் கொடு புணருங்காலையான. Ex. வடகிழக்கு, வட்மேற்கு, தென்கிழக்கு, தென் மேற்கு, வடகடல், வடசுரம், வடவேங்கடம், தென்குமரி, தென்சுரம், தென்னிலங்கை.

28. ஒன்றுமுதலாக எட்டனிறுதி, எல்லாவெண்ணும் பத்தன்முன் வரின், குற்றியலுகர மெய்யொடுங்கெடுமே, முற்ற இன்வரூஉம் இரண்டலங் கடையே. Ex. பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு, &c. See 38 உயிரீற்றுப்புணரியல், Nunnool

29. பத்தனொற்றுக்கெட னகரமிரட்டல், ஒத்ததென்ப இரண்டு வருகாலை. Ex. பன்னிரண்டு. Nunnool உயிரீற்றுப் புணரியல், 48.

30. ஆயிரம்வரினும் ஆயியல்திரியாது. Ex. பதினாயிரம். Nun. உயிரீ. 48.

31. நிறையுமளவும் வரூஉங்காலையுங், குறையாதாகும் இன்னென் சாரியை. Ex. பதின்கழஞ்சு, பதின்கலம், பதிற்றுழக்கு.

32. ஒன்றுமுதல் ஒன்பானிறுதிமுன்னர், நின்றபத்தன் ஒற்றுக்கெட ஆய்தம், வந்திடைநிலையு மியற்கைத்தென்ப, கூறியவியற்கை குற்றியலுகரம், ஆறனிறுதி அல்வழியான. See the Examples under Soots following.

33. முதலீரெண்ணின் ஒற்றுகரமாகும், உகரம் வருதல் ஆவயினான. Ex. ஒருபஃது. Individual.

34. இடைநிலைரகர மிரண்டனெண்ணிற்கு, நடைமருங் கின்றே பொருள்வயினான. Ex. இருபஃது. Nunnool உயிரீற்றுப் புணரியல் 39. இருகடல் இருவினை, இருபிறப்பு. Individual..

35. மூன்றும் ஆறும் நெடுமுதல்குறுகும். Nun. உயிரீ. 38. Ex. முக்கால், அறுபஃது.

36. மூன்றனொற்றே பகாரமாகும். Nun. உயிரீ. 40. Ex. முப்பஃது.

37. நான்கனொற்றே றகாரமாகும். Nun. உயிரீ. Ex. 41. நாற்பது.

38. ஐந்தனொற்றே மகாரமாகும். Nunnool. உயிரீ. 42. Ex. ஐம்பது.

39. எட்டனொற்றே ணகாரமாகும். Nunnool உயிரீ. 43. எண்பது.

40. ஒன்பானொகரமிசைத்தகரமொற்றும், முந்தையொற்றே ணகார மிரட்டும், பத்தென்கிளவியாய்தபகரங்கெட, நிற்றல்வேண்டு முகாரக் கிளவி, ஒற்றியதகரம் றகரமாகும். Ex தொண்ணூறு, Nunnool உயிரீ. 44.

41. அளந்தறிகிளவியும் நிறையின்கிளவியுங், கிளந்தஇயல் தோன்றுங் காலை. Ex. ஒருகலம், இருசாடி, இருகழஞ்சு, ஒருமூன்று. Individual

42. மூன்றனொற்றே வந்ததொக்கும். Ex. முத்தொடி, முக்கலம், &c.

43. ஐந்தனொற்றே மெல்லெழுத்தாகும். Ex ஐங்கலம், ஐஞ்சாடி, &c.

44. கசதப முதன்மொழி வரூஉங்காலை. Ex. அறுகலம், அறுசாடி, அறுதொடி, அறுபானை, அறுநாழி, அறுவட்டி. Individual.

45. ந ம வ என்னும் மூன்றொடுசிவணி, அகரம்வரினு மெட்டன் முனியல்பே. Ex எண்ணாழி, எண்மண்டை, எண்வட்டி: Also, எண்கலம், &c

46. ஐந்தும்மூன்றும் நமவருகாலை, வந்ததொக்கும் ஒற்றியனிலையே. Ex. ஐந்நாழி, ஐம்மண்டை, முந்நாழி, மும்மண்டை. Individual.

47. மூன்றனொற்றே வகரம்வருவழித், தோன்றிய வகரத்துருவாகும்மே. Ex. முவ்வட்டி, மூவட்டி. Individualk Instance.

48. நான்கனொற்றே லகாரமாகும். Ex. நால்வட்டி. Individual.

49. ஐந்தனொற்றே முந்தையதுகெடுமே. Ex. ஐவட்டி; ஐவ்வட்டி.

50. முதலீரெண்ணின்முன் உயிர்வருகாலைத், தவ்லெனமொழிப உரகக் கிளவி, முதனிலைநீடல் ஆவயினான. Ex. ஓரகல், ஈரகல், ஒருழக்கு, ஈருழக்கு. Individual Instance.

51. மூன்றும் நான்கும் ஐந்தென்கிளவியுந், தோன்றியவகரத் தியற்கையாகும். Ex. முவ்வகல், முவ்வுழக்கு, நாலகல், நாலுழக்கு, ஐயகல், ஐயுழக்கு. Individual Instance

52. மூன்றன்முதனிலைநீடலுமுரித்தே, உழக்கென்கிள விவழக்கத்தான. Ex. மூவுழக்கு, மூவகல்: Also, மூவாழாக்கு. Individual

53. ஆறென்கிளவி முதல்நீடும்மே. Ex. ஆறகல், ஆறுழக்கு.

54. ஒன்பானிறுதி யுருபுநிலைதிரியா, தின்பெறல்வேண்டுஞ் சாரியைமொழியே. Ex. ஒன்பதின்கலம், &c. Individual.

55. நூறுமுன்வரினும் கூறியவியல்பே. Ex ஒரு நூறு, இருநூறு, அறுநூறு, எண்ணூறு. Individual.

56. மூன்றனொற்றே நகாரமாகும். Ex. முந்நூறு. Individual.

57. நான்குமைந்தும் ஒற்றுமெய்திரியா. Ex. நானூறு, ஐந்நூறு.

58. ஒன்பான்முதனிலை முந்துகிளந்தற்றே, முந்தையொற்றே ளகாரமிரட்டும், நூறென்கிளவி நகாரமெய்கெட, ஊ ஆவாகு மியற்கைத்தென்ப, ஆயிடைவருத லிகரரகரம், ஈறுமெய்கெடுத்து மகரமொற்றும். Ex. தொள்ளாயிரம். Nunnool உயிரீற்றுப்புணரியல், 44. Individual.

59. ஆயிரக்கிளவி வரூஉங்காலை, முதலீரெண்ணின் உகரங்கெடுமே. Ex. ஓராயிரம், இராயிரம். Nunnool உயிரீற்றுப்புணரியல், 47. Individual.

60. முதனிலைநீடினு மானமில்லை. Ex ஓராயிரம், ஈராயிரம். Ind

61. மூன்றனொற்றே வகாரமாகும். Ex. முவ்வாயிரம். Individual.

62. நான்கனொற்றே லகாரமாகும். Ex. நாலாயிரம், Individual.

63. ஐந்தனொற்றே யகாரமாகும். Ex. ஐயாயிரம். Individual.

64. ஆறன்மருங்கிற் குற்றியலுகரம், ஈறுமெய்யொழியக் கெடுதல்வேண்டும். Ex. அறாயிரம், Also, ஆறாயிரம். Individual

65. ஒன்பான்இறுதி உருபுநிலைதிரியா, தின்பெறல்வேண்டும் சாரியை மரபே. Ex. ஒன்பதினாயிரம், ஒன்பதிற்றுக்கோடி, ஒன்பதிற்றெழுத்து.

66. நூறாயிரமுன்வரூஉங்காலை, நூறனியற்கை முதனிலைக் கிளவி. Ex ஒருநூறாயிரம், இருநூறாயிரம், இரண்டு நூறாயிரம், முந்நூறாயிரம்,

மூன்று நூறாயிரம், நானூறாயிரம், நான்குநூறாயிரம், ஐந்நூறாயிரம், ஐந்து நூறாயிரம். Individual.

67. நூறென்கிளவி யொன்றுமுதலொன்பாற், கிறுசினையொழிய இனவொற்றுமிகுமே. Ex. நூற்றொன்று, நூற்றுக்கால் மண்டபம். Individual.

68. அவையூர்பத்தினு மத்தொழிற்றாகும். Ex நூற்றொருபஃது, நூற்றிரு பஃது, ஒருநூற்றொருபஃது, இருநூற்றொருபஃது. Individual.

69. அளவும்நிறையும் ஆயியறிரியா, குற்றியலுகரமும் வல்லெழுத் தியற்கையும், முற்கிளந்தன்ன வென்மனார்புலவர். Ex. நூற்றுக்கலம், நூற்றுநாழி, நூற்றுக்கழஞ்சு ஒரு நூற்றுக்கலம், இருநூற்றுக்கலம். Individual.

70. ஒன்றுமுதலாகிய பத்தூர்கிளவி, ஒன்றுமுதலொன்பாற் கொற்றிடை மிகுமே, நின்ற ஆய்தங்கெடுதல் வேண்டும். Ex. ஒருபத்தொன்று, இருபத்திரண்டு, Also, ஒருபத்தொன்று, ஒருபத்திரண்டு. Individual

71. ஆயிரம்வரினே இன்னெனன்சாரியை, ஆவயின்ஒற்றிடை மிகுதலில்லை. Ex ஒருபதினாயிரம்: நூறாயிரத்தொரு பத்தீராயிரம். Individual

72. அளவும்நிறையும் ஆவியறிரியா. Ex. ஒருபதின்கலம், ஒருபதின்கழஞ்சு. Individual Instance.

73. முதனிலையெண்ணின்முன் வல்லெழுத்துவரினும், ஞநமத்தோன்றினும் யவ வந்தியையினும், முதனிலை யியற்கை யென்மனார்புலவர். Ex. ஒருகல், இருசுனை, இரண்டுதுடி, முக்கல், மூன்றுகல், நாற்கல், நான்குகல், ஐங்கல், ஐந்துகல், அறுசுனை, ஆறுசுனை எண்பறை, எட்டுநூல், ஒன்பதுகல், ஒன்பதின்கல். Individual

74. அதனிலையுயிர்க்கும்யாவருகாலை, முதனிலையொகர மோவாகும்மே, நுகரத்துகரந் துவரக்கெடுமே. Ex. ஓரடை, ஓரிலை, ஓர்யாழ்: ஈரசை, ஈர்யானை, மூவசை, மூயானை. Individual.

75. இரண்டுமுதல்ஒன்பான் இறுதிமுன்னர், வழங்கியன் மாவென்கிளவி தோன்றின், மகரஅளவொடுநிகரலுமுரித்தே. Ex இருமா, மும்மா, &c.

76. லனவெனவரூஉம் புள்ளியிறுதிமுன், உம்முங்கெழுவும் உளப்படப் பிறவு, மன்னமரபின் மொழியிடைத்தோன்றிச், செய்யுட்டொடர்வயின் மெய்பெறநிலையும், வேற்றுமைகுறித்த பொருள்வயினான. Ex. வானவரிவில்லுந்திங்களும்போலும்; கல்கெழுகானவர் நல்குறுமகளே; மாநிதிக்கிழ்வனும் போன்ம்; கான்கெழுநாடு; பனைகெழுபெருந்திறற் பல்வேன் மன்னர்துறை கெழுமாந்தை; வளங்கெழுதிருநகர்; பயங்கெழு மாமறை; பூக்கேழ்தொடலை நுடங்கவெழுந்து, துறைகேழுரன் கொடுமை நாணி; செங்கேழ்மென் கொடி. Individual Instances

77. உயிரும்புள்ளியும் இறுதியாகிக் குறிப்பினும்பண்பினும் இசையினுந்தோன்றி, நெறிப்படவாராக் குறைச்சொற் கிளவியும், உயர்திணை அஃறிணை ஆயிருமருங்கின், ஐம்பாலறியும் பண்பு தொகுமொழியுஞ் செய்யுஞ்செய்த வென்னுங்கிளவியின், மெய்யொருங் கியலுந் தொழில்தொகு மொழியுந், தம்மியல்கிளப்பின் தம்முற்றாம்வருஉ, மெண் ணின் றொகுதியுளப்படப்பிறவு மன்வை யெல்லா மருவின்பாத்திய, புணரியனிலையிடை யுணரத்தோன்றா. Ex. கண்விண்ணவிணைத்தது, விண் விணைத்தது, ஆடை வெள்ள விளர்த்தது, வெள்விளர்த்தது, கடலொல்ல வொலித்தது, ஒல்லொலித்தது, கரும்பார்ப்பான், கரும்பார்ப்பினி, கரும்பார்ப்பார், கருங்குதிரை, வெற்றிலை, வெற்றுப்புலி, வெற்றடி, வெற்றெனத் தொடுத்தல், ஆடரங்கு, செய்குன்று, புணர்பொழுது அரிவாள் கொல்யானை, செல்செலவு; பப்பத்து, பஃபத்து, ஒரொன்று.

78. கிளந்தஅல்ல செய்யுளுள்திரிநவும், வழங்கியன்மருங்கின் மருவொடு திரிநவும், விளம்பியவியற்கையின் வேறுபடத் தோன்றின், வழங்கியன் மருங்கின் உணர்ந்தன ரொழுக்கல், நன்மதிநாட்டத் தென்மனார் புலவர். Nunnool உருபு புணரியல், 18. தடவுத்திரை, தடவுநிலை, அதவத்தங்கனி, நறவங்கண்ணிநற் போர்ச்செம்பியன் குரவநீடிய கொன்றையங் கானல்; முழவுமா தொலைச்சிய பைந்நிணப் பிளவைப் பிணவுநாய்முடுக்கிய தடியொடு விரைஇ; திண்வளிவிசித்த முழவொடாகுளி, சுறவெறிமீன், இரவழங்கு சிறுநெறி, கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை, தீயினன்ன வெண்செங்காந்தள், நல்லொழுக் கங்காக்குந் திருவத்தவர், ஏப்பெற்றமான்பிணை போல, கைத்துண்டாம் போழ்தே, கைத்தில்லர் நல்லர், புன்னையங் கானல், முல்லையந்தொடை, அண்ணல்கோயில் வண்ணமே, அஞ்செவி நிறையவாலின், மரவம்பாவைவயிறாரப்பருகி, மரவநாகம் வணங்கி மாற்கனம், காரெதிர்கானம் பாடினேமாக, பொன்னந்திகிரிமுன் சமைத்துருட்டி, பொன்னங்குவட்டிற் பொலிவெய்தி, வேர்பிணி வெதிர்த்துக் கால்பொருநாவிசை, நாவலந்தண்பொழில், கானலம் பெருந்துறை, நெய்தலஞ் சிறுபறை, ஆயிடையிருபேராண்மை செய்தபூசல், தெம்முனை, முதிர்கோங்கின்முகை, காய்மாண்ட தெங்கின்பழம், தொண்டுதலையிட்ட பத்துக்குறை, அருமந்தன் (அருமருந்தன்னான்), சோழநாடு (சோழனாடு), பாண்டியநாடு, (பாண்டியனாடு), தொண்டைநாடு, (தொண்டைமானாடு), மலாடு, (மலையமானாடு), பொதியில், (பொதுவில்) In this Chapter which should folow immediately after the உயிர்மயங்கியல், as an Appendix to it, all the Rules are exceptional to the 52d Sootrum of that இயல். It is usual with Tamil authors to put last, i.e. at the end of their works , such and such Supplementary Rwemarks and Exceptional Sectoins as may seem to them necessary These they gnerally denominate ஒழிபியல் or எச்சவியல்: but Tholcapyan here calls his Supplement by the Name of the subject itself, of which it treats, becasue of

its importance and the length to which it runs. See the 9th Chapter of the next Book, Etymology: Also the 9th Chapter, மரபியல், of the 3rd Book, or Grammar of General Knowledge.

MEMORANDA

BOOK - I, PART - I

The எழுத்ததிகாரம் of Tholcapyan in divided into 9 Chapters viz., 1. நூன்மரபு, Foundatoin of Science, i.e. The First Principles of Literature. 2. மொழிமரபு, The Make or Constructionof words. 3. பிறப்பியல், Articulation of Pronunciatoin of letters: These three are termed கருவி Instrumental or Conducixe 4. புணரியல், The First Rules or Rudiments of Sandhi. 5. தொகைமரபு, General Rules forming an Abstract of Sandhi. 6. உருபியல், Sandhi in the declension of Nouns: These theree are also termed கருவி and are to the following three Chapters, what the first three are to the whole Book. 7. உயிர்மயங்கியல், Sandhi of Vowel Endings. 8. புள்ளிமயங்கியல், Sandhi of Consonant Endings; 9. குற்றியலுகரப்புணரியல், Sandhi of Abbreviate உ.

The practical tendency of this Book is to explain புணர்ச்சி, Syntax and Euphony Combined. புணர்ச்சி சந்தி முடிபு தொகை தொடர், are all synonymous, and signify sentence of phrase. The nature of the Tamil language is such, that the Synatx of words cannot exist without a Syntax, so to speak, of Letters. Sandhi is therefore twofold, viz., Sandhi or Syntax Virtual and Sandhi or Syntax Verbal. Under the latter are இயல்புபுணர்ச்சி and விகாரப்புணர்ச்சி; and subdivisions of t he former are வேற்றுமைப்புணர்ச்சி and அல்வழிப்புணர்ச்சி. The latter are more or less influencedd and affected by the former, but do not absolutely depend upon them. Read, 5, 6, 7, 10, 11, of புணரியல்: Also 1, 2, 3, 4, of உயிரீற்றுப்புணரியல். See like wise the 31 st and 32nd Sootrums of ஒழிபியல் in the இலக்கணக்கொத்து.

There are 483 Sootrums in the Book, viz , 1. நூன்மரபு, 33. 2. மொழிமரபு, 49. 3. பிறப்பியல், 20. 4. புணரியல், 40. 5. தொகைமரபு, 30. 6. உருபியல், 30. 7. உயிர்மயங்கியல், 93. 8.புள்ளிமயங்கியல், 110. 9. குற்றியலுகரப்புணரியல், 78.

AN ABSTRACT OF THE WHOLE ORTHOGRAPHY

1. Letters. எழுத்தெனப்படுப, அகரமுதல் னகரஇறுவாய் முப்பஃ தென்ப, சார்ந்துவரல்மரபின் மூன்றலங்கடையே (1st Soot. நூற்மரபு).

2. Words.-ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழி ஈரெழுத்தொரு மொழி, இரண்டிறந்திசைக்குந் தொடர்மொழியுளப்பட, மூன்றேமொழி நிலை தோன்றிய நெறியே. (12th Sootrum, மொழிமரபு.)

3. Syntax Verbal. உயிரிறுசொன்முன் உயிர்வருவழியும், உயிரிறு சொன்முன் மெய்வருவழியும், மெய்யிறுசொன்முன் உயிர்வருவழியும், மெய்யிறுசொன்முன் மெய்வருவழியுமென், றிவ்வென அறியக் கிளக்குங் காலை, நிறுத்தசொல்லே குறித்துவருகிளவியென், றாயீரியல புணர்நிலைச் சுட்டே. (5th Sootrum, புணரியல்.)

4. அவற்றுள்; நிறுத்தசொல்லின் ஈறாகெழுத்தோடு, குறித்துவருகிளவி முதலெழுத்தியையப், பெயரொடு பெயரைப் புணர்க்குங்காலும், பெயரொடு தொழிலைப் புணர்க்குங்காலும், தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும், தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும், மூன்றேதிரிபிடனொன்றே இயல்பென, ஆங்கந் நான்கே மொழிபுணரியல்பே. (6th Sootrum of புணரியல்.)

5. அவைதாம், மெய்பிறிதாதல் மிகுதல்குன்றலென், றிவ்வென மொழிபதிரியுமாறே. (7th Sootrum, புணரியல்).

6. திரிவனவல்ல இயல்பெனமொழிப. (Original.)

7. Syntax Virtual - வேற்றுமைகுறித்த புணர் மொழிநிலையும், வேற்றுமையல்வழிப் புணர்மொழிநிலையும், எழுத்தேசாரியை ஆயிரு பண்பின, ஒழுக்கல்வலிய புணருங்காலை (10th of புணரியல்.)

8. வேற்றுமைவழிய பெயர்புணர்நிலையே; அவற்றுவழிமருங்கிற் சாரியை வருமே. (14th and 16th புணரியல்.)

9. எல்லமொழிக்கும் உயிர்வருவழியே, உடம்படுமெய்யினுருபு கொளல்வரையார். (38th of புணரியல்.)

10. ஞநமயவ எனும் முதலாகுமொழியும், உயிர்முதலாகிய மொழியு முளப்பட, அன்றியனைத்து மெல்லாவழியும், நின்றசொன்முன் இயல் பாகும்மே. (2d Sootrum of தொகைமரபு.)

11. கசதபமுதலிய மொழிமேற்றொன்றும், மெல்லெழுத்தியற்கை சொல்லியமுறையான், ஙஞநம வென்னும்மொற்றாகும்மே. 1st தொகைமரபு.

12. புள்ளியீற்றுமுன்னுயிர் தனித்தியலாது, மெய்யொடுஞ் சிவணுமவ்வியல்கெடுத்தே. (36 th of புணரியல்.)

தொல்காப்பிய நன்னூல்

BOOK - I PART - II

THE NUNNOOL

எழுத்ததிகாரம் ORTHOGRAPHY

CHAPTER - I எழுத்தியல் LETTERS

Chapters I. and II are called கருவி, for they supply means and materials towards Sandhi, as also towards Etymology and Prosody following furher. See Chapters I., II., III., IV. preceding, and concluding Memoranda. P.

1. பூமலிஅசோகின் புனைநிழல் அமர்ந்த, நான்முகற்(னை) றொழுதுநன், கியம்புவன் எழுத்தே. Invocation of Bhood

2. எண்பெயர்முறைபிறப்புருவம்மாத்திரை, முதல்ஈறிடை நிலைபோலி என்றா, பதம்புணர் பெனப் பன்னிரு பாற்றதுவே. The Divisions of the Subject, எழுத்து, twelve in number Compare the Introductory Sootrums of each of the preceding Chapters of the Tholcapya Nunnool Book I.

3. மொழிமுதல்காரணம் ஆம் அணுத்திரள் ஒலி, எழுத்தது முதல்சார் பெனஇருவகைத்தே. Definitoin and distribution of Ltters நூன்மரபு 1.

4. உயிரும்உடம்பும் ஆம்முப்பதும் முதலே. Primary Letters

5. உயிர்மெய்ஆய்தம் உயிரளபொற்றள, பஃகிய இ உ ஐ ஔ மஃகான், தனிநிலைபத்தும் சார்பெழுத்தாகும். Dependent Letters Ten classes. See நூன்மரபு. 1. of the Tholcapyam preceding.

6. உயிர்மெய் இரட்டு நூற்றெட்டுயர்ஆய்தம், எட்டுயிரளபெழு மூன்றொற் றளபெடை, ஆறேழஃகும் இம்முப்பானேழ், உகரம் ஆறாறைகான் மூன்றே, ஔகான்ஒன்றே மஃகான் மூன்றே, ஆய்தம் இரண்டொடு சார்பெழுத்துறுவிரி, ஒன்றொழிமுந்நூற் றெழுபான் என்ப. Three hundred and sixty-nine in the aggregate.

7. இடுகுறி காரணப் பெயர் பொதுச்சிறப்பின. Definiton of Noun of Name. Ex. 1. மண், மரம், பொன், செம்மண், ஆலமரம், வெண்பொன்: 2. பறவை, அணி, உடை; அடைக்கலான், முடி, போர்வை: 3. பரம், பரமன்; முக்கணன், அந்தணன், மறவன்,முள்ளி, கறங்கு, மொழி, சொல்.

8. அம்முதல் ஈராறாவி கம்முதல், மெய்ம் மூவாறென விளம்பினர்புலவர். Vowels and Consonants. viz அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ: க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன். நூன்மரபு 8, 9.

9. அவற்றுள், அ இ உ எ ஒக்குறில் ஐந்தே. Short Letters. நூன் மரபு, 3.

10. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில். Long Letters., நூன்மரபு, 4.

11. அ இ உம் முதல் தனிவரில் சுட்டே. Demonstratives. நூன் மரபு, 31. Ex. அவன், இவள், அது அந்த, இந்த, அம்மனிதன், இக்குறி.

12. எ யா முதலும் ஆ ஓ ஈற்றும், ஏ இருவழியும் வினாவாகும்மே. Interrogative Letters. நூன்மரபு, 32. Ex எவன், யாவள், பொன்னா, வெள்ளியோ, இவனோ, அதுவோ, ஏவன், எது, ஏன், ெ காற்றனே, எவன் (which thing), என்ன என்னை, என், ஏனோ, என்னையோ, எற்று எற்றுக்கு.

13. வல்லினம் க ச ட த ப ற என ஆறே. Pectorals. நூன்மரபு, 19.

14. மெல்லினம் ஙஞணநமன எனஆறே. nasals. நூன்மரபு, 20.

15. இடையினம் யரலவழள வெனவாறே. Gutturals. நூன்மரபு, 21.

16. ஐ ஔ, இ உ ச்செறிய, முதலெழுத், திவ்விரண்டோரினமாய் வரல் முறையே. Relationship between Letters. 9. மொழிமரபு. This is a Remark on Sootrums 13, 14, 15. Also, on Shoots. 9 and 10.

17. தானம்முயற்சி அளவுபொருள்வடி, வானஒன்றாதி ஓர்புடைஒப்பினமே. Items constituting Relationship. Another remark on Pectoral Nasal and Guttural Consonants Not in the Tholcapyam.

18. சிறப்பினும் இனத்தினும் செறிந்தீண்டம்முதல், நடத்தல் தானே முறையாகும்மே. Order or Arrangement of Letters; - the Third Division of எழுத்து. See நூன்மரபு, 1. Also the Alphabet Table

19. நிறைஉயிர்முயற்சியின் உள்வளிதுரப்ப, எழும் அணுத்திரள் உரம் கண்டம் உச்சி, மூக்குற்றிதழ்நாப் பல்லணத்தொழிலின், வெவ் வேறெழுத் தொலியாய்வரல் பிறப்பே. Articulation of Pronunciation; the 4th subdividion of எழுத்து. பிறப்பியல், 1 p. 6

20. அவ்வழி, ஆவிஇடைமை இடம் மிடறாகும், மேவும்மென்மை மூக்குரம்

பெறும் வன்மை. vowels Gutturals and Nasals as to their Articulations. பிறப்பியல். Soots. 2. 18

21. அவற்றுள், முயற்சியுள் அ ஆ அங்காப்புடைய. பிறப்பியல். 3.

22. இ ஈ எ ஏ ஐ அங்காப்போ, டண்பல்முதல் நாவிளிம்புறவருமே. பிறப்பியல். Soot 4. . 7.

23. உ ஊ ஒ ஓ ஔ இதழ்குவிவே. பிறப்பியல், 5. p. 7.

24. கஙவும் சஞவும் டணவும் முதல்இடை, நுனிநாஅண்ணம் உறமுறை வருமே. பிறப்பியல் 7, 8, 9, p 7.

25. அண்பல்அடிநா முடியுறத் தநவரும். பிறப்பியல், 11.

26. மீ கீழ் இதழ் உறப் பம் மப் பிறக்கும். பிறப்பியல், 15.

27. அடிநா அடிஅணம் உற யத் தோன்றும், பிறப்பியல், 17.

28. அண்ணம்நுனிநா வருட ரழ வரும். பிறப்பியல், 13.

29. அண்பல்முதலும் அண்ணமும்முறையின், நாவிளிம்பு வீங்கி ஒற்றவும்வருடவும் லகார ளகாரமாய் இரண்டும்பிறக்கும். பிறப்பியல், 14.

30. மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே. பிறப்பியல், 16.

31. அண்ணம்நுனிநா நனிஉறின் றனவரும். பிறப்பியல், 12.

32. ஆய்தக்கிடம் தலை, அங்கா முயற்சி, சார்பெழுத்தேனவும் தம்முதல் அனைய. பிறப்பியல், 19.

33. எடுத்தல்படுத்தல் நவிதலுழப்பியல், திரிபும்தத்தமிற்சிறி துளவாகும். பிறப்பியல், 6, 20. An Exception to the above 14 Sootrums upon Articulation and Promunciation

34. புள்ளிவிட்டவ்வொடு முன்உருவாகியும், ஏனைஉயிரோடு ருவுதிரிந்தும், உயிரளவாய் அன் வடிவொழித்திருவயிற், பெயரொடும் ஒற்றுமுன்னாய்வரும் உயிர்மெய். நூன்மரபு, 17, 18. Vowel - Consonants. The following 9 Rules should follow immediately after the 6th Soot

35. குறியதன்முன்னர் ஆய்தப்புள்ளி, உயிரொடுபுணர்ந்த வல்ஆறன் மிசைத்தே. மொழிமரபு, 5. This is borrowed by Pavananti from the Tholcapyam Ex. எஃகு, கஃசு, இருபஃது, அஃகடிய, அஃகான், மஃகான், விலஃஃகி, இலஃஃகும். ஆய்தம். p 3.

36. இசைகெடின்மொழிமுதல் இடைகடைநிலைநெடில், அளபெழும் அவற்றவற்றினக்குறில் குறியே. நூன்மரபு, 6, மொழிமரபு, 8. Ex. ஆஅவளியலவன், தூஉந்திரையலைப்ப, உறாஅர்க்கு, படாஅ, கெடுப்பதூஉம், எடுப்பதூஉம், உரனசைஇ, வரனசைஇ. Vowel-Protractions. p 4

37. ங ஞ ண ந ம ன வயலள ஆய்தம், அளபாம் குறிலிணைகுறிற்கீழ் இடை

கடை, மிகலே அவற்றின் குறியாம்வேறே. (நூன்மரபு, 33. பிடியூட்டிப் பின்னுண் ணுங்ங் களிறெனவும்). Ex. இலங்ங்கு, எங்ங்கு, கலங்ங்கொண்ட கன்மார்பு, மடங்ங்கலந்த, அங்கனிந்த, கண்ண்கருவிளை, பொன்ன்பொறிசுணங்கு, எஃஃகிலங்கிய, வெஃஃகுவார்க்கு. Consonant - Protractions.

38. யகரம்வரக்குறள் உத்திரிஇகரமும்,இசைச்சொல் மியாவின் இகரமும்குறிய, மொழிமரபு, 1, 2. Ex. நாகியாது, எஃகியாது, வரகியாது, கொக்கியாது, குரங்கியாது, அல்கியாது, கேண்மியா, சென்மியா, Abbreviate இ.

39. நெடிலோடாய்தம் உயிர்வலிமெலியிடை, தொடர்மொழி இறுதிவன்மை ஊர்உகரம், அஃகும்பிறமேல் தொடரவும் பெறுமே. குற்றியலுகரப் புணரியல், 1. நாகு, ஆசு, பாடு, காது, நீறு (நெடிற்றொடர்). எஃகு, கஃசு, அஃது, (ஆய்தத்தொடர்). வரகு, முரசு, பரடு, அரிது, ஞிமிறு, (உயிர்த்தொடர்). கொக்கு, கச்சு, கட்டு, வித்து, செப்பு, ஒற்று (வன்தொடர்). குரங்கு, பிஞ்சு, விண்டு, பந்து, அம்பு, ஒன்று, (மென்றொடர்). அல்கு, தெள்கு &c. (இடைத்தொடர்) See p. 32.

40. தற்சுட்டளபொழி ஐமூவழியும், நையும்ஔவும் முதல் அற்றாகும். மொழிமரபு, 24. Ex ஐப்பசி, மைப்புறம், வலையன், குவளை, மௌவல்.

41. ணன முன்னம் வஃகான் மிசையும் மக்குறுகும். நூன்மரபு, 13, 28. புள்ளிமயங்கியல்: 35. Ex. மருண்ம், போன்ம், தரும்வளவன், வரும் வண்ணக்கன். See p 27

42. லளஈற்றியைபின் ஆம்ஆய்தம்அஃகும். புள்ளிமயங். 74. Ex. கஃறீது, முஃடீது. Here ends the Subject of சார்பெழுத்து which Pavananti distributes into Ten, and Tholcapyan into Three. நூன்ம. 1.

43. தொல்லைவடிவின எல்லாஎழுத்தும்ஆண், டெய்தும் எகரம் ஒகரம் மெய் புள்ளி. நூன்மரபு, 14, 15, 16, 17 The Fifth subdivision of See Sootrum 2. p. 2

44. மூன்றுயிரளபிரண் டாம்நெடில்ஒன்றே, குறிலோடை ஔக் குறுக்கம் ஒற்றள, பரைஒற்றிஉக்குறுக்கம் ஆய்தம், கால்குறள் மஃகான் ஆய்த மாத்திரை. நூன்மரபு, 3, 4, 5, 6, 11, 12, 13.

45. இயல்பெழும் மாந்தர் இமைநொடி மாத்திரை. நூன்மரபு, 7.

46. ஆவியும்ஒற்றும் அளவிறந்திசைத்தலும், மேவும் இசைவிளி பண்டம் மாற்றாதியின். நூன்மரபு, 33.

47. பன்னீருயிரும் கசதநபமவய, ஞங ஈரைந்துயிர்மெய்யும் மொழி முதல். Initial: the 7th subdivision of the 2nd Soot. மொழிமரபு, 26, 28. அடை, ஆடை, இலை, ஈயம், உளை, ஊர்தி, எழு, ஏணி, ஐவனம், ஒளி, ஓடம், ஔவியம்: கலை, கார் கிளி, கீரி, குடி, கூடு, கெண்டை, கேழல், கைதை, கொண்டல், கோடை, கௌவை: சத்து, சார்தல், சினை, சீர்மை, சுகம்,

சூடம், செம்மை, சேடன், சைவம், சொறி, சோனகம், சௌனகர்: தந்தை, தார், தித்தி, தீமை, துனி, தூணி, தெற்றி, தேன், தையல், தொண்டை, தோடு, தௌவை: நந்து, நாரை, நிலம், நீத்து, நுகம், நூல், நெய்தல், நேயம், நைவு, நொச்சி, நோக்கம், நௌவி: படை, பால், பிடி, பீடு, புகழ், பூழி, பெடை, பேதை, பைதல், பொன், போது, பௌவம்: மடி, மாலை, மிடறு, மீளி, முயற்சி, மூப்பு, மெலிவு, மேனி, மையல், மொழி வையம், மௌவல்: வயல், வாயில், விளி, வீய்வு, வெள்ளி, வேட்கை, வையம், வௌவுதல்: யவனர், யாடு, யானை, யுத்தி, யூகி, யோகம், யௌவனம்: ஞமலி, ஞானம், ஞிமிறு, ஞெண்டு, ஞொள் கிற்று: அங்ஙனம். See p. 5.

48. உ ஊ ஒ ஓ அலவொடுவம்முதல். மொழிமரபு, 30.

49. அ ஆ உ ஊ ஒ ஔ யம்முதல். மொழிமரபு, 32.

50. அ ஆ எ ஒவ்வோ டாகும் ஞம்முதல். மொழிமரபு, 31.

51. சுட்டியா எகரவினாவழிஅவ்வை, ஒட்டி ஙவ்வும் முதலாகும்மே. Not in the Tholcapyam

52. ஆவி ஞ ணநமனயரலவழளமெய், சாயும் உகரம் நாலாறும்ஈறே. The 8th Subdivision; Finals. See Sootrum 2. மொழிமரபு, 36, 45.

53. குற்றுயிர் அளபின் ஈறாம் எகரம், மெய்யொடேலாதொந் நவ்வோ டாம் ஔக், ககர வகரமோடாகும்என்ப. மொழிமரபு, 11, 38, 39.

54. நின்றநெறியே உயிர்மெய்முதல்ஈறே. Not in the Tholcapaysm.

55. கசதபஒழித்த ஈர்ஏழன்கூட்டம், மெய்ம்மயக்குடனிலை ரழஒழித்தீரெட், டாகும் இவ்விருபான்மயக்கும் மொழியிடை, மேவும் உயிர்மெய் மயக்களவின்றே. The 9th Subdivision of this Book Medial Consonants occuring between Initials and Finals நூன். 22. மொழி. 14.

56. ஙம்முன்கவ்வாம் வம்முன்யவ்வே. நூன்மரபு, 25, 27.

57. ஞநமுன்தம்மினம் யகரமொடாகும். நூன்மரபு, 27.

58. டறமுன்கசப மெய்யுடன்மயங்கும். நூன்மரபு, 23.

59. ணனமுன்இனம் கச ஞபமயவவ்வரும். நூன்மரபு, 26.

60. மம்முன்பயவ மயங்குமென்ப. நூன்மரபு, 26, 27, 28.

61. யரழமுன்னர் மொழிமுதன் மெய்வரும்: நூன்மரபு, 29.

62. லளமுன்கசப *வயஒன்றும்மே. நூன்மரபு*, 23, 24.

63. ரழஅல்லனதம் முன்தாம் உடனிலையும். நூன்மரபு, 30.

64. யரழஒற்றின்முன் க ச த ப ங ஞ ந ம, ஈரொற்றாம் ரழத் தனிக்குறில் அணையா. மொழிமரபு, 15.

65. லளமெய்திரிந்த னணமுன்மகாரம், நைந்தீரொற்றாம் செய்யுள் உள்ளே. மொழிமரபு, 18,19. நூன்மரபு, 13.

66. தம்பெயர்மொழியின் முதலும்*மயக்கமும்*, இம்முறைமாறியும் இயலுமென்ப.

மொழிமரபு. Exception to the above 20 Sootrums.

67. மரகஇறுதி அஃறிணைப்பெயரில், னகர மொடுறழா நடப்பன உள வே. மொழிமரபு, 49. The 10th Subdivision.

68. அ ஐ முதல் இடை ஒக்கும் சஞயமுன். மொழிமரபு, 21, 22, 23.

69. ஐகான்யவ்வழி நவ்வொடுசில்வழி, ஞஃகான் உறழும்என்மரும் உளரே. செய்ஞ்ஞின்ற நீலம், மைஞ்ஞின்ற கண், நெய்ஞ்ஞின்றவிளக்கு, கைஞ்ஞின்றவாடல், ஐஞ்ஞிறு, மண்யாத்த, மண்ஞாத்த, பொன்யாத்த, பொன்ஞாத்த. தொகைமரபு, 4.

70. அம்முன்இகரம் யகரம்என்றிவை, எய்தின் ஐ ஒத்திசைக்குமஅவ்வோ, டுவ்வும்வவ்வும் ஔஒர்அன்ன. மொழிமரபு, 22, 23.

71. மெய்கள்அகரமும் நெட்டுயிர்காரமும், ஐ ஔக்கானும் இருமைக்குறில்இவ், இரண்டொடுகரமு மாம்சாரியை பெறும்பிற. புணரியல், 32, 33, 34, 35. Adjuncts used in Naming a Letter.

72. மொழியாத்தொடரினும்முன்அனைத்தெழுத்தே. மொழிமரபு, 20. Introductory Sootrum showing the Transition into the next Chapter

CHAPTER - II. பதவியல்

OF WORDS, WORDS, THEIR MAKE AND PARTS

1. எழுத்தேதனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின், பதமாம்அது பகாப்பதம் பகுபதமென, இருபால்ஆகி இயலும் என்ப. The 11th Subdivision of எழுத்து as laid down in the 2nd Sootrum of எழுத்தியல். Words are Indivisible and Divisible. Compare மொழிமரபு. Sootrum 12. N.B. Pavananti's பதவியல் has little or nothing in commmon with the மொழிமரபு of Tholcapyam, but still the Disposition of the Parts of Words is the object of both authors.

2. உயிர்மவில் ஆறும் தபநவில்ஐந்தும், கவசவில்நாலும் யவ்வில்ஒன்றும், ஆகும்நெடில் நொ து ஆங்குறில்இரண்டோ, டோரெழுத்தியல்பதம் ஆறேழ்சிறப்பின. மொழிமரபு, 10. Ex. ஆ Cow, ஈ Fly, ஊ Flesh, ஏ arrow, ஐ Beauty, ஓ a board: மா Mango, மீ upon, மூ old, மே alore, asume, மை ink, மோ smell தா give, தீ fire, தூ purity, தே God, தை Stitch: பா song, பூ flower, பே foam, பை bag, போ go: நா tongue, நீ thou, நே love, நை destruction, நோ pain: கா Save, கூ cry, கை hand, கோ king: வா come, வீ death, வை straw, வெள

seize: சா die, சீ contempt, சே a tree, சோ a wall: நொ pain, து cat. Also ஔ, பீ, இ, உ, எ, ஒ.

3. பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும், எழுத்தீறாகத் தொடரும் என்ப. Not in the Tholcapyam. Ex. 1. அவை, அனல், அகலம், அரக்கன், தருப்பணம், உத்திரட்டாதி: 2. கூனி,கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான். Such as எழுந்திருக்கின்றார், நடத்துவிப்பிக்கிறார், நடத்துவிப்பிக் கின்றார், நடத்துவிப்பிக்கிறார்கள், நடத்துவிப்பிக் கின்றார்கள், நடத்துவிப்பிக்கின்றவர்கள் are alo allowed under this Rule.

4. பகுப்பால் பயன்அற்றிடுகுறியாகி, முன்னேஒன்றாய் முடிந்தியல்கின்ற, பெயர்வினை இடைஉரி நான்கும் பகாப்பதம். Not in the Tholcapyam. Ex. (1) நிலம், நீர், தீ, காற்று, மண், தலை: (2) நட, வா, உண், தின், படி, அறி, இழு: (3) ஐ, ஆல், கு, இன், மன், அன், என், ஒம், கொல் உம்: (4) உறு, கழி, தவ, நனி, கடி, சால், கூர். These and the like are Indivisible words or Radices.

5. பொருள்இடம் காலம் சினைகுணம் தொழிலின், வருபெயர்பொழுது கொள்வினைபகுபதமே.

Ex.

(A) (1) பொன்னன், பொருளன், முடியன் பொன், பொருள், முடி, (2) அகத்தன், ஊரான், கிராமத்தான் from அகம், ஊர், கிராமம். (3) ஆதிரையான், ஆதிகாலத்தார், நேற்றையான் from ஆதிரை ஆதிகாலம் நேற்று. (4) கண்ணன், கையன், தலையன் from கண், கை தலை. (5) கரியன், அறிஞன், பகைவன் from கருமை அறிவு பகை. (6) ஊணன், ஓதுவான், தச்சன் கணக்கன் from ஊண், ஓதல், தச்சு, கணக்கு.

(B) Also Derivatives and Appellatives like the following are Divisible words. (1) இ: கூத்தாடி, மேன்மூடி, பாம்பாட்டி, கோபி, போகி, மலையாளி, உபகாரி, அதிகாரி, விபசாரி, அகங்காரி, மானி, வீங்கி, தூங்கி, ஏறி, காமி, ஒல்லி, வில்லி. (2) ஆளன்: – வல்லாளன், போராளன், தயாளன், குணாளன், மண்ணாளன், வேளாளன், காராளன், பங்காளன். (3) ஆளி: கொடையாளி, வில்லளி, தொழிலாளி, பொறுப்பாளி, உழைப்பாளி. (4) காரன்: உரைகாரன், கூலிக்காரன், குடிகாரன்; அதிகாரன், உபகாரன். (5) சாலி – பாக்கியசாலி, குணசாலி, புத்திசாலி, பலசாலி, யுத்திசாலி. (6) மான்:– நீதிமான், பக்திமான், கல்விமான், நெறிமான், கீர்த்திமான். (7) வான்: தனவான், குணவான், பலவான். (8) வந்தன்: ஆஸ்திவந்தன் ஸ்திதிவந்தன். (9) கியன்: இரசக்கியன், தருமக்கியன், குணக்கியன். (10) உணி: வெட்டுணி, தூக்குணி, மழுங்குணி, குத்துணி. (11) ஐ– கரனை, துவளை, பசளை, குறளை, வறளை, காதறை, மூக்கறை, குருளை, கட்டை, மொட்டை, பரட்டை, ஒற்றை,இரட்டை.

(C) Also such as these following:- (1) கம்மாளன், வண்ணான், அம்பட்டன், சிற்பி, சான்றான் or சாணான், தெலுங்கன், தமிழன், சோழியன், வாணியன், செட்டி, முதலி, பார்ப்பான், பறையன், வள்ளுவன், கரையான். (2) ஒருவன், இருவர், மூவர், பதின்மர், நூற்றுவர், ஆயிரவர், பதினாயிரவர். (3) அருளை, அருளால், அருட்கண், அருள்போல், அருளாநின்று, அருள்கின்ற, கோன், ஆன், காமத்து, எல்லாவற்றினையும். (4) அகத்தியம், தொல்காப்பியம், பாணினியம், சேனாவரையம், இளம்பூரணம், நச்சினார்க்கினியம், பௌத்தம், சைவம், வைணவம். (5) சைவன், பாகவதன், வைணவன், பௌத்தன், சைநன். (6) வடமன், வடக்கத்தியான், தெற்கத்தையான், கிழக்கத்தியான், மேற்கத்தியான். (7) எம்பிரான், தம்பிரான், பெருமான், எம்பெருமான், பெருமாள். (8) தமன், தமர், நமன், நமர், நமரங்காள், எமன், எமர், நுமன், நுமர், எம்மான். (9) அது, இது, அங்கு, இங்கு, ஆங்கு, ஈங்கு, அவண், இவண், ஆண்டு, ஈண்டு, யாண்டு, அம்பர், இம்பர், அங்ஙனம், இங்ஙனம், எங்கண். (10) ஆண்மை, பெண்மை, கன்மை, சொன்மை, பொருண்மை, வெண்மை, தீமை, செம்மை, நடக்கின்றமை, சொன்னமை, வந்தமை, செய்கின்றமை.

(D) படிக்கிறான், படித்தான், படிப்பான்; குழையன், நல்லன், வில்லினன், அன்னான், அனையான்; வகைத்து, பாற்று, உடைத்து அற்று, இற்று, எற்று; Compare இலக்கணக்கொத்து, ஒழிபியல் Soot. 30.

(E) Some Instances look like Divisibles, but on analysis sound absurd: e.g. அண்ணாத்தல், சோகாத்தல், முதுக்குறைதல், முள்காத்தல், அங்காத்தல்,அழுக்கறல், ஏக்கறல்.

(F) All Imitative Sounds are also Divisible: குறுகுறுத்தல், முறுமுறுத்தல், முணுமுணுத்தல், ஞரேல்ஞரேலெனல், மளேரெனல், பளீரெனல், மளுக்கெனல், மழுக்கெனல் &c.

(G) Sanscrit Divisibles: (1) இந்திரன்திசை ஐந்திரி; – கிரியிலுள்ளது கைரிகம்; சிலையாலாயது சைலம்; – மிதிலையிற் பிறந்தாள் மைதிலி; நியாயநூலோன் நையாயிகன்; வியா கரணமுணர்ந்தோன் வையாகரணன்; (2) கிரியிற்பிறந்தவள் கௌரி; வேதவழிநிற்பார் வைதிகர்; (3) சூரன் மகன் சௌரி; கோசலையிற்பிறந்தாள் கௌசலை; சோமன்மகன் சௌமன்; – (4) அதிதியின்மக்கள் ஆதித்தியர்; தரசரதன்மகன் தாசரதி; சனகன்மகள் சானகி; தனுவின் மக்கள் தானவர்; சகரன்மக்கள் தோண்டியது சாகரம்;– (5) கார்த்திகையின் மகன் கார்த்திகேயன்; தாரையின் மகன் தாரேயன்; கங்கையின் மகன் காங்கேயன்; விந்தையின் மகன் வைநதேயன்;– (6) வேதமுரைப்பான் வேதியன்; பங்கத்துட்பிறந்தது பங்கயம்; அம்புட்பிறந்தது அம்புயம்; சிபியின் மகன் செம்பியன்; சல்சலன் சலாசலன்; சர்சரன் சராசரன்; பத்பதன் பதாபதன்; –(7) The Eighteen Sanscrit Prefixe, as: பிர, பரா, அப, சம், அநு, அவ, நிர் துர், வி, ஆ, நி, அதி, அபி, சு, உற், பிரதி, பரி, உப: Examples: பிரமாணம், பிரயத்தனம், பிரயோகம்: பாரபவம்,

பராக்கியரமம், பராயணம்: அபகீர்த்தி, அபசத்தம், அபவாதம்: சங்கதி, சம்பலம், சங்கீரணம்: அநுபவம், அநுமானம், அநுகரணம்: அவமானம் , அவபோதம், அவசரம்: நிர்க்குணம், நிர்மாணம், நிர்மலம்: துர்க்குணம், துர்க்கிருத்தியம், துர்ப்புத்தி: விகாரம், விமானம், விவேகம்: ஆகாரம், ஆதாரம், ஆதரிசனம்: நிவாசம், நிநதம், நிகேதனம்: அதிமதுரம், அதிப்பிரயாசம், அதியசம்: அபிவிருத்தி, அபிமானம், அபிராமி: சுதினம்,சுவிசேஷம், சுபுத்தி: உற்பலம், உற்பாதம், உற்பவம்: பிரதி கூலம், பிரதிவாதி, பிரதிபலம்: பரிபாகம், ·பரிகாரம், பரிவட்டம்: உபயோகம், உபமானம், உபதானம். (8) Sanscrit Negatives are also Divisibles: - as, சயமில்லான் அச்சயன்–நீதியின்மை: அநீதி–மலமின்மை அமலம்– சீரணமின்மை அசீரணம்–சரமின்மை அசரம் – தருமமின்மை அதருமம் – அகமெனும்பாவமில்லான் அனகன்– அங்க மில்லான் அனங்கன் – ஆதியின்மை ஆனாதி – ஆசாரமின்மை அனாசாரம் – மலமின்மை நிருமலம் – நாமமில்லான் நிருநாமன் – ஆயுதமில்லான் நிராயுதன் – உவமையில்லான் நிருவுவமன் – தருக்கமன்மை குதர்க்கம் – சித்திரமின்மை குசித்திரம் – கிராமமன்மை குக்கிராமம்.

6. பகுதிவிகுதி இடைநிலைசாரியை, சந்திவிகாரம் ஆறினும் ஏற்பவை, முன்னிப்புணர்ப்பமுடியும் எப்பதங்களும். Members of Parts of a Divisibleword. Of six constituents, the three first are explained in this Chapter, and the other three inthe ensuring Chapters. See 4th and 5th of உருபுபுணரியல். Also 1st. 3rd. 4th. of உயிரீற்றுப்புணரியல்.

7. தத்தம்பகாப்பதங்களே பகுதியாகும். Roots and Indivisibls are Synonymons expressions. N.B. Roots in Tamil are of four kinds viz. Those of one letter, two letters, three letters and four lettres. Ex. கா, ஈ, வை: அறி, இரு, நில்: பெருகு, அருள், சுழல்: விளம்பு, சறுக்கு, அடுக்கு. Sanscrit Roots like விதி, நிருமி, நிரூபி, தம்பி, பேதி, பாகி, கதை, யாசி, இச்சி, விதை from வித்து, கண், கண்ணு to see, think or count, கணி to calculated, and may others are also reckoned as Tamil Roots and are conjugated accordingly.

8. செம்மைசிறுமை சேய்மைதீமை, வெம்மைபுதுமை மென்மை மேன்மை, திண்மை உண்மை, நுண்மை இவற்றெதிர், இன்னவும் பண்பிற் பகாநிலைப்பதமே. These and similar words though divisible into and மை are still viewed as Roots by Pavananti. All மை ending words are Abstrct Nouns. Of this kind are also the following: கருமை, பெருமை, அணிமை, நன்மை, தண்மை, பழமை, வன்மை, கீழ்மை, தாழ்மை, நொய்மை, இன்மை, எளிமை, வலிமை, ஏழைமை, பொதுமை, வெண்மை, உரிமை, இருமை, இலைமை, முதுமை, பசுமை, நெடுமை, குறுமை, வெறுமை.

9. ஈறுபோதல் இடையுகரம் இயாதல், ஆதிநீடல் அடிஅகரம் ஐயாதல், தன்ஒற்றிரட்டல் முன்நின்றமெய்திரிதல், இனம்மிகல் இனையவும் பண்பிற்கியல்பே. Remarks upon the above words as to their Inflexion and Combination. Ex. நல்லன், வல்லன், செய்யன், சிறியன், சேயாள், தீயாள், வெவ்விது, புதியது, மெல்லியல், மேலது, கரியன், பெரியன், பாசி, பாசடை, பைங்கண், பைந்தார், பசும்பொன், வெற்றிலை, நெட்டணை, குறுந்தாள், சேதாம்பல்; This Sootrum is upon the Principle of எடுத்தமொழியின் எய்தவைத்தல்.

10. நடவாமடிசீ விடுகூவேவை, நொப்போ வெளஉரிஞ் உண்பொருந்திரும்தின், தேய்பார்செல் வவ் வாழ் கேள்அஃகன், றெய்திய இருபான்மூன்றாம் ஈற்றவும், செய்யெனேவல் வினைப் பகாப்பதமே. See the 52nd Soot of எழுத்தியல். These are examples of Verbal Roots arranged according to the 24 terminations enumerated in t hat Soot. Some additional instances under each of the above heads are necessary

(A) அள, மற, பற; – ஆ, தா, கா; படி, அறி, மிதி; – வீ, தீ; – சி றுகு, பெருகு, கொடு;– மூ, தூ, பூ;–ஏ; – நை, கை, குலை;–நொ; – போ, மோ, நோ; – வெள;

(B) உரிஞ்; பண், அண், முரண்; – பொருந்; திரும்;–மன், துன்,மின்; – ஒய், வாய், மேய்; – சார், சேர், ஊர்; – சொல், வெல், நில்; – வவ்; – பாழ், வீழ், ஆழ்; – தாள்,மீள்,ஆள்; – அஃகு, வெஃகு;– Of these terminations of Verbal Roots, Examples in ஆ, ஈ, ஊ, ஏ, ஒ, ஓ, ஔ, ஞ், ந், ம், வ் are rare. N.B. These Roots are also instances of the Imperative mood, ஏவல். As radices simply, they are considered nouns, முதனிலைத்தனிவினைப் பெயர்.

11. செய்யென்வினைவழி விப்பிதனிவரில், செய்வியென்ஏவல் இணையின்ஈரேவல். Ex. செய்வி, சொல்லுவி, நடத்துவி, வீழ்வி: படிப்பி, உண்பி, காண்பி, துன்பி: செய்விப்பி, சொல்லுவிப்பி, நடத்துவிப்பி, வீழ்விப்பி: செய்விப்பிப்பி, சொல்லுவிப் பிப்பி,நடத்துவிப்பிப்பி, வீழ்விப்பிப்பி, உண்பிப்பிப்பி, நடப்பிப்பிப்பி, அறிவிப்பிப்பி: உடு, உடுப்பி: Under this sootrum of Causal Roots, their different Formatoins may be given: (1) Subjective or Neuter Roots; நட, உறு, வாழ், ஆழ் (2) Objective or Causal Roots; நடப்பி, நடத்து, நடத்துவி, நடத்துவிப்பி: உறுவி, உறுத்து, உறுத்துவி, உறுத்துவிப்பி: வாழ்வி, வாழ்த்து, வாழ்த்துவிப்பி: ஆழ்வி, ஆழ்த்து, ஆழ்த்துவி, ஆழ்த்துவிப்பி: சார், சார்வி, சார்த்து, சார்த்துவி, சார்த்துவிப்பி: உருள், உருட்டு, உருளுவி, உருளுவிப்பி, உருட்டுவி உருட்டுவிப்பி: ஆகு, ஆக்கு, ஆகுவி, ஆக்குவி, ஆக்குவிப்பி: நீங்கு, நீங்குவி, நீக்கு, நீக்குவி: நில், நிற்பி, நிறுத்து, நிறுத்துவி: செல், செல்லுவி, செலுத்து, செலுத்துவி: காண், காண்பி,

காட்டு, காட்டுவி: ஆடு, ஆடுவி, ஆட்டு, ஆட்டுவி: ஓடு, ஓடுவி, ஓட்டு, ஓட்டுவி: பாய், பாய்வி, பாய்ச்சு: மாறு, மாறுவி, மாற்று, மாற்றுவி: திருந்து, திருந்துவி, திருத்து, திருத்துவி: வா, வருவி, வருவிப்பி: தா, தருவி, தருவிப்பி: பெறு, பெறுவி, பெறுத்து: படு, படுவி, படுத்து: நீள், நீட்டு, நீளுவி, நீட்பி, நீட்டுவி: மீள், மீளுவி, மீட்பி: கொள், கொள்ளுவி, கொளுத்து: பயில், பயிற்று, பயிற்றுவி: முயல், முயற்று, முயற்றுவி: அலர், அலர்த்து: உலர், உலர்த்து: இரு, இருத்து: (3) Reflective Roots: நடந்துகொள், நடத்திக்கொள்: ஆடிக்கொள், ஆட்டிக்கொள். உண்டாக்கு; பாய்ப்பண், பாய்ச்சுப்பண்; வரப்பண்ணு, வருவிக்கப்பண்ணு: – அறியச்செய், அறிவிக்கச்செய்: The latter instances of ஆக்கு, பண், and may also be causal. N.B. The above Subjective and Objective Roots which are naturally Imperatives and occur as such in colloquial usage, take the terminatoin ஆய் in High Tamil; as, நடவாய் walk thou, வாராய் come thou, உண்ணாய் eat thou, சொல்லாய் say thou, விளம்பாய் speak thou, செய்யாய் do thou, &c. Sometimes Nouns and Particles ar conjugeted like Verbal Roots: as கடைக்கண், கடைக்கணித்தான்; சித்திரம், சித்திரித்தான்; பூசை; பூசித்தான்; கண், கண்ணிணான்; (he thought); – எதிர், எதிர்த்தான்; போல், போன்றான்; நிகர், நிகர்த்தான்; உள், உள்ளினான்; வெள், வெளுத்தான்; – செம்மை சேப்பு சிவப்பு, செவந்தான் சேந்தான்; சிவந்தான்; கருமை கறுப்பு, கரிந்தான் கறுத்தான்; சிறுமை, சிறுத்தான்; பெருமை, பெருத்தான். Original Impertives assume different forms in Colloquial language where they occur in the Sense of Begging or of Request: as, பார், பாரோ, பாரேன்; கேள், கேளோ, கேளேன்; (Singular): பாரும், பாருமேன், பாருங்கள், பாருங்களேன்; கேளும், கேளுமேன்; கேளுங்கள், கேளுங்களேன், (Plural). நட, வா, மடி, சீ and the others are Colloquial and often Classical Imperatives; நடவாய், வாராய், மடியாய், சீயாய் and the like are Classical only; நடவேன், வாவேன், மடியோன், சீயேன் and their plurals are Vulgar. நடந்திடு, செத்துப்போ, எழுந்திரு, அருளு, மறால், (Negative), அழேல், (Negative), சொல்லிக்காண், &c. are a few other Roots to be met with in colloquial usage. காண் Is used in two ways, with and without உம்–as வாருங்காண், or வாருங்காணும் please come, சொல்லுங்காண் or சொல்லுங்காணும் please say; - It is also found after nouns as a mere expletive, as மருந்தாகாணும் is it medicine?

12. விளம்பிய பகுதிவேறாதலும்விதியே. Exceptional Sootrum to the above. விளம்பியபகுதி the above mentioned Roots are Original Roots like நட, வா, &c. but வேறாயபகுதி, altered Roots are such as நடத்து நடப்பி வருவி, exemplified under Sootrum 11. So also in nouns, Original Roots as நாட்டு,பின், முன், விளக்கு, வெள், செம்,

கள்,முள், and many others make நாட்டம், பின்னர், பின்றை, முன்னர், விளக்கம், வெள்ளை செம்மை, கள்ளு, முள்ளு. Also கோ makes கோன், ஆ ஆன், மா மான், ஆ ஆகு, ஈ ஈகு, போ போகு, வார் வாரு, சேர் சேரு, நில் நில்லு, மே மேவு, &c. Some Roots in Combination and Inflection change (வேறாதல்); so வா makes வந்தான், சா mekes செத்தான்,தா தருவான், நீள் நீண்டது, கேள் கேட்பது, கொல்லல் கோறல், செல்லல் சேறல், கார் கரு, பேர் பெரு, பசுமை பச்சை பைங்கூழ், செம்பருத்தி சேதாம்பல், முன் முந்து, பின் பிந்து, &c. Thus far of பகுதி, the First of the Six members of பகுதம் or Divisible words.

13. அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம் மார், அ ஆ குடுதுறு என் ஏன் அல் அன், அம் ஆம் எம் ஏம் ஓமொடும்மூர், கடதறஐ ஆய் இம்மின்இர் ஈர் ஈயர் கயவும் என்பவும் பிறவும், வினையின்விகுதி பெயரினுஞ் சிலவே. These are Terminations of Verbs as well as of Nouns, the Second of the Six members of a பகுபதம். See தொல்காப்பியம் வினையியல் 5, 6, 7, 8, 9, 10, 19, 20, 26, 27. நன்னூல் வினையியல் 6, 7,8 9, 10, 11, 12, 13, 14, 15. Examples: நடந்தனன், நடந்தான், நடந்தனள், நடந்தாள், நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார், நடந்தன, நடவா, உண்கு, உண்டு, நடந்தது, கூயிற்று? நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பன், நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், நடக்கும், உண்டும், நடந்தும், சேறும், நடந்தாய், நடத்தி, நடமின், நடந்தனிர், நடந்தீர், நிலீயர், நடக்க, வாழிய, நடக்கும்:– Some of these endings in Nouns:- அரசன், பட்டணத்தான், குழையள், பட்டணத்தாள் அமரர், ஊரரர், நாகரத்தன, நாட்டது, யாது, பொன்னி, வள்ளி, தேவிமார், குருமார். Others not included in this table may be found; they are to be included. Ex. வடமன், கோமான், அவ், தெவ், அவை, எந்தை தந்தை, எங்கை, தங்கை எம்பி, தம்பி எம்முன், தோன்றல், கோக்கள்.

Terminatoins of Relative Participles. அ And உம் as, நடந்த, நடக்கிற, நடக்கும். உண்கிற உண்ட, உண்ணும்.

Terminations of Verbal Participels. உ, பு, ஆ, ஊ, என, அ, இன், இய, இயர், வான், பான், பாக்கு, இ, ய், கு, ஆல் கால், ஏல் எனும், உம், மல், மை, மே து, றி கிற்பின், ஒடும் உழி, உனி: – செய்து, நக்குபு, அறியா, உண்ணூ, உண்டென, சொல்ல, பேசின், உணர்த்திய, உண்ணியர், வருவான், உண்பான், படுபாக்கு, வீசி, ஆய், போய், கூய், உணற்கு, சென்றால், தொடங்கியக்கால், ஆகுமேல் உண்டேல், நிற்குமேனும், என்னலும் காண்டலும் இயம்புதலும், சொல்லாமல் உண்ணாமல், உண்ணாமை செல்லாமை, உண்ணாமே நில்லாமே, அல்லது வாராது, அன்றி இன்றி, காண்டலோடும் உரைத்தலோடும், வைப்புழி, நிற்புனி.

Terminatoins of Verbal Nouns. தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, இடம், ஈடு: –

கொடுத்தல்விரித்தல், ஆடல் நிலையல், வாட்டம் நீட்டம், கொலை மறை, நடக்கை அறிக்கை, பார்வை போர்வை, நீக்கு போக்கு தாக்கு, நடப்பு பரப்பு ஒழிபு, வரவு செலவு பிரிவு, மறதி செய்தி வென்றி, உணர்ச்சி தளர்ச்சி எழுச்சி, புலவி தோல்வி மறவி, விக்குள் செய்யுள் பையுள், சாக்காடு வேக்காடு நோக்காடு விழுக்காடு, கோட்பாடு கூப்பாடு சாப்பாடு, ஆற்றரவு தோற்றரவு தேற்றரவு, வாரானை, வாராமை நடவாமை நடக்கின்றமை கோணாமை, வாழ்த்து பாய்த்து, நடக்கிறது இருந்தது வருவது, கட்டிடம் சீவிடம் இராவிடம், உள்ளீடு முன்னீடு.

Terminatoins of Abstract Nouns. மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர்:- Ex. நன்மை வெம்மை பசுமை நடந்தமை, தொல்லை வல்லை ஒல்லை, மாட்சி, மாண்பு பெட்பு, பொற்பு, மழவு, நன்கு நாகு, நன்றி, நன்று, நலம், நன்னர்.

Negative Terminations. இல், அல், ஆ:- நடந்திலன், நடக்கின்றிலன், நடக்கலன், நடவான், நடவாதான். Also அற்க and அன்மின்; as சொல்லற்க, சொல்லன்மின். And இல்லை, மாட்டான், கூடாது, ஏன், ஏல்; as நடக்கவில்லை, பேசமாட்டான், இருக்கக்கூடாது, சொல்லேன், ஆட்டேல். Sanscrit Negatives; அ, நி, நிர், அந், வி, கு, ந; - அபாவம் அகாலம் அசாதாரணம், நிமலம், நிர்குணம், அநாதி, விசாதி, குதர்க்கம், நவிரோதம் நாஸ்திகம்.

Terminations of Causal Roots. வி, பி, கு, சு, டு, து, பு, று: வருவி, அனுப்புவி, செய்வி, கொடுப்பி, எடுப்பி, சாய்ப்பி, போக்கு, ஆக்கு, முறுக்கு, பாய்ச்சு, காய்ச்சு; உருட்டு, சுருட்டு, தெருட்டு; நடத்து, உறுத்து, படுத்து; எழுப்பு, குழப்பு; துயிற்று, பயிற்று, இயற்று;- There may be added; ஆக்கு in உண்டாக்கு; பண்ணு in such as வரப்பண்ணு, நோகப்பண்ணு; செய் in ஆகச்செய், போகச்செய், விடு in வரவிடு, போகவிடு, Thus far of விகுதி.

இலக்கியம் கண்டதற்கிலக்கணம் இயம்பலின், பகுதிவிகுதி பகுத்திடைநின்றதை, வினைப்பெயர் அல்பெயர்க் கிடைநிலை எனலே. Definition of இடைநிலை or Medium of connection between Root and Termination. See Nunnool, இடையியல் Ex: அறி-ஞ-ன்=அறிஞன், பகை-ஞ-ன்=பகைஞன், பகை-வ-ன்=பகைவன், தலை-வ-ன்=தலைவன், வலை-ச்-சி=வலைச்சி, வண்ணா-த்-தி=வண்ணாத்தி, கவிஞர், வல்லுநர், வள்ளுவர். Often no Medial Particle is left as in the Derivative Nouns வலையன், பொன்னன், கடையர், &c.

15. தடற ஒற்றின்னே ஐம்பால்மூவிடத், திறந்தகாலம் தரும்தொழிலிடைநிலை. Past-tense denoting Particles. Ex. வந்தான், நடந்தான், செத்தான், கொடுத்தான், பொருதான்: விட்டான், ஆண்டான், உண்டான்: பெற்றான், கற்றேன், சென்றோம், கொன்றான், கனன்றார்: நடத்தினான், சொல்லினேன், ஆயினேன். Also சொன்னான், ஆனாள்.

16. ஆநின்று கின்று கிறுமூவிடத்தின், ஐம்பால்நிகழ்பொழு தறைவினை இடைநிலை. Present-tense denoting Particles Ex. செய்யாநின்றேன், பேசுகின்றார், அறிகிறோம்; கொடாநின்றீர், தாவுகின்றது, எழுப்புகிறாள், ஆவாநின்றோம், ஆகின்றாய், ஆகிறாள்; பேசாநின்றீர், தேடுகின்றார்கள், ஓடுகிறதுகள்; மீளாநின்றீர், மீளுகின்றோம், மீளுகிறோம்.

17. பவ்வமூவிடத் தைம்பால் எதிர்பொழு, திசைவினை இடைநிலை ஆம் இவைசில இல. Future Tense Particles Ex. படிப்பான், அறிவேன்; செய்விப்பான், செய்வோம்; உண்பார், காண்பீர்கள், அறிவிப்பேன், கொடுப்பாள், வைப்பாய்; வைவாய், தின்போம், உண்ணுவோம், தீவான், தீய்ப்பாள், கலங்குவது, பெய்வது, சேர்ப்பார், கேட்பாள், உய்வேன், உய்விப்பேன், இருப்பான், இறுத்துவார். N.B. உம். is the Terminatoin of the Future in the 3d Person Singular and Plural Neuter; as குதிரை ஓடும், குதிரைகள் ஓடும், நாய் குலைக்கும், நாய்கள் குலைக்கும், &c.

18. றவ்வொடுகரவும்மை நிகழ்பல்லவும், தவ்வொடிறப்பும் எதிர்வும் டவ்வொடு, கழிவும்கவ்வோ டெதிர்வுமின்னேவல், வியங்கோளிம்மார் எதிர்வும்பாந்தம், செலவொடுவரவும் செய்யும்நிகழ்பெதிர்வும், எதிர்மறை மும்மையும் ஏற்குமீங்கே. Instances there are of Verbs which express Tense of Terminations. Ex. 1. சென்று, சென்றும்: 2. சேறு, சேறும்: 3. வந்து, வந்தும்: 4. வருது, வருதும்: 5. உண்டு, உண்டும்: 6 உண்கு, உண்கும்: 7 உண்மின்: 8 உண்ணாய்: 9 உண்: 10 உண்க: 11 வாழிய, வாழியர்: 12 சேறி: 13 உண்மார்: 14 உண்ப, என்ப: 15 உண்ணும், செய்யும்: 16 உண்ணாள், வாரான், செய்யான். Negatives denoting Past Tense only; as நடந்திலன் சென்றிலன்: Besides the Medials and Terminations, Roots themselves in a changed form express Past Tense, as, தொடு, தொட்டான், விடு, விட்டான்; உறு, உற்றான்; பெறு, பெற்றான்; புகு, புக்கான்; நகு, நக்கான். Other Medials than these specified in the above Sootrums; என்மனார், என்றிசினோர், என்மர். தி Terminaions show Present Tense; வருதி, பெயர்தி, வருந்துதி, பொருதி, புலம்புதி, நிற்றி, கோடி, &c.These are found also as Imperatives. N.B.Of the Six Members of பகுபதம், the three first are explained in this Chapter; but as to the three last viz. சாரியை சந்தி விகாரம், See the 5th of உருபுபுணரியல்,. and 1, 2, 3, 4, 5, 6, 7, of உயிரீற்றுப்புணரியல்.

SYNTHESIS AND ANALYSIS OF DIVISIBLES

1. அவன் Synth – அ–வ்–அன் Anal. Nun. உயிரீ. 13.

				மெய்யீ. 1.
2. தமன்	”	தாம்–அன்	”	Nun. உருபு. 8.
3. குறிஞ்சி –யான்	”	குறிஞ்சி–ஆன்	”	Nun. உயிரீ. 12.
4. பிரபவன்	”	பிரப(வம்)வ்.அன்	”	Nun. மெய்யீ. 1.
5. திணி –தோளன்	”	திணிதோள்–அன்	”	Nun. உயிரீ. 6.
6. பெரியன்	”	பெருமை(பெரி)அன்	”	Nun. மெய்யீ. 1.
7. ஒதுவான்	”	ஒது–வ்–ஆன்	”	Nun. பதவி. 17.
8. நன்மை	”	நல்–மை	”	Nun. மெய்யீ. 24.
9. வருதல்	”	வா(வரு)தல்	”	Nun. உயிரீ. 6.
10. நடந்த –னன்	”	நட–ந்–த்–அன்–அன்	”	Nun. மெய்யீ. 36.
11. நடவா –நின்றான்	”	நட–ஆநின்று–ஆன்	”	Nun. பதவி 16. உயிரீ. 12.
12. நடப்பான்	”	நட–ப்–ஆன்	”	Nun. உயிரீ. 15.
13. நடந்தது	”	நட–ந்–த்–அது	”	Nun. உயிரீ. 5. உருபு. 5.
14. நடவாய்	”	நட–ஆய்	”	Nun. உயிரீ. 12.
15. நடப்பியாய்	”	நட–பி–ஆய்	”	Nun.உயிரீ. 15 12.
16. நடப்பிப்பியாய்	”	நட–பி–பி–ஆய்	”	Nun. உயிரீ. 15.12.
17. நடவான்	”	நட–ஆ–ஆன்	”	Nun. பதவி.11. உயிரீ.6.
18. நடவா	”	நட–ஆ	”	Nun. வினையி. 10.
19. நடந்திலன்	”	நட–ந்த்–இலன்	”	Nun. பதவி. 18.
20. உடுக்கை	”	உடு–கை	”	
21. எல்லாவற்றி னையும்,	”	எல்லாம்–அற்று இன்–ஐ–உம்	”	Nun. உருபு. 6.
22. மரத்தினுக்காக	”	மரம்–அத்து–இன் –உ–கு–ஆக.	”	Nun. மெய்யீ. 16.
23. நடவை,	”	நட–ஐ	”	

தொடை " தொடு–ஐ "
சேக்கை " சே–கை "
விடை " விடு–ஐ " Nun. பதவி. 18.

24. ஊண், உண், தீன், தின், கோள், கொள்.

25. திரை, நுரை, அலை, தளிர், பூ, காய், கனி.

26. அறிவு (அறி–உ), கலப்பு (கல–பு), நாட்டம் (நாடு–அம்), ஈடு (இடு–அது), நாடு (நடு–அது), நிலை(நில்–ஐ). See 13th Sootrum above.

27. வேண்டுதல், வேண்டுதலை: ஆறுதல், ஆறுதலை: தேறுதல், தேறுதலை: அஞ்சுதல், அஞ்சுதலை: நம்புதல், நம்புதலை. (Original). Here ends தமிழ்மொழியாக்கம்.

வடமொழி யாக்கம்

SANSCRIT LETTERS AND WORDS

Sanscrit Letters in Grandonic Characters.

Vowels: 1 𑌅 2 𑌆 3 𑌇 4 𑌈 5 𑌉 6 𑌊 7 𑌋 8 𑍠 9 𑌌 10 𑍡 11 𑌏 12 𑌐 13 𑌓 14 𑌔 15 𑌅𑌂 16 𑌅𑌃 —— Consonants: 1 𑌕 2 𑌖 3 𑌗 4 𑌘 5 𑌙 || 6 𑌚 7 𑌛 8 𑌜 9 𑌝 10 𑌞 || 11 𑌟 12 𑌠 13 𑌡 14 𑌢 15 𑌣 || 16 𑌤 17 𑌥 18 𑌦 19 𑌧 20 𑌨 || 21 𑌪 22 𑌫 23 𑌬 24 𑌭 25 𑌮 || 26 𑌯 27 𑌰 28 𑌲 29 𑌵 || 30 𑌶 31 𑌷 32 𑌸 || 33 𑌹 || 34 𑌳 || 35 𑌕𑍍𑌷 ||

The same in Telugoo Characters.

Vowels: 1 అ 2 ఆ 3 ఇ 4 ఈ 5 ఉ 6 ఊ 7 ఋ 8 ౠ 9 ఌ 10 ౡ 11 ఎ 12 ఏ 13 ఐ 14 ఒ 15 ఓ 16 ఔ 17 అం 18 అః —— Consonants: 1 క 2 ఖ 3 గ 4 ఘ 5 ఙ || 6 చ 7 ఛ 8 జ 9 ఝ 10 ఞ || 11 ట 12 ఠ 13 డ 14 ఢ 15 ణ || 16 త 17 థ 18 ద 19 ధ 20 న || 21 ప 22 ఫ 23 బ 24 భ 25 మ || 26 య 27 ర 28 ల 29 వ || 30 శ 31 ష 32 స || 33 హ || 34 ళ 35 క్ష || 36 ఱ ||

Of Vowels the 7th, 8th, 9th, 10th, 15th, 16th are note in the Taml Alphabet; and of Consonants, the 1st, 5th, 6th, 10th, 11th, 15th, 16th, 20th, 21st, 25th, 26th, 27th, 28th, 29th, 34th, fifteen in all, are tamil letters. The rest are peculiar to Sanscrit but used in Tamil by being converted into any one of the Tamil letter sounds.

20. அவற்றுள்; ஏழாம் உயிர் இய்யும் இருவும், ஐவருக்கத் திடையில் மூன்றும் அவ்வம்முதலும், எட்டே யவ்வும் முப்பது சயவும், மேலொன்று சடவும் இரண்டு சதவும், மூன்றே அகவும் ஐந்திருகவ்வும், ஆ ஈறு ஐயும் ஈஈறு இகரமும்.

Examples The 7th Vowel into இ or இரு: as, இடபம், விடபம், திடம்: இருடி, மிருகம், விருத்தி. The three Intermediate Consonants of the five Varghas into their respective Primaries: as 1 நகம், நாகம், மேகம்; 2. சலவாதி விசயம், சருச்சரை; 3. பீடம், பீடை, திடம்; 4. தலம், தினம்,தரை; 5. பலம், பந்தம், பாரம் The 18th Consonant into as. அயம், பங்கயம். The 30th Const. into ச or ட: as, சட்டி, இடபம். 32nd Const into ச or த: as, சித்தி, சூத்திரம், சேனை ஆதனம், வாதனை, The 33rd Const into அ or க: as, அரன்,அரி, சிங்கம், மோகம். The 35th Const. into க்க: as, பக்கம், தக்கணம். ஆ Into ஐ: as, வேலை, சாலை, மாலை, உவமை, வனிதை. ஈ into இ: as, புரி மேதினி, குமாரி.

21. ரவ்விற்கம் முதலாம்முக்குறிலும், லவ்வற்கிம் முதலிரண்டும் யவ்விற், கிய்யும் மொழிமுதலாகிமுன் வருமே. Ex.ரங்கம் as அங்கம்; ராமன் as இராமன்; ரோமம் as உரோமம்; லாபம் as இலாபம்; லோபம் as உலோபம்; யக்ஷன் as இயக்கன்.

22. இணைந்தியல்காலை யரலக்கிகரமும், மவ்வக்குகரமும் நகரக்ககரமும், மிகைவரும் ரவ்வழி உவ்வுமாம்பிற. Ex. 1. யரல Require இ; as வாக்கியம், வாச்சியம், நாட்டியம்; வக்கிரம்,வச்சிரம், சத்திரம், இப்பிரம், சுக்கிலம், ஆமிலம். 2. ம வ Require உ; as பதுமம், பக்குவம். 3. ந Requires அ; as அரதனம். 4. ர Requires உ; as அருக்கன் அருத்தம் கருப்பம், சருக்கம், தருமம். Other changes occur; as, சத்தி, கட்சி காப்பியம், பருப்பதம், தூலம், அத்தம், ஆதித்தன், அருத்தம், &c. Compare இலக்கணக்கொத்து, ஒழிபியல், 1,2, tholcapyam எச்சவியல் 1,5,6. Nunnool பெயரியல். 17.

23. றனழள ஒவ்வும் உயிர்மெய்யும், உயிரளபல்லாச்சார்பும் தமிழ், பிற பொதுவே. These letters, viz. ற ன ழ ள ஒ, and all the Depandent Letters (சார்பு) except Vowel-Consonants and Vowel-Protraction are pre Tamil; the rest are Common to Sanscrit a and Dravida.

APPENDIX - I

Sec. 14, 15, 16, 17, 18 of பதவியல்

Conjugatoin and Inflection of Verbs and Formation of Tenses

1. UNILITERAL ROOTS

20. பாவரீசையர் Fabricius. Also a European Missionary from Germany, who lived in Madras in the last Century, cotemporarily with Beschi and Columbo-Muttya Moddeliar, the latter a great authority among the Natives and a Linguist who applied himself to the study of Sanscrit for 19 years. Fabricius, like Rhenius, put forth no high Tamil grammer or secular treatise which entitles him to a place among Tamil authors; but of his extensive acquaintance with both colloquial and classical Tamil there can exist no doubt as his version of the Bible and a Hymn Book by him known as பிரார்த்தனைப் புத்தகம் among Natives and his many sermons require no recommendation. The thorough acquaintance with (செந்தமிழ்) Shen Tamil possessed by Fabricius even to the length of the minutest Particles (இடைச்சொல்) and the shades of meaning implied by their use or omission in the matter of expressing doctrinal peculiarities in the Christian Religion, cannot but be apparent to the most casual observer; no Native, could have done better. In the Hymn Book above named, his attempts towards introducing a Medium style into the Tamil Language and his fluency and command of language where even lofty ideas and the sublimest sentiments

of religion are required to be expressed, demand special notice. He is known among the Natives of Southern India as பவுரிசையர் and in Christian poetry பவுரிசையன் or பாவரிசன்.


END

OF THE FIRST BOOK OF THE THOLCAPYA - NUNNOOL

AN APPENDIX OF TELUGOO VOWEL-CONSONANTS

క	కా	కి	కీ	కు	కూ	కృ	కౄ	కౢ	కౣ	కె	కే	కై	కొ	కో	కౌ	క్
ఖ	ఖా	ఖి	ఖీ	ఖు	ఖూ	ఖృ	ఖౄ	ఖౢ	ఖౣ	ఖె	ఖే	ఖై	ఖొ	ఖో	ఖౌ	ఖ్
గ	గా	గి	గీ	గు	గూ	గృ	గౄ	గౢ	గౣ	గె	గే	గై	గొ	గో	గౌ	గ్
ఘ	ఘా	ఘి	ఘీ	ఘు	ఘూ	ఘృ	ఘౄ	ఘౢ	ఘౣ	ఘె	ఘే	ఘై	ఘొ	ఘో	ఘౌ	ఘ్
ఙ	ఙా	ఙి	ఙీ	ఙు	ఙూ	ఙృ	ఙౄ	ఙౢ	ఙౣ	ఙె	ఙే	ఙై	ఙొ	ఙో	ఙౌ	ఙ్
చ	చా	చి	చీ	చు	చూ	చృ	చౄ	చౢ	చౣ	చె	చే	చై	చొ	చో	చౌ	చ్
ఛ	ఛా	ఛి	ఛీ	ఛు	ఛూ	ఛృ	ఛౄ	ఛౢ	ఛౣ	ఛె	ఛే	ఛై	ఛొ	ఛో	ఛౌ	ఛ్
జ	జా	జి	జీ	జు	జూ	జృ	జౄ	జౢ	జౣ	జె	జే	జై	జొ	జో	జౌ	జ్
ఝ	ఝా	ఝి	ఝీ	ఝు	ఝూ	ఝృ	ఝౄ	ఝౢ	ఝౣ	ఝె	ఝే	ఝై	ఝొ	ఝో	ఝౌ	ఝ్
ఞ	ఞా	ఞి	ఞీ	ఞు	ఞూ	ఞృ	ఞౄ	ఞౢ	ఞౣ	ఞె	ఞే	ఞై	ఞొ	ఞో	ఞౌ	ఞ్
ట	టా	టి	టీ	టు	టూ	టృ	టౄ	టౢ	టౣ	టె	టే	టై	టొ	టో	టౌ	ట్
ఠ	ఠా	ఠి	ఠీ	ఠు	ఠూ	ఠృ	ఠౄ	ఠౢ	ఠౣ	ఠె	ఠే	ఠై	ఠొ	ఠో	ఠౌ	ఠ్
డ	డా	డి	డీ	డు	డూ	డృ	డౄ	డౢ	డౣ	డె	డే	డై	డొ	డో	డౌ	డ్
ఢ	ఢా	ఢి	ఢీ	ఢు	ఢూ	ఢృ	ఢౄ	ఢౢ	ఢౣ	ఢె	ఢే	ఢై	ఢొ	ఢో	ఢౌ	ఢ్
ణ	ణా	ణి	ణీ	ణు	ణూ	ణృ	ణౄ	ణౢ	ణౣ	ణె	ణే	ణై	ణొ	ణో	ణౌ	ణ్
త	తా	తి	తీ	తు	తూ	తృ	తౄ	తౢ	తౣ	తె	తే	తై	తొ	తో	తౌ	త్
థ	థా	థి	థీ	థు	థూ	థృ	థౄ	థౢ	థౣ	థె	థే	థై	థొ	థో	థౌ	థ్
ద	దా	ది	దీ	దు	దూ	దృ	దౄ	దౢ	దౣ	దె	దే	దై	దొ	దో	దౌ	ద్
ధ	ధా	ధి	ధీ	ధు	ధూ	ధృ	ధౄ	ధౢ	ధౣ	ధె	ధే	ధై	ధొ	ధో	ధౌ	ధ్
న	నా	ని	నీ	ను	నూ	నృ	నౄ	నౢ	నౣ	నె	నే	నై	నొ	నో	నౌ	న్
ప	పా	పి	పీ	పు	పూ	పృ	పౄ	పౢ	పౣ	పె	పే	పై	పొ	పో	పౌ	ప్
ఫ	ఫా	ఫి	ఫీ	ఫు	ఫూ	ఫృ	ఫౄ	ఫౢ	ఫౣ	ఫె	ఫే	ఫై	ఫొ	ఫో	ఫౌ	ఫ్
బ	బా	బి	బీ	బు	బూ	బృ	బౄ	బౢ	బౣ	బె	బే	బై	బొ	బో	బౌ	బ్
భ	భా	భి	భీ	భు	భూ	భృ	భౄ	భౢ	భౣ	భె	భే	భై	భొ	భో	భౌ	భ్
మ	మా	మి	మీ	ము	మూ	మృ	మౄ	మౢ	మౣ	మె	మే	మై	మొ	మో	మౌ	మ్
య	యా	యి	యీ	యు	యూ	యృ	యౄ	యౢ	యౣ	యె	యే	యై	యొ	యో	యౌ	య్
ర	రా	రి	రీ	రు	రూ	రృ	రౄ	రౢ	రౣ	రె	రే	రై	రొ	రో	రౌ	ర్
ల	లా	లి	లీ	లు	లూ	లృ	లౄ	లౢ	లౣ	లె	లే	లై	లొ	లో	లౌ	ల్
వ	వా	వి	వీ	వు	వూ	వృ	వౄ	వౢ	వౣ	వె	వే	వై	వొ	వో	వౌ	వ్

AN APPENDIX OF TELUGOO VOWEL-CONSONANTS



BOOK II THOLCAPYA – NUNNOOL

சொல்லதிகாரம் ETYMOLOGY

CHAPTER I

கிளவியாக்கம்

DOCTRINE OF WORDS

1. உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே

அஃறிணையென்மனா ரவரல பிறவே
ஆயிருதிணையினிசைக்குமன சொல்லே.
4th Soot. பெயரி. Nun

2. ஆடுஉ வறிசொல் மகடூஉ வறிசொல்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் லுயர்திணை யவ்வே 5thபெயரி. Nun.

3. ஒன்றறி சொல்லே பலவறிசொல் லென்
றாயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே 6th பெயரி. Nunnool.

4. பெண்மைசுட்டிய வுயர்திணைமருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியுந்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக்கிளவியும்
இவ்வெனவறியுமந்தந் தமக்கிலவே
உயர்திணைமருங்கிற்பால் பிரிந்திசைக்கும்.

5. னஃகா னொற்றே யாடூஉ வறிசொல். 19th பெயரி Nun.

6. ளஃகா னொற்றே மகடூஉ வறிசொல் 20வா பெயரி Nun.

7. ரஃகா னொற்றும் பகரவிறுதியும்
மாரைக் கிளவி யுளப்பட மூன்றும்
நேரத்தோன்றும் பலரறி சொல்லே 21st பெயரி Nun.

8. ஒன்றறி கிளவி த ற ட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும். 22nd பெயரி Nunnool

9. அஆவஎன வரூஉமிறுதி
யப்பான்மூன்றே பலவறிசொல்லே 23rdபெயரியல்.Nunnool.

10. இருதிணைமருங்கின் ஐம்பாலறிய
ஈற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்துந்
தோற்றந் தாமே வினையொடு வருமே.

11. வினையிற்றோன்றும் பாலறிகிளவியும்
பெயரிற்றோன்றும் பாலறிகிளவியும்
மயங்கல்கூடா தம்மரபினவே.

12. ஆண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவி
ஆண்மை யறிசொற் காகிட னின்றே.

13. செப்பும் வினாவும் வழாஅ லோம்பல். 24th பொது Nunnool

14. வினாவுஞ் செப்பே வினாவெதிர் வரினே.

15. செப்பே வழீஇனும் வரைநிலை யின்றே
யப்பொருள் புணர்ந்த கிளவியான.

16. செப்பினும் வினாவினுஞ் சினைமுதற் கிளவிக்கு
அப்பொருள குமுறழ் துணைப்பொருளே. 36th பெயரி

Nunnool.

17. தகுதியும் வழக்குந் தழீஇனவொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே. 10th Soot. பெயரி. Nunnool

18. இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யுளாறே.

19. இயற்கைப்பொருளை இற்றெனக்கிளத்தல். 53rd பொது.

20. செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூறல். 54th பொது.

21. ஆக்கந் தானே காரண முதற்றே.

22. ஆக்கக் கிளவி காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.

23. பன்மயக் குற்ற வையக் கிளவி
தானறி பொருள்வயிற் பன்மை கூறல் 25th Soot. பொது.Nun.

24. உருவென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினு,
மிருவீ(கூ)ற்று முரித்தே சுட்டுங் காலை. 25th Soot. பொது. Nun.

25. தன்மைச் சுட்டலும் உரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான.

26. அடைசினைமுதலென முறைமூன்று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல். 52nd Soot.பொது. Nun.

27. ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக்கூறும்பன்மைக்கிளவியும்
வழக்கினாகிய உயர்சொற்கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல.

28. செலவினும் வரவினுந் தரலினுங்கொடையினு
நிலைபெறத்தோன்று மந்நாற்சொல்லுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூவிடத்து முரியவென்ப.

29. அவற்றுள்
தருசொல் வருசொல் லாயிரு கிளவியுந்
தன்மை முன்னிலை யாயீ ரிடத்த.

30. ஏனை யிரண்டு மேனை யிடத்த. 30th பொது. Nun.

31. யாதெவ னென்னும் ஆயிரு கிளவியும்
மறியாப் பொருவயிற் செறியத் தோன்றும்.

32. அவற்றுள்

யாதென வரூஉம் வினாவின் கிளவி
யறிந்த பொருள்வயி னையந் தீர்தற்குத்
தெரிந்த கிளவி யாதலு முரித்தே.

33. இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதி யினும்மை வேண்டும்.48th Soot. பொது.Nun.

34. மன்னாப் பொருளும் அன்ன வியற்றே.

35. எப்பொருளாயினு மல்லதில்லெனின்
அப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்.

36. அப்பொருள் கூறிற் சுட்டிக் கூறல். 55th Soot. பொது. Nun.

37. பொருளொடு புணராச் சுட்டுப் பெயராயினும்
பொருள் வேறுபடா அதொன் றாகுமே.

38. இயற்பெயர்க் கிளவியுஞ் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றிற்
சுட்டுப் பெயர்க்கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிஇய என்மனார் புலவர்.

39. முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே.

40. சுட்டு முதலாகிய காரணக் கிளவியுஞ்
சுட்டுப்பெய ரியற்கையிற் செறியத் தோன்றும்.

41. சிறப்பினாகிய பெயர்நிலைக்கிளவிக்கு
இயற்பெயர் கிளவி முற்படக் கிளவார்.

42. ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பி னொன்றிட னிலவே.

43. தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்
றெண்ணு வழிமருங்கின் விரவுதல் வரையார். 12th Soot. பொது. Nun.

44. ஒருமையெண்ணின் பொதுப்பிரிபாற்சொல்
லொருமைக் கல்ல தெண்ணு முறைநில்லாது.

45. வியங்கோ ளெண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்.

46. வேறுவினைப் பொதுச்சொல் லொருவினை கிளவார்.

47. எண்ணுங் காலு மதுவதன் மரபே.

48. இரட்டைக் கிளவி யிரட்டிற் பிரிந்திசையா.

49. ஒருபெயர்ப் பொதுச்சொல் லுளபொரு ளொழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையு
முயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்.

50. பெயரினுந்தொழிலினும் பிரிபவைவெல்லா
மயங்கல் கூடா வழக்கு வழிபட்டன.

51. பலவயி னானு மெண்ணுத்திணை விரவுப்பெய
ரஃறிணை முடிபின் செய்யு ளுள்ளே.

52. வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வினைவேறு படாப் பலபொரு ளொருசொலென்
றாயிரு வகைய பலபொரு ளொருசொல்.

53. அவற்றுள்
வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வேறுபடு வினையினு மினத்தினுஞ் சார்பினுந்
தேறத் தோன்றும் பொருடெரி நிலையே.

54. ஒன்றுவினை மருங்கி னொன்றித் தோன்றும்.

55. வினைவேறுபடாப்பல பொருளொருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்.

56. குறித்தோன் கூற்றந் தெரித்து மொழிகிளவி.

57. குடிமை யாண்மை யிளமை மூப்பே
யடிமை வண்மை விருந்தே குழுவே
பெண்மை யரசே மகவே குழவி,
தன்மை திரிபெய ருறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல்விறற் சொல்லென்,
றாவறு மூன்று முளப்படத் தொகைஇ
யன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத் தினுணருங் கிளவி யெல்லா
முயர்திணை மருங்கி னிலையின வாயினு
மஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும் See 60th Soot.
பொது. Thol.

58. கால முலக உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையெம் பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வருஉ
மாயீ ரைந்தொடு பிறவு மன்ன
வாவயின் வருஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன.

59. நின்றாங் கிசைத்த லிவணியல் பின்றே.

60. இசைத் தலமுரிய வேறிடத் தான. 57th பொது. Nun.

61. எடுத்த மொழியினுஞ் செப்பலு முரித்தே.7th பொது. Nun.

62. கண்ணுந் தோளு முலையும் பிறவும்
பன்மைசுட்டியசினை நிலைக்கிளவி,

பன்மைகூறுங்கடப்பாடிலவே
தம்வினைக் கியலு மெழுத்தலங் கடையே.

CHAPTER II

வேற்றுமையியல்

CASES IN GENERAL AND THEIR SIGNIFICATIONS.

1. வேற்றுமை தாமே ஏழென மொழிப. 34th பெயரி Nun.
2. விளிகொள வதன்கண் விளியோ டெட்டே. 1st வேற்று. Elak.
3. அவைதாம்
பெயர்ஐ யொடுகுஇன் அதுகண்விளி யென்னு மீற்ற.
4. அவற்றுள்
எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே.
5. பொருண்மைச் சுட்டல் வியங்கோள் வருதல் வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல் பண்புகொள வருதல் பெயர் கொளவருதலென்றன்றியஅனைத்தும் பெயர்ப்பயனிலையே. 38th பெயரி. Nun 12th வேற்று. Elak.
6. பெயரி னாகிய தொகையு மாருளவே
அவ்வு முரிய அப்பா லான.
7. எவ்வயிற்பெயரும் வெளிப்படத்தோன்றி
அவ்விய னிலையல் செவ்வி தென்ப.
8. கூறிய முறையி னுருபுநிலை திரியா
தீறு பெயர்க்காகு மியற்கைய வென்ப.
9. பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழினிலை யொட்டு மொன்றலங் கடையே. 18th பெயரி Nun.
10. இரண்டாகுவதே ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி யெவ்வழி வரினும் வினையே வினைக்குறிப் பவ்விருமுதலிற் றோன்றுமென்ப. 39th பெயரி Nunnool.
11. காப்பி னொப்பி னூர்தியி னிழையி
னொப்பிற் புகழிற் பழியி னென்றா
பெறலி னிழவிற் காதலின் வெகுளியிற்
செறலினு வத்தலிற் கற்பி னென்றா
வறுத்தலிற் குறைத்தலிற் றொகுத்தலிற் பிரித்தலி
னிறுத்தலி னளவினெண்ணி னென்றா வாக்கலிற்
சாதலிற் செலவிற் கன்றலி னோக்கலினஞ் சலிற்

சிதைப்பினென்றா வன்னபிறவுமம்
முதற்பொருள் வென்ன கிளவியும் தன்பால் வென்மனார்.
39th பெயரி Nun.19th வேற்று.Elak.

12. மூன்றாகுவது
ஒடுவெனப் பெரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி யனைமுதற் றதுவே.40 th பெயரி Nun.

13. அதனினியற லுதற்றகுகிளவி
யதன்வினைப் புடுத்த லதனினாத லதனிற்கோடல
தனொடுமயங்க லத்னோடியைந்த
வொருவினைக்கிளவி யதனொடியைந்த வேறு வினைக்
கிளிவி யதனோ டியைந்த வொப்பலொப்புரை யின்னானேது
வீங்கென வரூஉ மன்ன பிறவுமதன்பாலவென்மனார்.
21st & 22nd வேற்றுமையியல் Elakkanakottu.

14. நான்காகுவதே, குவெனப்பெயரியவெற்றுமைக்கிளவி,
யெப்பொருளாயினுங் கொள்ளுமதுவே,41st பெயரி Nun.

15. அதற்குவினையுடைமையி, னதற்குடம்படுதலி, னதற்குப்படு
பொருளினதுவாகிளவியி,உதற்கியாப்புடைமையினதற்
பொருட்டாதலி, னட்பிற்பகையிற்காதலிற் சிறப்பினென்அப்
பொருட்கிளவியும்அதன் பாலவென்மனார். 24th வேற்றுமை
யியல் Elakkanakottu.

16. ஐந்தாகுவதே, இன்னெனப்பெயரிய வேற்றுமைக்கிளவி,
இதனினிற்றிதுவென்னுமதுவே. 42 பெயரி. Nun.

17. வண்ணம் வடிவே யளவே சுவையே தன்மைவெண்மை
யச்சமென்றா நன்மைதீமை சிறுமை பெருமை வன்மை
மென்மை கடுமையென்றாமுதுமையிளமை சிறுத்தலிழித்தல்,
புதுமை பழமையாக்கமென்றா வின்மையுடைமை
நாற்றந்தீர்தல் பன்மை சின்மை பற்றுவிடுதலென் றன்ன
பிறவும் தன்பாலவென் மனார். 26 வேற்று.Elak.

18. ஆறாகுவதே, அதுவெனப்பெயரிய வேற்றுமைக்கிளவி,
தன்னினும் பிறிதினுமிதனதிதுவென்னு மன்னகிளவிக்
கிழமைத்ததுவே. 43 பெயரி.19th பெயரி Nun.

19. இயற்கையினுடைமையின் முறைமையிற்கிழமையிற்
செயற்கையின் முதுமையின் வினையினென்றாகருவி
யிற்றுணையிற் கலட்தின்முதலி, னொரு வழியுறுப்பிற்
குழுவினென்றா தெரிந்துமொழிச் செய்தியினிலையின்
வாழ்ச்சியிற் றிரிந்துவேறுபேஉம் பிறவுமன்னகூறிய மருங்
கிற்றேன் றுங்கிளவி யாறன்பால வென்மனார்புலவர். 28th
வேற்று. Elak.

20. ஏழாகுவதே. கண்ணெனப்பெயரிய வேற்றுமைக்கிளவி,
வினைசெய்யிடட்தினிலட்திற்காலட்தினனைவகைக்

குறிப்பிற் றேன்றுமதுவே. 44 பெயரி. Nun.

21. கண்கால்புறமகமுள்ளுழைகீழ்மேல்
பின்சாரயல்புடைதேம்வகைஇயனாஅ
அமுன்னிடைகடைதலைவலமிடமெனாஅ
வன்னபிறவுமதன்பால வென்மனார். 45 பெயரி. Nun.

22. வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
யீற்றுநின் றியலுந்தொகை வயிற்பிரிந்து
பல்லா றாகப்பொருள் புணர்ந்திசைக்கு
மெல்லாச் சொல்லு முரிய வென்ப.

CHAP. III

வேற்றுமை மயங்கியல்

OF INTERCHANGE AND SUBSTITUTION OF CASES.

1. கரும மல்லாச் சார்பென் கிளவிக்
குரிமையு முடைத்தே கண்ணென் வேற்றுமை.

2. சினைநிலைக் கிளவிக் கையுங் கண்ணும்
வினைநிலை யொக்கு மென்மனார் புலவர்.

3. கன்றலுஞ் செலவு மொன்றுமார் வினையே.

4. முதற்சினைக் கிளவிக் கதுவென் வேற்றுமை,
முதற்கண் வரினே சினைக்கை வருமே. 33 பெயரி.Nun.

5. முதன்முன் ஐவரிற் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருத றெள்ளி தென்ப.

6. முதலுஞ் சினையும் பொருள்வேறு படாஅ
நுவலுங்காலைச் சொற்குறிப்பினவே.33 பெயரி.Nun

7. பிண்டப் பெயரு மாயிய றிரியா
பண்டியன் மருங்கின மரீஇய மரபே.

8. ஒருவினையொடுச் சொல்லுயர்பின் வழித்தே.

9. மூன்றனு மைந்தனுந் தோன்றக் கூறிய
வாக்க மொடுபுணர்ந்த வேதுக் கிளவி
நோக்கோ ரனைய வென்மனார் புலவர்.

10. இரண்டன் மருங்கி னோக்க னோக்கமவ்
விரண்டன் மருங்கி னேதுவு மாகும்.

11. அதுவென் வேற்றுமை யுயர்திணைத் தொகைவயின்
அதுவெ னுருபுகெடக் குகரம் வருமே.

12. தடுமாறு தொழிற்பெயர்க்கிரண்டு மூன்றுங்

கடிநிலை யிலவே பொருள் வயினான.

13. ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப உணரு"மோரே.

14. ஓம்படைக் கிளவிக் கையு மானுந்
தாம்பிரி விலவே தொகைவரு காலை.

15. ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்
கேழு மாகு முறை நிலத்தான.

16. குட்தொகவரூஉங் கொடையெதிர்கிளவி,
அப்பொருளாறற்குரிட்துமாகும்.

17. அச்சக் கிளவிக் கைந்து மிரண்டும்,
எச்ச மிலவே பொருள்வ யினான.

18. அன்ன பிறவுந் தொன்னெறி பிழையா
துருபினும் பொருளினும் மெய்தடு மாறி
இருவயி னிலையும் வேற்றுமை யெல்லாந்
திரிபிட னிலவே தெரியு மோர்க்கே.

19. உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
யொருசொன் னடைய பொருள்சென் மருங்கே.

20. இறுதியு மிடையு மெல்லா வுருபும்
நெறிபடு பொருள்வயி நிலவுதல் வரையார்.

21. பிறிது பிறிதேற்றலு முருபுதொக வருதலும்,
நெறிப்பட வழங்கிய வழிமருங் கென்ப.

22. ஐயுங் கண்ணு மல்லாப்பொருள் வயின்யான,
மெய்யுருபு தொகாஅ விறுதி.

23. யாதனுருபிற் கூறிற்றாயினும் பொருள்சென் மருங்கின்
வேற்றுமை சாரும்.see 60th Soot. பெயரியல்.Nunnool.

24. எதிர்மறுத்து மொழியினுந் தத்த மரபிற்
பொருணிலை திரியா வேற்றுமைச் சொல்லே.

25. குஐஆனென வரூஉ மிறுதி
அஒடு சிவணுஞ் செய்யு ளுள்ளே. 61 பெயரியல். Nunnool.

26. அ எனப் பிறத்த லஃறிணை மருங்கிற்
குஉம்ஐ யுமில்லென மொழிப.

27. இதனதிது விற்றென்னுங் கிளவியு
மதனைக் கொள்ளும் பொருள்வ யினானு,
மதனாற் செயற்படற் கொத்த கிளவியு
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பி னாக்கமுங்
காலத்தி னறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியுந் தீர்ந்துமொழிக் கிளவியு
மன்ன பிறவுநான் கனுருபிற்
றென்னெறி மரபின் தோன்ற லாமே.

28. ஏனை யுருபு மன்ன மரபின

மான மிலவே சொன்முறை யான.

29. வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலங் கரவி யென்றா
வின்னதற் கிதுபய னாக வென்னு
மன்ன மரபி னிரண்டொடுந் தொகைஇ
யாயெட் டென்ப தொழின் முதனிலையே.

30. அவைதாம்; வழங்கியன் மருங்கிற் றுவகுன்றும்.

31. முதலிற் கூறுஞ் சினையறி கிளவியுஞ்
சினையிற் கூறு முதலறி கிளவியும்,
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள்பெயரு
மியன்றது மொழிதலு மிருபெய ரொட்டும்
வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ
யனைமர பினவே யாகுபெயர்க் கிளவி. 33 பெயரி. Nun.

32. அவைதாம்
தத்தம் பொருளவயிற் றம்மொடு சிவணலு
மொப்பில வழியாற் பிறிதுபொருள் சுட்டலு
மப்பண் பினவே நுவலுங் காலை
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும். 33 பெயரி. Nun.

33. அளவு நிறையு மவற்றொடு கொள்வழி
யுளவென மொழிப வுணர்ந்தி சினோரே. 33 பெயரி. Nun

34. கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்த வற்றியலா னுணர்ந்தனர் கொளலே.

CHAP. IV

விளிமரபு

DOCTRINE OF VOCATIVE CASE

1. விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்று மியற்கைய வென்ப.

2. அவ்வே
இவ்வென வறிதற்கு மெய்பெறக் கிளப்ப.
3. அவைதாம்
இ உ ஐ ஒ வென்னு மிறுதி
யப்பா னான்கே யுயர்திணை மருங்கின
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே.
4. அவற்றுள்
இ ஈ யாகும் ஐயா யாகும்.
5. ஒவும் உவ்வு மேயொடு சிவணும்.
6. உகரந் தானே குற்றிய லுகரம்
7. ஏனை யுயிரே யுயர்திணை மருங்கிற்
றாம்விளி கொள்ளா வென்மனார் புலவர்.
8. அளபெடை மிகூஉ மிகர விறுபெயர்
இயற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப.
9. முறைப்பெயர் மருங்கி னையெ னிறுதி
ஆவொடு வருதற் குரியவு முளவே.
10. அண்மைச் சொல்லே யியற்கைய வாகும்.
11. னரலள வென்னு மந்நான் கென்ப,
புள்ளி யிறுதி விளிகொள் பெயரே.
12. ஏனைப் புள்ளி யீறு விளிகொள்ளா.
13. அவற்றுள்
அன்னென் னிறுதி யாவா கும்மே.
14. ஆண்மைச் சொல்லிற் ககர மாகும்.
15. ஆனென் னிறுதி யியற்கை யாகும்.
16. தொழிலிற் கூறு மானெ னிறுதி,
யாயாகும் மேவிளி வயினான.
17. பண்புகொள் பெயரு மதனோ ரற்றே.
18. அளபெடைப் பெயரே யளபெடை யியல.
19. முறைப்பெயர்க் கிளவியே யொடுவருமே.
20. தானென் பெயருஞ் சுட்டுமுதற் பெயரும்,
யானென் பெயரும் வினாவின் பெயரு,
மன்றி யனைத்தும் விளிகொளிலவே.
21. ஆரும் அருவு மீரொடு சிவணும்.
22. தொழிற்பெய ராயினெ காரம் வருதலும்,
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே.
23. பண்புகொள் பெயரு மதனோ ரற்றே.
24. அளபெடைப் பெயரே யளபெடை யியல.
25. சுட்டு முதற்பெயரே முற்கிளந் தன்ன.
26. நும்மின் றிரிபெயர் வினாவின் பெயரென்
றம்முறை யிரண்டும் அவற்றவற் றியல்வே.

27. எஞ்சிய விரண்டி னிறுதிப் பெயரே,
நின்ற வீற்றய னீட்டம் வேண்டும்.
28. அயனெடி தாயி னியற்கை யாகும்.
29. வினையினும் பண்பினும்
நினையத் தோன்று மானெ னிறுதி
யாயாகும் மேவிளி வயினான.
30. முறைப்பெயர்க் கிளவி முறைப்பெ யரியல.
31. சுட்டு முதற்பெயரும் வினாவின் பெயரும்
முற்கிளந் தன்ன வென்மனார் புலவர்.
32. அளபெடைப் பெயரே யளபெடை யியல.
33. கிளந்த விறுதி யஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங் காலை
34. புள்ளியு முயிரு மிறுதி யாகிய
அஃறிணை மருங்கி னெல்லாப் பெயரும்
விளிநிலை பெறூஉங் காலந் தோன்றிற்
றெளிநிலை யுடையவே காரம் வரலே.
35. உளவெனப் பட்ட வெல்லாப் பெயரு
மளபிறந் தனவே விளிக்குங் காலை
சேய்மை யினிசைக்கும் வழக்கத் தான.
36. அம்ம வென்னு மசைச்சொ னீட்ட
மம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியுமோரே.
37. தந்நுந எனவவை முதலாகித்
தன்மை குறித்த னரளவெ னிறுதியும்
அன்ன பிறவும் பெயர்நிலை வரினே
யின்மை வேண்டும் விளியொடு கொளலே.

N.B. Compare from 46th to 57th sootrum of பெயரியல், Nunnool.

CHAPTER V.

பெயரியல்.

OF NOUNS.

1. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே.

2. பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலுஞ்,
சொல்லி னாகு மென்மனார் புலவர்.
3. தெரிபுவேறு நிலையலுங் „குறிப்பிற் றோன்றலும்,
இருபாற் றென்ப பொருண்மை நிலையே.
4. சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்தி சினோரே. 13 பெயரியல் Nun.
5. இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு,
மவற்று வழிமருங் கிற்றோன்று மென்ப. 23பெயரியல் Nun
6. அவற்றுள்
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு
மாயிரு திணைகு மோரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே 18 பெயரியல் Nunnool.
7. இருதிணைப் பிரிந்த வைம்பாற் கிளவிக்கு,
முரியவை யுரிய பெயர்வயி னான. 13 பதவியல் Nunnool.
8. அவ்வழி
அவனி வனுவனென வரூஉம் பெயரும்,
அவளி வளுவளென வரூஉம்பெயரும்,
அவரிவ ருவரென வரூஉம் பெயரும்,
யான்யாம் நாமென வரூஉம் பெயரும்,
யாவன் யாவள்யாவ ரென்னு,
மாவயின் மூன்றோ டப்பதினைந்தும்,
பாலறி வந்தவுயர் திணைப்பெயரே. 19 பெயரியல் Nun
9. ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்
பெண்மை யடுத்த மகளென் கிளவியும்
பெண்மை யடுத்த மகனென் கிளவியும்
பெண்மை யடுத்த விகர விறுதியு
நம்மூர்ந்து வரூஉ மிகர வைகாரமு
முறைமை சுட்டா மகனு மகளு
மாந்தர் மக்க ளென்னும் பெயரு
மாடூஉ மகடூஉ வாய பெயருஞ்
சுட்டு முதலாகிய வன்னு மானு
மவை முதலாகிய பெண்டென் கிளவியு
மொப்பொடு வரூஉங் கிளவியுமொடு தொகைஇ
அப்பதினைந்து மவற்றோ ரன்ன.
10. எல்லாரு மென்னும் பெயர்நிலைக் கிளவியு,
மெல்லீரு மென்னும் பெயர்நிலைக் கிளவியும்,
பெண்மை யடுத்த மகனென் கிளவியு,
மன்ன வியல வென்மனார் புலவர்.
11. நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே,

வினைப்பெய ருடைப்பெயர் பண்புகொள் பெயரே,
பல்லோர் குறித்த முறைநிலைப் பெயரே,
பல்லோர்குறித்த திணைநிலைப்பெயரே
கூடி வருவழக்கி னாடியற் பெயரே
யின்றிவ ரென்னு மெண்ணியற் பெயரோ
டன்றி யனைத்து மவற்றியல் பினவே.

12. அன்ன பிறவு முயர்திணை மருங்கிற்
பன்மையு மொருமையும் பாலறி வந்த
வின்ன பெயரு மத்திணை யவ்வே.
இன்ன என்ன

13. அதுவிது வுதுவென வரூஉம் பெயரு
மவைமுத லாகிய வாய்தப் பெயரு
மவையிவை யுவையென வரூஉம் பெயரு
மவைமுத லாகிய வகரப் பெயரும்
யாது யாயாவை யென்னும் பெயரு
மாவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த வஃறிணைப் பெயரே. 22 பெயரியல். Nun

14. பல்ல பலசில வென்னும் பெயரு
முள்ள வில்ல வென்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரு
மினைத்தெனக் கிளக்கு மெண்ணுக் குறிப்பெயரு
மொப்பி னாகிய பெயர்நிலை யுளப்பட
வப்பா லொன்பதும் அற்றோ ரன்ன. 23 பெயரியல். Nun

15. கள்ளொடு சிவணு மவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே.

16. அன்ன பிறவு மஃறிணை மருங்கிற்
பன்மையு மொருமையும் பாலறி வந்த
வென்ன பெயரு மத்திணை யவ்வே.
என்ன = அன்ன

17. தெரிநிலை யுடைய அஃறிணை யியற்பெய
ரொருமையும் பன்மையும் வினையொடு வரினே.
24 பெயரியல். Nun

18. இருதிணைச் சொற்கு மோரன்ன வுரிமையிற்
றிரிபு வேறுபடூஉ மெல்லாப் பெயரு
நினையுங் காலைத் தத்த மரபின
வினையொ டல்லது பாறெரி பிலவே.

19. நிகழூஉ நின்ற பலர்வரை கிளவியி
னுயர்திணை யொருமை தோன்றலு முரித்தே
யன்ன மரபின் வினைவயி னான.

20. இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே

முறைப்பெயர்க்கிளவிதாமேதானே
யெல்லாம் நீயிர் நீயெக் கிளந்து
சொல்லிய வல்ல பிறவு மாஅங்
கன்னவை தோன்றின வற்றொடுங் கொளலே. 25 பெயரி.
Nun

21. அவற்றுள்
நான்கே யியற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி யிரண்டா கும்மே
யேனைப் பெயரே தத்த மரபின. 26 பெயரியல் Nunnool.

22. அவைதாம்
பெண்மை யியற்பெய ராண்மை யியற்பெயர்
பன்மை யியற்பெய ரொருமை யியற்பெயரென்
றந்நா கென்ப வியற்பெயர் நிலையே.

23. பெண்மைச் சினைப்பெய ராண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயரென்
றந்நான்கென்ப சினைப்பெயர் நிலையே.

24. பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
யாண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
யொருமை சுட்டிய சினைமுதற் பெயரென்
றந்நான் கென்ப சினைமுதற் பெயரே.

25. பெண்மை முறைப்பெய ராண்மை முறைப்பெயரென்
றாயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே. 26 பெயரியல்.
Nunnool.

26. பெண்மை முறைப்பெய ராண்மை முறைப்பெயரென்
றாயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே. 26 பெயரியல்.
Nunnool.

27. ஆண்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றற்கு மொருவற்கு மொன்றிய நிலையே. 27
பெயரியல். Nunnool.

28. பன்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றே பலவே யொருவ ரென்னு,
மென்றிப் பாற்கு மோரன் னவ்வே. 27 பெயரியல்.
Nunnool.

29. ஒருமை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றற்கு மொருவர்க்கு மொன்றிய நிலையே. 27
பெயரியல். Nunnool.

30. தாமென்கிளவி பன்மைக்குரித்தே. 30 பெயரியல்
Nunnool.

31. தானென்கிளவி யொருமைக்குரிட்தே.

32. எல்லாமென்னும் பெயர்நிலைக்கிளவி,
பலவழி நுதலிய நிலைத்தாகும்.

33. தன்னுள்ளுறுத்த பன்மைக் கல்ல,
துயர்திணை மருங்கி னாக்க மில்லை

34. நீயிர்நீயெனவரூஉங்கிளவி,
பாறெரிபிலவேயுடன் மொழிப்பொருள.

35. அவற்றுள்;
நீயென் கிளவி யொருமைக் குரித்தே. 28 பெயரி.Nunnool.

36. ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே. 28 பெயரியல்.
Nunnool.

37. ஒருவ ரென்னும் பெயர்நிலைக் கிளவி,
யிருபாற்கு முரித்தே தெரியுங் காலை. 32 பெயரியல்.
Nunnool.

38. தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும்.

39. இன்ன பெயரே யிவையெனல் வேண்டின்
முன்னஞ் சேர்த்தி முறையி னுணர்தல்.

40. மகடூஉ மருங்கிற் பாறிரி கிளவி,
மகடூஉ வியற்கை தொழில் வயினான.

41. ஆவோ வாகும் பெயருமா ருளவே,
யாயிட னறிதல் செய்யு ளுள்ளே.

42. இறைச்சிப் பொருள்வயிற் செய்யுளுட் கிளக்கு,
மியற்பெயர்க் கிளவி யுயர்திணைச் சுட்டா,
நிலத்துவழி மருங்கிற் றோன்ற லான.

43. திணையொடு பழகிய பெயரலங் கடையே.

CHAPTER VI வினையியல்

OF VERBS

1. வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது,
நினையுங் காலைக் காலமொடுதோன்றும்.1stவினையியல்
Nunnool.

2. காலந் தாமே மூன்றென மொழிப. 31st பொதுவியல்.
Nunnool.

3. இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றா
வம்முக் காலமுங் குறிப்பொடு கொள்ளு
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே. 2nd வினையியல்.
Nunnool.

4. குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்,
காலமொடு வரூஉம் வினைச்சொல் லெல்லா
முயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு
மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே. 4th and 5th Soots
வினையியல். Nunnool.

5. அவைதாம்;
அம்ஆம் எம்ஏம் என்னுங் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற வென்னு,
மந்நாற் கிளவியோ டாயெண் கிளவியும்,
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே. 13th Soot.
வினையியல் Nunnool.

6. கடதற வென்னு,
மந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ
டென்னே னல்லென வரூஉ மேழுந்
தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே. 12th வினை.

7. அவற்றுள்
செய்கென கிளவி வினையொடு முடியினு
மவ்விய றிரியா தென்மனார் புலவர். 14 வினையியல்
Nunnool.

8. அன்னா னள்ளா ளென்னு நான்கு,
மொருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே. 6th and 7th
வினையியல் Nunnool.

9. அர் ஆர் பஎன வரூஉ மூன்றும்,
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே. 8வினையியல்
Nunnool.

10. மாரைக் கிளவியுமு பல்லோர் படர்க்கை,
காலக் கிளவியொடு முடியு மென்ப. 8 வினையியல்
Nunnool.

11. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வந்நா லைந்து மூன்று தலையிட்ட,

முன்னுறக் கிளந்த வுயர்திணை யவ்வே.

12. அவற்றுள்
பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி
யெண்ணியன் மருங்கிற் றிரிபவை யுளவே.

13. யாஅ ரென்னும் வினாவின் கிளவி
யத்திணை மருங்கின் முப்பாற்கு முரித்தே.

14. பாலறி மரபி னம்மூ வீற்றும்
ஆவோ வாகுஞ் செய்யு ளுள்ளே 2nd Soot.பொதுவியல் Nunnool.

15. ஆயென் கிளவியு மவற்றொடு கொள்ளும்.

16. அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானுங்
கண்ணென் வேற்றுமை நிலத்தினானு
மொப்பி னானும் பண்பி னானுமென்
றப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும்.

17. அன்மையி னின்மையி னுண்மையின் வன்மையி
னன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளு
மென்ன கிளவியுங் குறிப்பே காலம்.

18. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வன்ன மரபிற் குறிப்பொடு வரூஉங்
காலக் கிளவி யுயர்திணை மருங்கின
மேலைக் கிளவி யொடுவேறு பாடிலவே.

19. அஆ வஎன வரூஉ மிறுதி
யப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை.

20. ஒன்றன் படர்க்கைத் தடற வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

21. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வம்மூ விரண்டு மஃறிணை யவ்வே.

22. அத்திணை மருங்கி னிருபாற் கிளவிக்கு
மொக்கு மென்ப எவனென் வினாவே.

23. இன்றில வுடைய வென்னுங் கிளவியு
மன்றுடைத் தல்ல வென்னுங் கிளவியும்
பண்புகொள் கிளவியு முளவென் கிளவியும்
பண்பி னாகிய சினைமுதற் கிளவியு
மொப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
யப்பாற் பத்துங் குறிப்பொடு கொள்ளும்.

24. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வன்ன மரபிற் குறிப்பொடு வரூஉங்
காலக் கிளவி யஃறிணை மருங்கின

மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

25. முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யுஞ் செய்த வென்னு
மம்முறை நின்ற வாயெண் கிளவியும்
பிரிவு வேறுபடூஉஞ் செய்திய வாகி,
யிருதிணைச் சொற்குமோரன்ன வுரிமையே. 16th and 17th and 18th and 19th and 20th வினை Nunnool.

26. அவற்றுள்
முன்னிலைக் கிளவி,
இஐ யாயென வரூஉ மூன்று
மொப்பத் தோன்று மொருவற்கு மொன்றற்கும்.

27. இர்ஈர் மின்னென வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினுஞ்
சொல்லோ ரனைய வென்மனார் புலவர்.

28. எஞ்சிய கிளவி யிடத்தொடு சிவணி
யைம்பாற்கு முரிய தோன்ற லாறே.

29. அவற்றுள்
முன்னிலை தன்மை யாயீரி டத்தொடு
மன்னா தாகும் வியங்கோட் கிளவி.

30. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா.

31. செய்துசெய்யுச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி. 24 வினை.

32. பின்முன் கால்கடை வழியிடத் தென்னு
மன்ன மரபிற் காலங் கண்ணிய
வென்ன கிளவியு வற்றியல் பினவே.

33. அவற்றுள்
முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின. 25th வினை.

34. அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றிற்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய வென்மனார் புலவர். 26th வினை Nunnool.

35. ஏனை யெச்சம் வினைமுத லானு
மாண்டு வந்தியையும் வினைநிலை யானுந்
தாமியன் மருங்கின் முடியு மென்ப.

36. பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினு
முன்னது முடிய முடியுமன் பொருளே.

37. நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையு முளப்பட
அவ்வறு பொருட்கு மோரன்ன வுரிமைய
செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே.

38. அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்று முரித்தே.

39. பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா.

40. தத்த மெச்சமொடு சிவணுங் குறிப்பி
னெச்சொல் லாயினு மிடைநிலை வரையார்.

41. அவற்றுள்
செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு,
மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகரம்
அவ்விட னறித லென்மனார் புலவர்.

42. செய்தெ னெச்சத் திறந்த கால
மெய்தி டனுடைத்தே வாராக் காலம்.

43. முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை
எம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்.

44. வாராக் காலத்து நிகழுங் காலத்து
மோராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
யிறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள வென்மனார் புலவர்.

45. மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
யப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து,
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே.

46. இதுசெயல் வேண்டு மென்னுங் கிளவி
யிருவயி னிலையும் பொருட்டா கும்மே
தன்பா லானும் பிறன்பா லானும்.

47. வன்புற வரூஉம் வினாவிடை வினைச்சொல்
லெதிர்மறுத் துணர்த்துதற் குரிமையு முடைத்தே.

48. வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
யிறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்று
மியற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை.

49. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே.

50. இறப்பே யெதிர்வே யாயிரு காலமுஞ்
சிறப்பத் தோன்று மயங்கு மொழிக்கிளவி.

51. ஏனைக் காலமு மயங்குதல் வரையார்.

CHAPTER VII.

இடையியல்

OF PARTICLES IN GENERAL

1. இடையெனப் படுபெய ரொடும் வினையொடும்,
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே, 1 இடையியல்
Nunnool.

2. அவைதாம்;
புணரிய னிலையிடைப் பொருணிலைக் குதநவும்,
வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்,
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவு
மசைநிலைக் கிளவி யாஅகி வருநவும்.
இசைநிறைக் கிளவி யாஅகி வருநவும்,
தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவு,
மொப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்,
றப்பண் பினவே நுவலுங் காலை.

3. அவைதாம்
முன்னும் பின்னு மொழியடுத்து வருதலுந்,
தம்மீறு திரிதலும் பிறிதவ ணிலையலு,
மன்னவை யெல்லா முரிய வென்ப.

4. கழிவே யாக்க மொழியிசைக் கிளவியென்,
றம்மூன் றென்பம ன்னைச் சொல்லே. Particle மன்.

5. விழைவே கால மொழியிசைக் கிளவியென்,
றம்மூன் றென்ப தில்லைச் சொல்லே. Particle
தில்லை.

6. அச்சம் பயமிலி காலம் பெருமையென்,
றப்பா னான்கே கொன்னைச் சொல்லே. Particle
கொன்.

7. எச்சஞ் சிறப்பைய மெதிர்மறை,
முற்றே யெண்ணே தெரிநிலை யாக்கமென்,

றப்பா லெட்டே யும்மைச் சொல்லே. Particle உம்.

8. பிரிநிலை வினாவே யெதிர்மறை மொழியிசை,
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ,
யிருமூன் றென்ப வோகா ரம்மே. Particle ஒ.

9. தேற்றம்வினாவேபிரிநிலையெண்ணே,
யீற்றசையிவ்வைந்தேகாரம்மே. Particle ஏ.

10. வினையே குறிப்பே யிசையே பண்பே,
யெண்ணே பெயரோ டவ்வறு கிளவியுங்,
கண்ணிய நிலைத்தே யெனவென் கிளவி. Particle என.

11. என்றென் கிளவியு மதனோ ரற்றே. Particle என்று.

12. விழைவின தில்லை தன்னிடத் தியலும்.

13. தெளிவி னேயுஞ் சிறப்பி னோவு
மளபி னெடுத்த விசைய வென்ப.

14. மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
யப்பா லிரண்டென மொழிமனார் புலவர். Particle மற்று.

15. எற்றென் கிளவி யிறந்த பொருட்டே. Particle எற்று.

16. மற்றைய தென்னுங் கிளவி தானே
சுட்டு நிலையொழிய இனங்குறித் தன்றே. Particle மற்றையது.

17. மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும். Particle மன்ற.

18. தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே. Particle தஞ்ச.

19. அந்தி லாங்க வசைநிலைக் கிளவியென்
றாயிரண் டாகு மியற்கைத் தென்ப. Particles அந்தில் and ஆங்க.

20. கொல்லே யையம். Particle கொல்.

21. எல்லே விளக்கம். Particle எல்.

22. இயற்பெயர் முன்ன •ராரைக் கிளவி,
பலர்க் குரியெழுத்தின் வினையொடு முடிமே.

23. அசைநிலைக் கிளவி யாகு வழியறிதல். Particle ஆங்க.

24. ஏவுங் குரையு மிசைநிறை யசைநிலை,
யாயிரண் டாகுமியற் கைய •வென்ப. Particles ஏ and குரை.

25. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல். Optative Particle மா.

26. மியா யிகமோ மதி யிகுஞ்சின் னென்னு,
மாவயி னாறு முன்னிலை யசைச்சொல். Second Personal Particle மியா இக மோ, &c.

27. அவற்றுள்
இருமுஞ் சின்னு மேனை யிடத்தொடுந்
தகுநிலை யுடைய வென்மனர் புலவர் Expletives இகும் and சின்.

28. அம்ம கேட்பிக்கும். Expletives அம்ம.

29. ஆங்க வுரையசை. Ecpletive ஆங்க.

30. ஒப்பில் போலியு மப்பொருட் டாகும். Particle போலும்.

31. யாகா, பிறபிறக் கரோபோ மாதென வரூஉ,
மாயேழ் சொல்லு மசைநிலைக் கிளவி. Expletives simple, 7 in Number.

32. ஆக வாகலென்ப தென்னும் ஆவயின் மூன்றும்
பிரிவிலசைநிலை.

33. ஈரள பிசைக்கு மிறுதி யிலுயிரே
யாயி யனிலையுங் காலத் தானு
மளபெடை நிலையுங் காலத் தானு
மளபெடை யின்றித் தான்வரூஉங் காலையு
முளவென மொழிப பொருள்வேறு படுதல்
குறிப்பி னிசையா னெறிப்படத் தோன்றும். A Remark upon ஒ. See 8th Soot above.

34. நன்றீற் றேவு மன்றீற் றேவு
மந்தீற் றேவு மன்னீற் றேவு
மனன்பிறவுங் குறிப்பொடு கொள்ளும் Particles
நன்றே, அன்றே, அந்தோ, &c.

35. எச்ச வும்மையு மெதிர்மறை யும்மையுந்,
தத்த முண்மயங்கு முடனிலை யிலவே.

36. எஞ்சுபொருட்கிளவி செஞ்சொலாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்

37. முற்றிய வும்மைத் தொகைச்சொன் மருங்கி
னெச்சக் கிளவி யுரித்து மாகும்.

38. ஈற்று நின்றிசைக் குமேயெ னிறுதி
கூற்று வயினோ ரளபாகலு முரித்தே

39. உம்மை யெண்ணு மெனவெ னெண்ணுந்
தம்வயிற் றொகுதி கடப்பா டிலவே.

40. எண்ணே கார மிடையிட்டுக் கொளினு
மெண்ணுக் குறித்தியலு மென்மனார் புலவர்.

41. உம்மை தொக்க வெனாவென் கிளவியு
மாவீ றாகிய வென்றென் கிளவியு
மாயிரு கிளவியு மெண்ணு வழிபட்டன.

42. அவற்றின் வரூஉ மெண்ணணி னிறுதியும்
பெயர்க்குரி மரபிற் செவ்வெ ணிறுதியு
மேயி னாகிய வெண்ணணி னிறுதியும்
யாவயின் வரினுந் தொகையின் றியலா.

43. உம்மை யெண்ணி னுருபுதொகல் வரையார்.

44. உம்முந் தாகு மிடனு மாருண்டே. உ– ம்:- As உந்து.

45. வினையொடு நிலையினு மெண்ணணி னிலைதிரியா
நினையல் வேண்டு மவற்றவற் றியல்பே.

46. என்று மெனவு மொடுவுந் தோன்றி
யொன்று வழியுடைய வெண்ணினுட் பிரிந்தே.

47. அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த வியல வாயினும்,
வினையினும் பெயரினு நினையத் தோன்றித்
திரிந்து வேறுபடினுந் தெரிந்தனர் கொளலே.

48. கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்,
கிளந்த வற்றிய லானுணர்ந்தனர் கொளலே.

CHAPTER VIII

உரியியல்

OF ATTRIBUTIVES

1. உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினு மெய்தடு மாறி
யொருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் லொருபொருட் குரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மரபிற் சென்றிலை மருங்கி
னெச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்.

2. வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா வுரிச்சொன் மேன.

3. அவைதாம்
உறுதவ நனியென வரூஉ மூன்றும்

மிகுதி செய்யும் பொருள வென்ப Ex. உறு, தவ, நனி.
4. உருவுட் காகும் புரையுயர் பிற்கும். Ex. உரு, புரை.
5. குருவுங் கெழுவு நிறனா கும்மே. Ex. குரு, கெழு.
6. செல்ல லின்ன லின்னா மையே. Ex. சொல்லல், இன்னல்.
7. மல்லல் வளனே யேபெற் றாகும். Ex. மல்லல்.
8. உகப்பே யுயர்தலு வப்பே யுவகை. Ex. உகப்பு, உவப்பு.
9. பயப்பே பயனாம் பசப்பு நிறனாகும். Ex. பயப்பு, பசப்பு.
10. இயைபே புணர்ச்சி யிசைப்பிசை யாகும். Ex. இயைபு, இசைப்பு.
11. அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி. Ex. அலமரல், தெருமரல்.
12. மழவுங் குழவு மிளமைப் பொருள். Ex. மழ, குழ.
13. சீர்த்தி மிகுபுகழ் மாலை யியல்பே.
14. கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும், Ex. கூர், கழி.
15. கதழ்வுந் துணைவும் விரைவின் பொருள. Ex.கதழ்வு, துணைவு.
16. அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும்.
17. வார்தல் போக லொழுகன் மூன்று
நேர்பு நெடுமையுஞ் செய்யும் பொருள. Ex. வார்தல், போகல், ஒழுகல்.
18. தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்.
19. கெடவரல் பண்ணை யாயிரண்டும் விளையாட்டு.
20. தடவுங் கயவு நளியும் பெருமை. Ex. தட, கய, நளி.
21. அவற்றுள்
தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்
கயவென் கிளவி மென்மையுஞ் செய்யும்
நளியென் கிளவி செறிவு மாகும். Ex. தட, கய, நளி.
22. பழுது பயமின்றே சாயன் மென்மை
முழுதென் கிளவி யெஞ்சாப் பொருட்டே. Ex. பழுது, முழுது.
23. வம்புநிலை யின்மை மாதர் காதல்
நம்பு மேவு நசையா கும்மே.
24. ஓய்த லாய்த னிழற்ற(த்த)ல்சாஅ
யாவயினான்கு முள்ளத்தி னுணுக்கம்.(உள்ளதனுணுக்கம்)
25. புலம்பே தனிமை துவன்று நிறைவாகு
முரஞ்சன் முதிர்வே வெம்மை வேண்டல். Ex. புலம்பு, துவன்று, முரஞ்சல், வெம்மை.
26. பொற்பே பொலிவு வறிது சிறதாகு
மேற்ற நினைவுந் துணிவு மாகும்.

27. பிணையும் பேணும் பெட்பின் பொருள. Ex. பிணை, பேண்.
28. பணையே பிழைத்தல் பெருப்பு மாகும். Ex.பணை.
29. *படரே யுள்ளல் செலவு மாகும்.* Ex. படர்.
30. பையுளுஞ் சிறுமையு நோயின் பொருள. Ex. பையுள், சிறுமை.
31. எய்யா மையே யறியா மையே
32. நன்று பெரிதாகும்.
33. தாவே வலியும் வருத்தமு மாகும். Ex. தாவு, or தா.
34. தேவுகொளற் பொருட்டே தெவ்வுப் பகையாகும். Ex. தேவு, தெவ்வு.
35. விறப்பு முறைப்பும் வெறுப்புஞ் செறிவே. Ex. விறப்பு, உறப்பு, வெறுப்பு.
36. அவற்றுள்
விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும்.
37. கம்பலை சும்மை கலியே யழுங்க
லென்றிவை நான்கு மரவப் பொருள.
38. அவற்றுள்
அழுங்க லிரக்கமுங் கேடு மாகும்.
39. கழுமென் கிளவி மயக்கமுஞ் செய்யும். Ex. கழும்.
40. *செழுமை வளனுங் கொழுப்பு மாகும்.*
41. விழுமஞ்
சிறப்புஞ் சீர்மையு மிடும்பையுஞ் செய்யும். Ex.விழுமம்.
42. கருவி தொகுதி கமநிறைந் தியலும்.
43. அரியே யைம்மை கவ்வகத் திடுமே. Ex. அரி, கவ.
44. துவைத்தலுஞ் சிலைத்தலு மியம்பலு மிரங்கலு
மிசைப்பொருட் கிளவி யென்மனார் புலவர்.
45. அவற்றுள்
இரங்கல் கழிந்த பொருட்டு மாகும்.
46. இலம்பா டொற்க மாயிரண்டும் வறுமை. Ex. இலம்பாடு, ஒற்கம்.
47. ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள.
48. கவர்வு விருப்பாகுஞ் சேரே திரட்சி
வியலென் கிளவி யகலப் பொருட்டே. Ex. கவர்வு, சேர், வியல்.
49. பேநா முருமென் வரூஉங் கிளவி
யாமுறை மூன்று மச்சப் பொருள.
50. வயவலி யாகும் வாளொளி யாகும்
துய்யென் கிளவி யறிவின் றிரிபே.
51. உயர்வே யுயங்க லுசாவே சூட்சி
வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம். Ex. உயர்வு,

உசா, வயா.

52. கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள.

53. நிறத்துரு வுணர்த்தற்கு முரிய வென்ப.

54. நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை.

55. புனிறென் கிளவி யீன்றணிமைப் பொருட்டே. Ex. புனிறு.

56. நனவே களனுங் கலமுஞ் செய்யும். Ex. கனவு.

57. மதலே மடனும் வலியு மாகும். Ex. மத.

58. மிகுதியும் வனப்பு மாகலு முரித்தே.

59. புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி. Ex. யாணர்.

60. அமர்தன் மேவல் யாணுக் கவினாகும். Ex. அமர்தல், யாணு.

61. பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள. Ex. பரவு, பழிச்சு.

62. கடியென் கிளவி வரைவே கூர்மை
காப்பே புதுமை விரைவே விளக்கம்
மிகுதி சிறப்பே யச்சமன்றேற் றாயீரைந்து
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே. Ex. கடி

63. ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே.

64. ஐ வியப் பாகு முனைவு முனிவாகும்
வையே கூர்மை யெறுழ் வலியா.

65. மெய்பெறக் கிளந்த வுரிச்சொல் லெல்லா
முன்னும் பின்னும் வருபவை நாடி,
யொத்த மொழியாற் புணர்த்த னருணர்த்த
றத்த மரபிற் றோன்றுமன் பொருளே.

66. கூறிய கிளவிப் பொருணிலை யல்ல
வேறுபிற தோன்றினு மவற்றொடுங் கொளலே.

67. பொருட்குப் பொருடெரியி னதுவரம் பின்றே.

68. பொருட்குத் திரிபில்லை யுணர்த்த வல்லின்.

69. உணர்ச்சி வாயி லுணர்வோர் வலித்தே.

70. மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா.

71. எழுத்துப் பிரிந்திசைத்த லிவணியல் பின்றே.

72. அன்ன பிறவுங் கிளந்தன வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉ
முரிச்சொல் லெல்லாம் பொருட்குறை கூட்ட
வியன்ற மருங்கி னினைத்தென வறியும்
வரம்பு தமக்கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்த லென்மனார் புலவர்.

CHAPTER IX

எச்சவியல்

SYNTAX CONSTRUCTION AND IDIOM.

செய்யுளீட்டச்சொல்.

1. இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொலென்,
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே.
2. அவற்றுள்; இயற்சொற் றாமே,
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்,
தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே.
3. ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்,
வேறுபொருள் குறித்த வொருசொல் லாகியு
மிருபாற் றென்ப திரிசொற் கிளவி.
4. செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி.
5. வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.
6. சிதைந்தன வரினு மியைந்தன வரையார்.
7. அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை,
வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்,
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்.
நீட்டும்வழிநீட்டலுங் குறுக்குமு வழிக்குறுக்கலும்
நாட்டல்வலிய வென்மனார்புலவர்.

பொருள்கோள் OR மொழிபுணரியல்பு.

8. நிரனிறை சுண்ண மடிமறி மொழிமாற்
றவைநான்கென்ப மொழிபுணரியல்பே.
9. அவற்றுள், நிரனிறை தானே,
பெயரினும் வினையினு நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்.
10. சுண்ணந்தானே,
பட்டாங் கமைந்த வீரடி யெண்சீ
ரொட்டு வழியறிந்து துணித்தன ரியற்றல்.
11. அடிமறிச் செய்தி யடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே.
12. பொருடெரி மருங்கி,
னீற்றடி யிறுசீ ரெருத்து வயிற் றிரியுந்,
தோற்றமும் வரையா ரடிமறி யான.
13. மொழிமாற்றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதி ரியைய

முன்னும் பின்னுங் கொள்வழி கொளாஅல். See 114th P. Synopsis.

14. தந்நூஎயெனு மவைமுதலாகிய,
கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா. 18th Soot. பெயரி Nun.

15. இசைநிறை யசைநிலைப் பொருளொடு புணர்தலென்,
றவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே. 27th Soot.

எச்சவியல் தொகைநிலைத்தொடர்சொற்கள்.

16. வேற்றுமைத் தொகையே யுவமைத் தொகையே,
வினையின் தொகையே பண்பின் தொகையே
யும்மைத் தொகையே யன்மொழித் தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே. 10th பொது Nun.

17. அவற்றுள்;
வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல.

18. உவமைத்தொகையே யுவமவியல.

19. வினையின்தொகுதி காலத்தியலும்.

20. வண்ணத்தின் வடிவின ளவிற்சுவை யினென்
றன்ன பிறவும் தன்குண நுதலி
யின்திது வென வரூஉ மியற்கை
யென்ன கிளவியும் பண்பின் றொகையே.

21. இருபெயர் பலபெயர் அளவின் பெயரே,
யெண்ணிற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி,
யெண்ணின் பெயரோ டவ்வறு கிளவியுங்,
கண்ணிய நிலைத்தே யும்மைத்தொகையே.

22. பண்புதொக வரூஉங் கிளவியானு
மும்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானு
மீற்று நின்றியலு மன்மொழித் தொகையே.

23. அவைதா
முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலு
மிருமொழி மேலுமொருங் குடனிலை
யலுமம்மொழிநிலையாதன்மொழிநிலையலு
மந்நான்கென்ப பொருணிலைமரபே.

24. எல்லாத் தொகையு மொருசொன் னடைய.

25. உயர்திணை மருங்கி னும்மைத் தொகையே,
பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்.

26. வாரா மரபின வரக்கூறுதலு
மென்னா மரபின வெனக்கூ றுதலு

மன்னவை யெல்லா மவற்றவற் றியல்பா
னின்ன வென்னுங் குறிப்புரை யாகும்.

27. இசைபடு பொருளே நான்கு வரம்பாகும்
விரைசொல் லடுக்கே மூன்று வரம்பாகும். see 5th soot.
(எச்சவியல்) above.

28. கண்டிரென்றா கொண்டிரென்றா
சென்றதென்றா போயிற் றென்றா
வன்றியனைத்தும் வினாவொடுசிவணி
நின்றவழியசைக்குங் கிளவியென்ப.

29. கேட்டை யென்றா நின்றை யென்றா
காத்தை யென்றா கண்டை யென்றா,
வென்றி வனைத்து முன்னிலை யல்வழி
முன்னுறக் கிளந்த வியல்பா கும்மே

தொகாநிலைச்சொற்கள்.

30. இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றச்
சிறப்புடை மரபி னம்முக் காலமுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னு
மம்மூ விடத்தன வினையினுங் குறிப்பினு
மெய்ம்மை யானு மீரிரண் டாகு
மவ்வா றென்ப முற்றியன் மொழியே. 23rd Soot bghJ Nun.

31. எவ்வயின் வினையு மவ்வயி னிலையும்.

32. அவைதாம்
தத்தங் கிளவி யடுக்குந வரினு
மெத்திறத் தானும் பெயர்எஞ்சு பொருட்கிளவி.

33. பிரிநிலை வினையே பெயரே யொழியிசை
யெதிர்மறை யும்மை யெனவே சொல்லே
குறிப்பே யிசையே யாயீ ரைந்து
நெறிப்படத் தோன்று மெஞ்சு பொருட்கிளவி. 9th Soot
பொதுவியல். Nun

34. அவற்றுள்,
பிரிநிலை யெச்சம் பிரிநிலை முடிபின.

35. வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பு
நினையத் தோன்றிய முடியா கும்மே
யாவயிற் குறிப்பே யாக்கமொடு வருமே.

36. பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே.

37. ஒழியிசை யெச்ச மொழியிசை முடிபின.

38. எதிர்மறை யெச்ச மெதிர்மறை முடிபின.

39. உம்மை யெச்ச மிருவீற் றானுந்
தன்வினை யொன்றிய முடிபா கும்மே.

40. தன்மேற் செஞ்சொல் வரூஉங் காலை
நிகழுங் காலமொடு வாராக் காலமு
மிறந்த காலமொடு வாராக் காலமும்
மயங்குதல் வரையார் முறைநிலை யான.

41. எனவெ னெச்சம் வினையொடு முடிமே.

42. எஞ்சிய மூன்று மேல்வந்து முடிக்கு
மெஞ்சுபொருட் கிளவி யிலவென மொழிப.

43. அவைதாம்
தத்தங் குறிப்பி னெச்சஞ் செப்பும்.

44. சொல்லெ னெச்ச முன்னும் பின்னுஞ்
சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே.

45. அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல். 10th Soot. பெயரி. Nun.

46. மறைக்குங் காலை மரீஇய தொரால்.

47. ஈதா கொடுவெனக் கிளக்கு மூன்று
மிரவின் கிளவி யாகிட னுடைய.

48. அவற்றுள்
ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே
தாவென் கிளவி யொப்போன் கூற்றே
கொடுவென் கிளவி யுயர்ந்தோன் கூற்றே.

49. கொடுவென் கிளவி படர்க்கை யாயினுந்
தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பிற்
றன்னிடத் தியலு மென்மனார் புலவர்.

50. பெயர்நிலைக் கிளவியி னாஅ குநவுந்
திசைநிலைக் கிளவியி னாஅ குநவுந்
தொன்னெறி மொழிவயி னாஅ குநவு
மெய்ந் நிலைமயக்கி னாஅ குநவு
மந்திரப் பொருள்வயி னாஅ குநவு
மன்றி யனைத்துங் கடப்பா டிலவே.

51. செய்யா மென்னு முன்னிலை வினைச்சொற்
செய்யென் கிளவி யாகிடனு டைத்தே.

52. முன்னிலை முன்ன ரீயு மேயு
மந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

53. கடிசொல் லில்லைக் காலத்துப் படினே.

54. குறைச்சொற் கிளவி குறைக்கும் வழியறிதல்.

55. குறைத்தன வாயினு நிறைப்பெய ரியல.

56. இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே.

57. உரிச்சொன் மருங்கினு முரியவை யுரிய.

58. வினையெஞ்சு கிளவியும் வேறுபல குறியா.

59. உரையிடத் தியலு முடனிலை யறிதல்.

60. முன்னத் தினுணருங் கிளவியு முளவே
யின்ன வென்னுஞ் சொன்முறை யான. 57th and 61st
கிளவி; 12th; பெயரி; 7th and 57th பொது Nun.

61. ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்.

62. ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காகு மிடனு மாருண்டே

63. முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்.

64. செய்யுண் மருங்கினும் வழக்கியன் மருங்கினு
மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்
பலவேறு செய்தியி னூனெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்.

ஒன்பதாவது எச்சவியல் முற்றிற்று.

NUNNOOL

CHAPTER I

பெயரியல் OF NOUNS.

1. முச்சக நிழற்று முழுமதி முக்குடை
யச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே. Invocation to Argha.

2. ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்றா,
இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையு
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே. Definition.

3. ஒருமொழி யொருபொரு ளனவாந் தொடர்மொழி
பலபொருளன பொது விருமையு மேற்பன. Division of words.

4. மக்க டேவர் நரக ருயர்திணை,
மற்று யிருள்ளவு மில்லவு மஃறிணை.

5. ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை High Caste

6. ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை. No Caste.

7. பெண்மை விட்டா ணவாவுவ பேடாண்பா
லாண்மை விட்டல் லதவா வுவபெண்பா
லிருமையு மஃறிணை யன்னவு மாகும்.

8. படர்க்கை வினைமுற்று நாமங் குறிப்பிற்

பெறப்படுந் திணைபா லணைத்துமேனை
யிடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே.

9. தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே Three Persons.

10. இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉ வென்றாகு மூவகை யியல்பு
மிடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி
யெனுமுத் தகுதியோ டாறாம் வழக்கியல். Tamil Usages and Acceptations

11. பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செயவன செய்யுள்.

12. ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி
யாகு பெயரன் மொழிவினைக் குறிப்பே
மதறொகை குறிப்போ டின்ன பிறவுங்
குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை.

DIVISION OF WORDS IN GENERAL

13. அதுவே
இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர்வினை
யெனவிரண் டாகு மிடையுரி யடுத்து
நான்குமாந் திசைவட சொல்லணு காவழி.

14. செந்தமி ழாகித் திரியா தியார்க்குந்
தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்.

15. ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த வொருசொல் லாகியு
மரிதுணர் பொருளன திரிசொல் லாகும்.

16. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினு
மொன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினுந்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப.

17. பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானு
மீரெழுத் தானுமியை வனபெய ரிலக்கணம்.

18. இருகுறி காரண மரபோ டாக்கந்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாந் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவனபெயரே. Definition of Noun.

19. அவற்றுள்
கிளையெண் குழூஉ முதற்பல பொருடிணைதே,
மூர்வா னகம்புற முதல நிலன்யாண்,
டிருதுமதிநா ளாதிக்காலந்
தோள்குழன் மார்புகண் காதுமுதலுறுப்,

பலவறி வொப்பு வடிவு நிறங்கதி,
சாதி முடிசிறப் பாதிப் பல்குண,
மோதலீத லாதிப் பல்வினை யிவை
யடைசுட்டு வினாப்பிற மற்றேடுற்
தோழிசெவிலி மகடூஉ நங்கை
தையலோ டின்னன பெண்பாற் பெயரே.

21. கிளந்த கிளைமுத லுற்றரவ் வீற்றவுங்
கள்ளெ னீற்றி னேற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும். High caste Plural.

22. வினாச்சுட் டுடனும் வேறுமாம் பொருளாதியுறுதுச்
சுட்டணை யாய்த மொன்ற னெண்ணின் னன
வொன்றன்பெயரே. Neuter singular.

23. முன்ன ரவ்வொடு வருவை யவ்வுஞ்
சுட்டிறு வவ்வுங் கள்ளிறு மொழியு
மொன்ற லெண்ணு முள்ள வில்ல
பல்ல சில்ல வுளவில பலசில
வின்னவும் பலவின் பெயராகும்மே. Neuter Plural.

24. பால்பகா வஃறிணைப் பெயர்கள் பாற்பொதுமைய.
Epicenes

25. முதற்பெயர் நான்குஞ் சினைப்பெயர் நான்குஞ்
சினைமுதற் பெயரொரு நான்கு முறையிரண்டுந்
தன்மை நான்கு முன்னிலை யைந்து
மெல்லாந் தாந்தா னின்னன பொதுப்பெயர். Epicenes.

26. ஆண்மை பெண்மை யொடுபன் மையி
னாமந் நான்மைக ளரண்பெண் முறைப்பெயர்.

27. அவற்றுள்
ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும்.

28. தன்மை யானான் யாம்நா முன்னிலை
யெல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ
யல்லன படர்க்கை யெல்லா மெனல்பொது.

29. வினையின் பெயரே படர்க்கை வினையா
லணையும் பெயரே யாண்டு மாகும்.

30. தான்யா னானீ யொருமை பன்மை
தாம்யாம் நாமெலா மெலீர்நீயிர் நீர்நீவிர்.

31. ஒருவ னொருத்திப் பெயர்மே லெண்ணில.

32. ஒருவ ரென்ப தயிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப.
ஆகுபெயர். 31st வேற்றுமைமயங்கியல்,
Tholcapyam.

33. பொருண்முத லாறோ டளவை சொற்றாதி

கருவிகாரியங் கருத்தனாதியு ளொன்றன்
பெயரா னதற்கியை பிறிதைத் தொன்முறை
யுரைப்பன வாகுபெயரே. Definition of Metonymy.

CASES : வேற்றுமையிலக்கணம்.

34. ஏற்குமெவ் வகைப் பெயர்க்கு மீறாய்ப்
பொருள் வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை.
Definition.

35. பெயரே ஐஆல் குஇன்அதுகண்
விளியென் றாகு மவற்றின் பெயர்முறை.

36. ஆற னுருபு மேற்குமவ் வுருபே.

37. நீயிர் நீவிர் நானெழு வாயலபெறா.

38. அவற்றுள்
எழுவா யுருபு திரிவில் பெயரே
வினைபெயர் வினாக்கொளல் அதன்பய னிலையே First
Case.

39. இரண்டா வதனுரு பையே யதன்பொரு,
ளாக்க லழித்த லடைத னீட்த,
லொதலுடைமை யாதி யாகும். Second Case.

40. மூன்றா வதனுரு பாலா னோடொடு,
கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள். Third Case.

41. நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடை பகைநேர்ச்சி தகவது வாதல்
பொருட்டு முறையா தியினிதற்கி தெனல்பொருளே. Fourth
Case

42. ஐந்தா வதனுரு பில்லு மின்னும்
நீங்க லொப்பெல்லை யேதுப் பொருளே. Fifth case.

43. ஆற னொருமைக் கதுவு மாதுவும்,
பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்,
பொன்றன் கூட்டம் பலவி னீட்டந்
திரிபி னாக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே. Sixth Case.

44. ஏழனு ருபுகண் ணாதியாகும் பொருண்முதலாறு
மோரிரு கிழமை யினிடனாய் நிற்றலிதன்பொருளென்ப.
Seventh Case.

45. கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல் பின்பாடளைதே
முழைவழி யுழியுளி யுள்ள கம்புறமில்
லிடப்பொருளுருபே. Endings of the Seventh Vase

விளிமரபு THE 8th VOCATIVE CASE

46. எட்டனுருபே யெய்துபெயரீற்றின்
திரிபுகுன்றன் மிகுதலியல்பயற்
றிரிபுமாம்பொருள் படர்க்கையோசைட்
தன்முகமாகட் தானழைப்பதுவே. See the 4th Chapter, Bk II. Tholcapyam.

47. இஉஊவோடையோனளரல
யவ்வீற்றுயர்திணை யோரவல்லிவற்றொடு
ணஃகானாவீ றாகும்பொதுப்பெயர்
ஞநவொழியனைதத்தீற் றஃறிணை விளிப்பன.

48. இம்முப் பெயர்க்கண் ணியல்பு மேயு
மிகரநீட்சியு முருபாமன்னே.

49. ஐயிறுபொதுப்பெயர்க் காயுமாவு
முருபாமல்லவற் றாயுமாகும்.

50. ஒருசார்னவ்வீற் றுயர்திணைப்பெயர்க்கண்
ணளபீறழிவய னீட்சியதனோ
டீறுபோத லவ்வற்றோடோவுற
லீறழிந்தோவர விறுதிஙவ்வர்த
லதனோடயறிரிந் தேயுறலீறழிந்
தயலேயாதலும் விளியுருபாகும்.

51. ளஃகா னுயர்பெயர்க் களபீ றழிவய
னீட்சி யிறுதி யவ்வொற் றாத
லயலி லகரமே யாதலும் விளித்தது.

52. ரவ்வீற்றுயர்பெயர்க் களபெழலீற்றய,
லகரம்இஈயாதலாண்டையா,
வீயாதலதனோ டேயுறலீற்றே,
மிக்கயல்யாக்கெட்,
டதனயனீட லீற்றினீருறலிவையுமீண்டுருபே.

53. லகாரவீற்றுயர்பெயர்க் களப்யனீட்சியும்,
யகாரவீற்றிற்களபுமாமு.

54. னவ்வீற்றுயர்திணை யல்லிருபெயர்க்கண்
ணிறுதியழிவத னோடயனீட்சி.

55. ளவீற்றஃறிணைப்பெயர்பொதுப்பெயர்க்கண்
ஈற்றயனீட்சியு முருபாகும்மே.

56. அண்மையினியல்புமீ றழிவுஞ்சேய்மையின்
அளபும்புலம்பினோவுமாகும்.

57. நுவ்வொடுவினாச்சுட் டுற்றனளர,
வைதுத்தாம்தான்இன்னனவிளியா. See 7th and 8th Pages, Book II.

வேற்றுமை மயக்கம்.

58. முதலை ஐயுறிற் சினையைக்கண்ணுறும்
அதுமுதற்காயிற் சினைக்கையாகும். Substitution or
I nterchange of Cases
59. முதலிவைசினையிவை யெனவேறுளவில,
உரைப்போர்குறிப்பின அற்றேபிண்டமும்.
60. யாதனுருபிற் கூறிற்றாயினும் பொருள்சென்மருங்கின்
வேற்றுமைசாரும். A quotation from Tholcapyam 23rd
Soot வேற்.மயங்.
61. ஐயான்குச்செய்யுட்கவ்வுமாகும்,
ஆகாவஃறிணைக்கானல்லாதன.
62. எல்லையின்னு மதுவும்பெயர்கொளும்
அல்லவினை கொளும்நான்கேழிருமையும்
புல்லும்பெரும்பாலு மென்மனார்புலவர்.

CHAPTER II.

வினையியல் OF VERBS

1. செய்பவன்கருவி நிலஞ்செயல்காலஞ்
செய்பொருளாறுந் தருவது வினையே Definition of Verb.
1st Soot. வினை. Thol.p.11
2. பொருண்முதலாறினுந் தோற்றிமுன்னாறனுள்,
வினைமுதன் மாட்திரை விளக்கல் வினைக்குறிப்பே.
Derivative Verbs.
3. அவைதாம்,
முற்றும் பெயர்வினை யெச்ச முமாகி,
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும். Perfect and Imperfect
Inflections. See 4th Soot. வினையியல் Tholcapyam
4. பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர்,
முதலறு பெயரல் தேற்பில முற்றே.
5. ஒருவன் முதலைந் தையும் படர்க்கை யிடத்தும்,
ஒருமைப் பன்மையைத் தன்மை முன்னிலையினும்
முக்கா லத்தினு முரண்முறையே,
மூவைந் திருமூன் றாறாய் முற்று,
வினைப்பத மொன்றே மூவொன் பானாம்.
6. அன்ஆ னிறுமொழி ஆண்பாற் படர்க்கை. 8th Soot.
வினைThol

7. அள்ளா ளிறுமொழி பெண்பாற் படர்க்கை. 8th Soot. வினைThol.

8. அர்ஆர் பல்வுர கரமா ரீற்ற,
பல்லோர் படர்க்கை மார்வினை யொடுமுடிமே See 9th and 10th வினையியல் Tholcapyam.

9. துறுடுக் குற்றிய லுகர வீற்ற
வொன்றன் படர்க்கை டுக்குறிப்பி னாகும் 20th வினையியல் Tholcapyam.

10. அஆ வீற்ற பலவின் படர்க்கை,
ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும் 19th Soot. வினையியல் Tholcapyam.

11. தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை
உண்டீ ரெச்சமிரு திணைப் பொதுவினை. Common to
t wo திணை.

12. குடுதுறு வென்னுங் குன்றியலு லுகரமோ,
டல்லன் னென்னே னாரு மீற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை. 6th Soot வினைThol.

13. அம்மாமென்பன முன்னிலையாரையு,
மெம்மேமோமிவைபடர்க்கையாரையும்,
உம்மூர் கடதறவிருபாலாரையுந்,
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை. See 5th Soot. வினையியல் Tholcapyam.

14. செய்கெ னொருமையுஞ் செய்குமென் பன்மையும்,
வினையொடு முடியினும் விளம்பிய முற்றே. 7th Soot. வினையியல் Tholcapyam.

15. முன்னிலை கூடிய படர்க்கையு முன்னிலை.

16. ஐயா யிகர வீற்ற மூன்றும்,
ஏவலின் வரூஉ மெல்லா வீற்றவும்,
முப்பா லொருமை முன்னிலை மொழியே. 26th Soot. வினையியல் Tholcapyam.

17. முன்னிலை முன்ன ரீயு மேயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே 27th Soot. வினையியல் Tholcapyam.

18. இர்ஈ ரீற்றலி ரண்டு மிருதிணைப்
பன்மை முன்னிலை மின்னவற் றேவல். 26th and 27th வினையியல் Tholcapyam.

19. கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலு மிடம்பா லெங்குமென்ப.

20. வேறில் லையுண் டைம்பான் மூவிடத்தன.

IMPERFECT INFLECTIONS. RELATIVE PARTICIPLES.

21. செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்,
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு,
செய்வ தாதி யறுபொருட் பெயரும்,
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே. வினையியல் 37th and 38th Sootrums of Tholcapyam.

22. செய்யு மெனெச்ச வீற்றுயிர் மெய்சேறலுஞ்,
செய்யு ளுளும்முந் தாகலு முற்றேல்,
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே.

23. தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே.

24. செய்து செய்பு செய்யாச் செய்யுச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச்சம்,
பிறவைந் தொன்றாறு முக்கால முமுறைதரும். 31, 32, 33, 34, 35, 36, வினையியல்; Thol.

25. அவற்றுள்,
முதலி னான்கு மீற்றின் மூன்றும்
வினைமுதல் கொள்ளும் பிறவுமேற் கும்பிற.

26. சினைவினை சினையொடு முதலொடுஞ் செறியும்.

27. சொற்றிரி யினும்பொரு டிரியா வினைக்குறை.

28. ஆக்க வினைக்குறிப் பாக்க மின்றியலா.

29. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்,
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே.

30. யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.

31. எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.

32. வினைமுற்றே வினை யெச்ச மாகலுங்
குறிப்பு முற்றீ ரெச்சமா கலுமுள.

CHAPTER III பொதுவியல்

REMARKS AND OBSERVATIONS ON CONSTRUCTION

1. இருதிணை யாண்பெணு ளொன்றனை யொழிக்கும்
பெயரும் வினையுங் குறிப்பி னானே.
2. பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆவோ வாகலஞ் செய்யுளுளு ரித்தே.
3. உருபும் வினையு மெதிர்மறுத் துரைப்பினுந்
திரியா தத்த மீற்றுருபி னென்ப.
4. உருபுபல வடுக்கினும் வினைவே றடுக்கினு
மொருதம் மெச்ச மீறுற முடியும்.
5. உருமுற் றீரெச் சங்கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன.
6. எச்சப் பெயர்வினை எய்து மீற்றினும்.
7. ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே.
8. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்,
மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே.
9. பெயர்வினை யும்மைசொற் பிரிப்பென வொழியிசை
யெதிர்மறை யிசையெனுஞ் சொல்லொழி
பொன்பதும் குறிப்புந் தத்தமெச்சங் கொள்ளும்.
10. பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளி னவற்றி னுருபிடை,
யொழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோ னடப்பன தொகைநிலைத் தொடர்சொல். 16th
எச்சவியல் Tolcapyam.
11. வேற்றுமை வினைபண் புவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையா றாகும். 17th
எச்சவியல் Tholcapyam
12. இரண்டு முதலா இடையா றுருபும் வெளிப்பட
லில்லது வேற்றுமைத் தொகையே. 17th எச்சவியல்
Tholcapyam
13. காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை. 19வா
எச்சவியல்.
14. பண்பை விளக்கு மொழிதொக்கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொகை. 20th
எச்சவியல்
15. உவம வுருபி லதுவமத் தொகையே. 11th Soot
உவமவியல் Bk. III. Also 18th எச்சவியல் Book II

16. போலப் புரைய ஒப்பஉறழ மானக்கடுப்ப
நேரநிகர இயைய ஏய்ப்ப அன்னஇன்ன
என்பவும் பிறவு முவமத் துருபே. 11th உவமவியல்.
17. எண்ண லெடுத்தல் முகத்த னீட்டல்
எனுநான்களவையுள் உம்மிலதத்தொகை. 21st Soot
எச்சவியல்.
18. ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி. 22, 23.
எச்சவியல்.
19. முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி,
எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள்.
20. வல்லொற்று வரினே இடத்தொகை யாகும்,
மெல்லொற்று வரினேபெயர்த்தொகை யாகும்.
21. உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே.
22. தொக்குழி மயுங்குன இரண்டு முதலே
ழெல்லைப் பொருளின் மயங்கு மென்ப.
23. முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொரு
ளாறு ருபிடை யுரியடுக் கிவை தொகாநிலை.
24. திணையே பாலிடம்-பொழுது வினாவிறை
மரபா மேழு மயங்கினாம் வழுவே.
25. ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்,
மெய்தெரி பொருண்மேலன் மையும் விளம்புப.
26. உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின.
27. திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினு மிழிபினு மொருமுடி பினவே.
28. உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்
இழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்பே.
29. ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்
ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே.
30. தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை
எழுவாயிரண்டு மெஞ்சியவேற்கும்.
31. இறப்பெதிர்வு நிகழ்வெனக் கால மூன்றே The Three
Tenses
32. முக்காலத் தினுமொத் தியல்பொருளைச் செப்புவர்
நிகழுங் காலத் தானே.
33. விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும்
பிறழவும் பெறூஉழுக் காலமு மேற்புழி.
34. அறிவறி யாமை ஐயுறல் கொளல்கொடை
ஏவறரும் வினாஆறு மிழுக்கார். Six kinds of Interrogation.
35. சுட்டுமறை நேரே வல்வினாத லுற்றதுரைத்த

லுறுவது' கூறலின மொழியெனு மெண்ணிறை
யுளிறுதி நிலவிய வைந்துமப் பொருண்மை யினோர்ப.

36. வினாவினுஞ் செப்பினும் விரவா சினைமுதல்.

37. எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதன் மரபே. மரபு. Definition
மரபினதுவிரி.

38. வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொலும்
வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்.

39. வினைசார் பினமிட மேவி விளங்காப்
பலபொரு ளொருசொற் பணிப்பர் சிறப்பெடுத்தே.

40. எழுத்திய றிரியாப் பொருடிரி புணர்மொழி,
இசைத்திரி பால்தெளி வெய்து மென்ப.

41. ஒருபொருண் மேற்பல பெயர்வரின் இறுதி,
யொருவினை கொடுப்ப தனியு மொரோவழி.

42. திணைநிலஞ் சாதி குடியே யுடைமை
குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோ
டியற்பெய ரேற்றிடில் பின்வரல் சிறப்பே.

43. படர்க்கை முப்பெயரோ டணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க்
கெங்கு மருவும் வழக்கிடை செய்யுட் கேற்புழி.

44. அசைநிலை பொருணிலை யிசைநிறைக் கொருசொல்,
இரண்டு மூன்று நான்கெல்லை முறையடுக்கும்.

45. இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா.

46. ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார்.

47. ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா.

48. இணைத்தென் றறிபொரு ளுலகினி லாப்பொருள்,
வினைப்படுத் துரைப்பின் உம்மை வேண்டும்.

49. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே. 49th Soot.
வினையியல் Tholcapyam

50. பொருண்முத லாறா மடைசேர் மொழியினம்
உள்ளவு மில்லவும் ஆம்இரு வழக்கினும்.

51. அடைமொழி யினமல் லதுந்தரும் ஆண்டுறின்.

52. அடைசினை முதன்முறை யடைதல மீரடை
முதலோ டாதலும் வழக்கிய லீரடை
சினையொடு செறிதலு மயங்கலுஞ் செய்யுட்கே.

53. இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.

54. காரண முதலா வாக்கம் பெற்றுங்
காரண மின்றி யாக்கம் பெற்றும்
ஆக்க மின்றிக் காரண மடுத்தும்

இருமையு மின்றியு மியலுஞ் செயும்பொருள்.
55. தம்பா லில்லதில் லெனின் இனனா
யுள்ளது கூறியும் மாற்றியு முள்ளது
சுட்டியு முரைப்பர் சொற்சுருங் குதற்கே.
56. ஈதா கொடுவெனு மூன்று முறையே
இழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை
57. முன்னத் தினுணருங் கிளவியு முளவே.
58. கேட்குந போலவுங் கிளக்குந போலவு
மியங்குந போலவு மியற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே.
59. உருவக வுவமையில் திணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே.

மரபுவிரி முற்றிற்று.

பொருள்கோள் POETIC CONSTRUCTION

60. ஆற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்புண்
டாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட்
ட்டிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே.
61. மற்றய னோக்கா தடிதொறும் வான்பொரு
ளற்றற் றொழுகு மஃதியாற் றுப்புனலே.
62. ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றி யோரடியுள் வழங்கன் மொழிமாற்றே.
63. பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்,
வேறுநிர னிறீஇ முறையினு மெதிரினு
நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே.
64. எழுவா யிறுதி நிலைமொழி தம்முட்
பொரு ணோக்குடை யதுபூட்டு வில்லாகும்.
65. இடைநிலை மொழியே யெனைய் ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை.
66. செய்யு ளிறுதி மொழியிடை முதலினும்
எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே.
67. யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை,
யேற்புழி யசைப்பது கொண்டு கூட்டே. Compare from 8 to
13 எச்சவியல்.
68. ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியவும்
யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை
மாட்சியு மாறா அடியவும் அடிமறி. Tholcapvam

CHAPTER IV

இடைச்சொல்லியல் OF PARTICLES

1. வேற்றுமை வினைசாரியை யொப்புரு புகடத்
தம்பொருள விசைநிறை யசைநிலை
குறிப்பெ னெண்பகுதி யிற்றனித் தியலின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.
2. தெரிநிலை தேற்ற மையமுற் றெண்சிறப்
பெதிர்மறை யெச்சம் வினாவிழை வொழியிசை
பிரிப்புக் கழிவாக்க மின்னன இடைப்பொருள்.
3. பிரிநிலை வினாவெண் ணீற்றசை தேற்ற
மிசைநிறை யெனவாறே காரம்.
4. ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை,
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே.
5. வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினு,
மெனவெனு மொழிவரு மென்று மற்றே.
6. எதிர்மறை சிறப்பைய மெச்சமுற் றளவை
தெரிநிலை யாக்க மோடும் மையெட்டே.
7. முற்றும்மை யொரோவழி யெச்சமு மாகும்.
8. செவ்வெண் ணீற்ற தாமெச் சவும்மை.
9. பெயர்ச்செவ் வெண்ணெ யென்றா வெனாவெண்,
ணான்குந் தொகைபெறு மும்மையென் றெனவோ
டிந்நான் கெண்ணு மஃதின் றியுமியலும்.
10. என்று மெனவு மொடுவு மொரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்.
11. வினையொடு வரினு மெண்ணினைய வேற்பன.
12. விழைவே கால மொழியிசை தில்லே.
13. மன்னே யசைநிலை யொழியிசை யாக்கங்
கழிவு மிகுதி நிலைபே றாகும்.
14. வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே.
15. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.
16. கொல்லே யைய மசைநிலைக் கூற்றே.
17. ஒடுவுந் தெய்யவு மிசைநிறை மொழியே.
18. அந்தி லாங்கசை நிலையிடப் பொருளவ்வே.
19. அம்ம வுரையசை கேண்மினென் றாகும்.
20. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.
21. மியாயிக மோமதி அத்தை யித்தை
வாழி யமாள வீயா ழமுன் னிலையசை

22. யாகா பிற்பிறக் கரோ போமாதிருஞ்
சின்குரை யோரும் போலு மிருந்திட்,
டன்றாந் தாந்தான் கின்றுநின் றசைமொழி.

CHAPTER V

உரிச்சொல்லியல் OF ATTRIBUTIVES

1. பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல்.
2. உயிருயி ரல்லாதாம் பொருட்குணம் பண்பே.
3. மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளி
னொன்று முதலாக்கீழ்க் கொண்டு மேலுணர்தலி
னோரறி வாதியா வுயிரைந் தாகும்.
4. புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்.
5. முரணந் தாதிநா வறிவொ டீரறிவுயிர்.
6. சிதலெறும் பாதிமூக் கறிவின் மூவறிவுயிர்.
7. தும்பி வண்டாதிகண் ணறிவினா லறிவுயிர்.
8. வானவர் மக்கண ரகர்விலங்கு புள்ளாதி
செவியறி வோடை யறிவுயிரே.
9. உணர்வி யலாமுயி ரொன்று மொழித்த
வுடன்முத லனைத்து முயிரல் பொருளே.
10. என்று மெனவு மொடுவு மொரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்.
11. வினையொடு வரினு மெண்ணினைய வேற்பன.
12. விழைவே கால மொழியிசை தில்லே.
13. மன்னே யசைநிலை யொழியிசை யாக்கங்
கழிவு மிகுதி நிலைபே றாகும்.
14. வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே.
15. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம்.
16. கொல்லே யைய மசைநிலைக் கூற்றே.
17. ஒடுவுந் தெய்யவு மிசைநிறை மொழியே.
18. அந்தி லாங்கசை நிலையிடப் பொருளவ்வே.
19. அம்ம வுரையசை கேண்மினென் றாகும்.
20. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.
21. மியாயிக மோமதி அத்தை யித்தை
வாழிய மாளவீ யாழமுன் னிலையசை.

22. யாகாபிற் பிறக்கரோ போமா திகுஞ்
சின்குரை யோரும் போலு மிருந்திட்,
டன்றாந் தாந்தான் கின்றுநின் றசைமொழி.

CHAPTER V உரிச்சொல்லியல்

OF ATTRIBUTIVES

1. பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல்.
2. உயிருயி ரல்லாதாம் பொருட்குணம் பண்பே.
3. மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளி
னொன்று முதலாக்கீழ்க் கொண்டு மேலுணர்தலி
னோரறி வாதியா வுயிரைந் தாகும்.
4. புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்.
5. முரணந் தாதிநா வறிவொடீ ரறிவுயிர்.
6. சிதலெறும் பாதிமூக் கறிவின் மூவறிவுயிர்.
7. தும்பிவண் டாதிகண் ணறிவினா லறிவுயிர்.
8. வானவர் மக்க ணரகர் விலங்கு
புள்ளாதி செவியறி வொடையறி வுயிரே.
9. உணர்விய லாமுயி ரொன்று மொழித்த
வுடன்முத லனைந்து முயிரல் பொருளே.
10. ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்றினும்
வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர்
11. அறிவரு ளாசை யச்ச மான
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மைய
னினைவு வெறுப்பு வப்பிரக்க நாண்வெகுளி
துணிவழுக் காறன் பெளிமை யெய்த்
தறுன்பமின்ப மிளைமை மூப்பிகல் வென்றி
பொச்சாப் புக்கமற மதமறவி யினைய,
உடல்கொளு யிர்க்குணம்.
12. துய்த்தல் துஞ்ச றொழுத லணித
லுய்த்த லாதி யுடலுயிர்த் தொழிற்
13. பல்வகை வடிவிரு நாற்றமை வண்ண
மறுசுவை யூறெட் டுயிரல் பொருட்குணம்.
14. தோன்றன் மறைதல் வளர்தல் சுருங்க
னீங்க லடைத னடுங்க லிசைத்த
லீதலின் னனஇரு பொருட்டொ ழிற்குணம்.
15. சால உறுதவ நனிகூர் கழிமிகல்.
16. கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சஞ் சிறப்பே
விரைவே மிகுதி புதுமையார்த்தல்
வரைவே மன்றல் கரிப்பி னாகும்.

17. மாற்ற நுவற்சி செப்புரை கரைநொடி
யிசைகூற் றுப்புகறன் மொழிகிளவி விளம்பறை
பாட்டுப் பகர்ச்சி யியம்பல் சொல்லே.
18. முழக்கிரட் டொலிகலி யிசைதுவை பிளிறிரை
யிரக்கமுங் கியம்ப லிமிழ்குளி றதிர்குரை
கனைசிலை சும்மை கவ்வை கம்பலை
யரவ மார்ப்போ டின்னன வோசை.
19. இன்ன தின்னுழி யின்னண மியலு
மென்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கலமுதலா
நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே.
20. சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்து
முற்ற மொழிகுறின் முடிவில வாதலிற்
சொற்ற வற்றிய லான்மற் றையபிறவுந்
தெற்றென வுணர்தல் தெள்ளி யோர்திறனே.
21. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.

THOLCAPYA-NUNNOOL

BOOK III

பொருளதிகாரம்

GRAMMAR OF GENERAL KNOWLEDGE.

CHAPTER I

அகத்திணையியல்

OF SOIL, SEASONS OF THE YEAR, AND PRODUCTIONS.

1. கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்,
முற்படக் கிளந்த எழுதிணை யென்ப. Division of பொருள் into 7 திணை:

2. அவற்றுள்
நடுவ ணைந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே.

3. முதல்கரு உரிப்பொரு ளென்றம் மூன்றே,
றுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை.

4. முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே.

5. மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.

6. காரும் மாலையு முல்லை குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்.

7. பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப.

8. வைகுறு விடியன் மருத மெற்பாடு
நெய்த லாதன் மெய்பெறத் தோன்றும்.

9. நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின முன்னிய நெறித்தே.

10. பின்பனி தானு முரித்தென மொழிப.

11. இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றினும்
உரிய தாகும் என்மனார் புலவர்.

12. திணைமயங் குறுதலும் கடிநிலை இலவே
நிலன்ஒருங்கு மயங்குதல் இல்லென மொழிப
புலன்நன் குணர்ந்த புலமை யோரே.
13. உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே.
14. புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.
15. கொண்டுதலைக் கழியினும் பிரிந்தவண் இரங்கினும்,
உண்டென மொழிப ஓரிடத் தான.
16. கலந்த பொழுதும் காட்சியும் அன்ன.
17. முதல்எனப் படுவ தாயிரு வகைத்தே.
18. தெய்வம் உணாவே மாமரம் புட்பறை,
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ,
அவ்வகை பிறவும் கருவென மொழிப.
19. எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்.
20. பெயரும் வினையும் என்றா யிருவகைய
திணைதொறு மரீஇய திணைநிலைப் பெயரே.
21. ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே.
22. ஏனோர் பாங்கினும் எண்ணுங் காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே.
23. அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினும்
கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்.
24. உயர்ந்தோர் மருங்கின் ஒழுக்கத் தான
ஏவல் மருங்கின் ஏனோரு முரியர்
ஆகிய நிலைமை அவரு மன்னர்.
25. ஓதல் பகையே தூதிவை பிரிவே.
26. அவற்றுள்
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன.
27. தானே சேறலுந் தன்னொடு சிவணிய
ஏனோர் சேறலும் வேந்தன் மேன.
28. மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்,
இழைத்த வொண்பொருண் முடியவும் பிரிவே.
29. மேலோர் முறைமை நால்வர்க்கு முரித்தே.
30. மன்னர் பாங்கிற் பின்னோர் ஆகுப.
31. உயர்ந்தோர்க் குரிய ஓத்தி னான.

32. வேந்து வினையியற்கை வேந்தனின் ஒரீஇய
ஏனோர் மருங்கினும் எய்திட னுடைத்தே.
33. பொருள்வயிற் பிரிதலும் அவர்வயி னுரித்தே
உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான.
34. முந்நீர் வழக்கம் மகடூஉ வொடில்லை.
35. எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்,
பொற்புடை நெறிமை யின்மை யான.
36. தன்னும் அவனும் அவளும் சுட்டி
மன்னு நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சஞ் சார்தலென்
றன்ன பிறவும வற்றொடு தொகைஇ
முன்னிய கால மூன்றுடன் விளக்கித்
தோழி தேஎத்துங் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியு மவ்வழி யுரிய.
37. ஏமப் பேரூர்ச் சேரியுஞ் சுரத்துந்
தாமே செல்லுந் தாயரு முளரே.
38. அயலோ ராயினும் அகற்சி மேற்றே.
39. தலைவரும் விழும்நிலை யெடுத்து ரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்
நீக்கலின்வந்த தம்முறு விழுமமும்
வாய்மையும் பொய்மையும் கண்டோர்ச் சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்,
நோய்மிகப் பெருகித் தன்னெஞ்சு கலுழந்தோளை
யழிந்தது களைஇய வொழிந்தது கூறி
வன்பொறை நெருங்கி வந்ததன் திறத்தோ
டென்றிவை யெல்லா மியல்புற நாடின்
ஒன்றித் தோன்றுந் தோழி மேன.
40. பொழுதும் ஆறும் உட்குரவத் தோன்றி
வழுவி னாகிய குற்றங் காட்டலும்
ஊரது சார்வுஞ் செல்லுந் தேயமு
மார்வ நெஞ்சமொடு செப்பிய கிளவியும்
புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமோ
டழிந்தெதிர் கூறி விடுப்பினு மாங்கட்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினுஞ்
சேய்நிலைக் ககன்றோர் செலவினும் வரவினுங்
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப.
41. ஒன்றாத் தமரினும் பருவத்துஞ் சுரத்தும்
ஒன்றிய தோழியொடு வலிப்பினும் விடுப்பினும்
இடைச்சுர மருங்கின் வடமரெய்திக்

கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கலஞ் செய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை யுளப்பட
அப்பாற் பட்ட வொருதிறத் தானும்
நாளது சின்மையு மிளமைய தருமையுந்,
தாளாண் பக்கமுந் தகுதியத மைதியு
மின்மை யதிளிவு முடைமைய தயர்ச்சியும்
அன்பின தகலமு மகற்சிய தருமையு
மொன்றாப் பொருள்வயி னூக்கிய பாலினும்
புகழு மானமு மெடுத்து வற்புறுத்தலுந்
தூதிடை யிட்ட வகையி னானும்
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினு
மூன்றன் பகுதியு மண்டலத் தருமையுந்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலு முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினுங்
காவற் பாங்கி னாங்கோர் பக்கமும்
பரத்தையின் அகற்சியிற் பரிந்தோட் குறுகி
இரத்தலுந் தெளித்தது மெனவிரு வகையோ
டுரைத்திற நாட்டங் கிழவோன் மேன.

42. எஞ்சி யோர்க்கும் எஞ்சு தலிலவே.

43. நிகழ்ந்தது நினைத்தற் கேதுவு மாகும்.

44. நிகழ்ந்தத கூறி நிலையலுந் திணையே.

45. மரபுநிலை திரியா மாட்சிய வாகி
விரவும் பொருளும் விரவு மென்ப.

46. உள்ளுறை யுவமம் ஏனை யுவமம்எனத்
தள்ளா தாகுந் திணையுணர் வகையே.

47. உள்ளுறை தெய்வ மொழிந்தவை(தை) நிலனெனக்,
கொள்ளு மென்ப குறியறிந் தோரே.

48. உள்ளுறுத் திதனோ டொத்துப் பொருண்முடிகென,
உள்ளுறுத் துரைப்ப தவ்வுள் ளுறையுவமம்.

49. ஏனை யுவமந் தானுணர் வகைத்தே.

50. காமஞ் சாலா விளமை யோள்வயி,
னேமஞ் சாலா விடும்பை யெய்தி,
நன்மையுந் தீமையு மென்றிரு திறத்தாற்,
றன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறுதல்
புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே. Compare
நாற்கவி. நம்பியகப்பொருள்,

51. ஏறிய மடற்றிற மிளமை தீர்திறந்
தேறுத லொழிந்த காமத்து மிகுதிற

மிக்க காமத்து மடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.
அகத்திணையியல், from 1st to 116th Sootrum,

52. முன்னைய நான்கும் முன்னதற் கென்ப.

53. நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கினுங்
கலியே பரிபாட் டாயிரு பங்கினு
முரியதாகு மென்மனார் புலவர்.

54. மக்க ணுதலிய அகனைந் திணையுஞ்
சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅ. Thandaveroya Moodeliar's Edition.

55. புறத்திணை மருங்கிற் பொருந் தினல்ல,
தகத்திணை மருங்கி 'னளவு தலிலவே.

அகத்திணை முற்றும்.

CHAPTER II

புறத்திணையியல்

CIVIL POLITICAL AND MILITARY CUSTOMS

1. அகத்திணை மருங்கின் அரில்தப வுணர்ந்தோர்,
புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின்.
வெட்சி தானே குறிஞ்சியது புறனே,
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே.See வெட்சிப்படலம்.

2. வேந்து விடுமுனைநர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பல் மேவற் றாகும் Of ஐயனாரிதனார்
வெண்பாமாலை

3. படைஇயங் கரவம் பாக்கத்து விரிச்சி,
புடைகெடப் போகிய செலவே புடைகெட,
ஒற்றி னாகிய வேயே வேய்ப்புறம்,
முற்றி னாகிய புறத்திறை முற்றிய,
ஊர்கொலை ஆகோள் பூசன் மாற்றே,
நோயின் றுயத்தனு வலுவழித் தோற்றந்,
தந்துநிறை பாதீடு உண்டாட்டுக் கொடையென
வந்த வீரேழ் வகையிற் றாகும். Thandaveroya Moodeliar's Edition.

4. மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே.

5. வெறிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளு முறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி யேந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்
வாடா வள்ளி வயவ ரேத்திய
வோடாக் கழனிலை யுளப்பட வோடா
உடல்வேந் தடுக்கிய வுன்ன நிலையும்
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையு
மாரம ரோட்டலும் ஆபெயர்த்துத் தருதலுஞ்
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத் துரைத்தலுந்
தலைத்தா ணெடுமொழி தன்னொடு புணர்த்தலு
மனைக்குரி மரபினது கரந்தை யன்றியும்
வருதார் தாங்கல் வாள்வாய்த் துக்கவிழ்தலென்
றிருவகைப் பட்ட பிள்ளை நிலையும்
வாண்மலைந் தெழுந்தோனை மகிழ்ந்து பறைதூங்க
நாடவற் கருளிய பிள்ளை யாட்டுங்
காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிற்பிற் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட வெழுமூன்று துறைத்தே
See கரந்தைப்படலம்,

6. வஞ்சி தானே முல்லை யதுபுறனே. See வஞ்சிப்படலம்.

7. எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச் சென்றடல் குறித்தன்றே
Thandaveroya Moodeliar's Edition.

8. இயங்கு படையரவம் எரிபரந் தெடுத்தல்
வயங்க லெய்திய பெருமை யானுங்
கொடுத்த லெய்திய கொடைமை யானும்
அடத்தூர்ந் தட்ட கொற்றத் தானும்
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்
பொருளின் றுய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
வொருவன் றாங்கிய பெருமை யானும்
பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்,
வென்றோர் விளக்கமுந் தோற்றோர் தேய்வும்
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
அழிப்படை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பிற் றுறைபதின் மூன்றே.

9. உழிஞைதானே மருதத்துப் புறனே See உழிஞைப்படலம்.

10. முழுமுத லரணம் முற்றலுங் கோடலும்
அனைநெறி மரபிற் றாகுமென்ப Of ஐயனாரிதனார்
வெண்பாமாலை.

11. அதுவே தானும் இருநால் வகைத்தே.

12. கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்புந்
தொல்லெயிற் கிவர்தலுந் தோலின் பெருக்கமும்,
அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய
புறத்தோன் ணங்கிய பக்கமுந் திறப்பட
ஒருதான் மண்டிய குறுமையு முடன்றோர்
வருபகை பேணார் ஆரெயி லுளப்படச்
சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே.

13. குடையும் வாளும் நாள்கோ ளன்றியும்
மடையமை யேணிமிசை மயக்கமும் கடைஇச்
சுற்றம ரொழிய வென்று கைக்கொண்டு
முற்றிய முதிர்வு முற்றிய வகத்தோன்
வீழ்ந்த நொச்சியு மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்
நீர்ச்செரு வீழ்ந்த பாசி யுமதா
அன்றூர்ச் செருவீழ்ந்த மற்றதன் மறனு
மதின்மிசைக் கிவர்ந்தோன் பக்கமும் மிகன்மதிற்
குடுமி கொண்ட மண்ணு மங்கலமும்,
வென்ற வாளின மண்ணோ டொன்றத்
தொகைநிலை யென்னுந் துறையொடு தொகைஇ
வகைநான் மூன்றே துறையென மொழிப.

14. தும்பைதானே நெய்தலது புறனே. See தும்மைப்படலம்,
Thandaveroya Moodeliar's Edition.

15. மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்று தலையழிக்குஞ் சிறப்பிற் றென்ப.

16. கருணையும் வேலுந் துணையுற மொய்த்தலிற்,
சென்ற வுயிரி னின்ற யாக்கை,
இருநிலந் தீண்டா வருநிலை வகையோ
டிருபாற் பட்ட ஒருசிறப் பின்றே.

17. தானை யானை குதிரை யென்ற
நோனா ருட்கு மூவகை நிலையும்
வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி யொருவன்
தான்மீண் டெறிந்த தார்நிலை யன்றியு
மிருவர் தலைவர் தபுதிப் பக்கமும்
ஒருவனொ ருவனை யுடைபடை புக்குக்

கூழை தாங்கிய வெருமையும் படையறுத்துப்
பாழி கொள்ளு மேமத் தானுங்
களிறெறிந் தெதிர்ந்தோர் பாடுங் களிற்றொடு
பட்ட வேந்தனை யட்ட வேந்தன்
வாளோ ராடும் மலையும் வாள்வாய்த்
திருபெரு வேந்தர் தாமுஞ் சுற்றமும்
ஒருவரு மொழியாத் தொகைநிலைக் கண்ணுஞ்
செருவகத் திறைவன் வீழ்ந்தெனச் சினைஇ
யொருவன் மண்டிய நல்லிசை நிலையும்
பல்படை யொருவற் குடைதலின் மற்றவ
னொள்வாள் வீசிய நூழிலு முளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே.

18. வாகை தானே பாலையது புறனே See வாகைப்படலம், 85th page, Thandaveroya Moodeliar's Edition.

19. தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்த லென்ப.

20. அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்,
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்,
மறுவில் செய்தி மூவகைக் காலமும்,
நெறியி னாற்றிய வறிவன் றேயமும்,
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்,
பாலறி மரபிற் பொருநாக் கண்ணும்,
அனைநிலை வகையொ டாகெழு வகையிற்,
றொகைநிலை பெற்ற தென்மனார் புலவர்.

21. கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
காதலி னொன்றிக் கண்ணிய மரபினும்,
ஓரோர் களவழி யன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியுந் தேரோர்,
வென்ற கோமான் முன்றேர்க் குரவையும்,
ஒன்றிய மரபிற் பின்தேர்க் குரவையும்,
பெரும்பகை தாங்கும் வேலி னானும்,
அரும்பகை தாங்கு மாற்ற லானும்,
புல்லர் வாழ்க்கை வல்லாண் பக்கமும்
ஒல்லார் நாணும் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையி னொன்றொடு புணர்ந்து,
தொல்லுயிர் வழங்கிய வவிப்பலியானும்,
ஒல்லா ரிடவயிற் சான்றோர் பக்கமுங்,
கட்டி னீத்த காலி னானும்,
எட்டு வகைநுதலிய அவையத் தானுங்,

கட்டமை யொழுக்கத்துத் தண்ணு மையானு,
மிடையில் வண்புகழ் கொடைமை யானும்,
பிழைத்தோர் தாங்கும் காவலானும்,
பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்,
அருளொடு புணர்ந்த வகற்சி யானுங்,
காம நீத்த பாலி னானுமென்,
றிருபாற் பட்ட வொருபதிற் றுறைத்தே.
(வொன்பதிற்றுத்துறைத்தே)

22. காஞ்சி தானே பெருந்திணைப் புறனே. See காஞ்சிப்படலம்.

23. பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானு
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே

24. மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையுங்
கழிந்தோ ரொழிந்தோர்க் குக்காட்டிய
முதுமையும் பண்புற வரூஉம் பகுதி
நோக்கிப் புண்கிழித்து முடியு மறத்தினானு
மேமச் சுற்ற மின்றிப் புண்ணோற்
பேஎ யோம்பிய பேஎய்ப் பக்கமு
மின்னனென் றிரங்கிய மன்னை யானு
மின்னது பிழைப்பினிது வாகுவெனனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்
இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோற்
றுண்ணுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியு
நீத்த கணவற் றீர்த்த வேலிற்
பேஎத்த மனைவி காஞ்சி யானு
நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பா டஞ்சிய மகட்பா லானு
முலையு முகனுஞ் சேர்த்திக் கண்டோன்
றலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
யீரைந் தாகு மெனப்பே ரிசைஇ
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்ற
மாய்ந்த பூசன் மயக்கத் தானுந்
காமே யேங்கிய தாங்கரும் பையுளுங்
கணவொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செலவோர் செப்பிய மூதா னந்தமு
நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையுங்
கழிந்தோர் தேஎத் தழிப்பட ருறீஇ
யொழிந்தோர்புலம்பிய கையறு நிலையுங்
காதலி யிழந்த தபுதார நிலையுங்
காதலி யிழந்த தாபத நிலையு

நல்லோற் கணவ னொடுநளி யழற்புகீஇச்
சொல்லிடை யிட்ட பாலை நிலையு
மாயபெருஞ் சிறப்பிற் புதல்வற் பயந்த
தாயதப வரூஉந் தலைப்பெய னிலையு
மலர்தலை யுலகின் மரபுநன் கறியப்
பலர்செலச் செல்லாக் காடுவாழ்த் தொடுநிறை
யருஞ்சிறப் பிற்றுறை யிரண்டு டைத்தே.

25. பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே.

26. அமரர்கண் முடியும் அறுவகை யானும்,
புரைதீர் காமம் புல்லிய பாங்கினும்
ஒன்றன் பகுதியி னொன்று மென்ப.

27. வழங்கியன் மருங்கின் வகைபட விலைஇப்
பரவலும் புகழ்ச்சியுங் கருதிய பாங்கினும்
முன்னோர் கூறிய குறிப்பினுஞ் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின் றாங்கே.

28. காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினு மென்மனார் புலவர்.

29. குழவி மருங்கினு மகிழ்வ தாகும்.

30. ஊரொடு தோற்றமும், உரித்தென மொழிப.

31. வழக்கொடு சிவணிய வகைமை யான.

32. மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே.

33. கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.

34. கொற்ற வள்ளை யோரிடத் தான.

35. கொடுப்போ ரேத்திக் கொடார்ப் பழித்தலும்,
மடுத்தூர்ந் தேற்றிய வியன்மொழி வாழ்த்துஞ்
சேயவரல் வருத்தம் வீடா வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானுங்
கண்படைக் கண்ணிய கண்படை நிலையும்
கபிலை கண்ணிய வேள்வி நிலையும்
வேலி னோக்கிய விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்துஞ் செவியறி வுறூஉ
மாவயின் வரூஉம் புறநிலை வாழ்த்துங்
கைக்கிளை வகையோ டுளப்படத் தொகைஇத்
தொக்க நான்கு முளவென மொழிப.

36. தாவின லிசைகரு தியகிடந் தோர்க்குச்
சூத ரேத்திய துயிலெடை நிலையுங்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு

மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பிறழ்பெறற் பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிர்ச் சொன்ன பக்கமுஞ்
சிறந்த நாளணி செற்ற நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங் கலமுஞ்
சிறந்த சீர்த்தி மண்ணு மங்கலமு
நடைமிகுத் தேற்றிய குடைநிழன் மரபு
மாணார்ச் சுட்டிய வாண்மங் கலமு
மன்னெயி லழித்த மண்ணு மங்கலமும்
பரிசிலை கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற வின்னரும் பெருவள னேத்தி
நடைவயிற் றோன்று மிருவகை விடையு
மச்சமு முவகையு மெச்ச மின்றி
நாளும் புள்ளும் பிறவற்று நிமித்தமுங்
காலங் கண்ணிய வோம்படை யுளப்பட
ஞாலத்து வரூஉ நடக்கையது குறிப்பிற்
காலமூன் றொடு கண்ணிய வருமே.

புறத்திணை முற்றும்.

CHAPTER III.

களவியல்

CLANDESTINE MARRIAGE.

1. இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றலெட் டனுட்
டுறையமை நல்லியாழ்த் துணைமை யோரியல்பே.

2. ஒன்றே வேறே யென்றிரு பால்வயி
னொன்றி யுயர்ந்த பால தாணையி
னொத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை யின்றே.

3. சிறந்துழி யையஞ் சிறந்த தென்ப
விழிந்துழி யிழிபே சுட்ட லான.

4. வண்டே யிழையே வல்லி பூவே
கண்ணே யலமர லிமைப்பே யச்சமென்
றன்னவை பிறவு மாங்க வணிகழ
நின்றவை களையுங் கருவி யென்ப.

5. நாட்ட மிரண்டு மறிவுடம்படுத் தற்குக்
கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்.

6. குறிப்பே குறித்தலை கொள்ளு மாயி
னாங்கவை நிகழு மென்மனார் புலவர்.

7. பெருமையும் உரனும் ஆடூஉ மேன.

8. அச்சமும் நாணும் மடனுமுந் துறுத்த,
நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப.

9. வேட்கை யொருதலை யுள்ளுதன்
மெலித லாக்கஞ்செப்புனா ணுவரை யிறத்த
னோக்குவ் வெல்லா மவ்வயே போறன்
மறத்தன் மயக்கஞ் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப.

10. முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்த
னன்னய முரைத்த னகைநனி யுறாஅத்
தந்நிலை யறிதன் மெலிவுவிளக் குறுத்த
றந்நிலை யுரைத்த றெளிவகப் படுத்தலென்
றின்னவை நிகழு மென்மனார் புலவர்.

11. மெய்தொட்டுப் பயிறல் பொய்பாராட்ட
லிடம்பெற்றுத் தழாஅ லிடையூறு கிளத்த
னீடு நினைந்திரங்கல் கூடுத லுறுதல்
சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்
தீராத் தேற்ற முளப்படத் தொகைஇப்
பேராச்சிறப் பினிரு நான்கு கிளவியும்
பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்தவழிக் கலங்கலு
நிற்பவை நினைஇ நிகழ்பவை யுரைப்பினுங்
குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்
பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினு
மூரும் பேருங் கெடுதியும் பிறவு
நீரிற் குறிப்பி னிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியுந் தோழி
குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலந்
தண்டா திரப்பினும் மற்றைய வழியுஞ்
சொல்லவத் சார்த்தலிற் புல்லிய வகையினு
மறந்தோள் யாப்பி னவ்வழி மருங்கிற்
கேடும் பீடும் கூறலுந் தோழி
நீக்கலி னாகிய நிலைமையு நோக்கி
மடன்மா கூறு மிடனுமா ருண்டே.

12. பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினு
மன்புற்று நகினு மவட் பெற்று மலியினு
மாற்றிடை யுறுதலு மவ்வினைக் கியல்பே.

13. பாங்க னிமித்தம் பன்னிரண் டென்ப.
14. முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே
பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே.
15. முதலொடு புணர்ந்த யாழோர் மேன
தவலருஞ் சிறப்பி னைந்நிலம் பெறுமே.
16. இருவகைக் குறிபிழைப் பாகிய விடத்துங்
காணா வகையிற் பொழுதுநனி யிகப்பினுந்
தானகம் புகாஅன் பெயர்த்த லின்மையிற்
காட்சி யாகையிற் களம்புக்குக் கலங்கி
வேட்கையின் மயங்கிய கையறு பொழுதினும்
புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்
வேளா ணெதிரும் விருந்தின் கண்ணும்
வாளா ணெதிரும் பிரிவி னானும்
நாணு நெஞ்சலைப்ப விடுத்தற் கண்ணும்
வரைதல் வேண்டித் தோழி செப்பிய
புரைதீர் கிளவி புல்லிய வெதிரும்
வரையுடன் படுதலு மாங்கதன் றிறத்தும்
புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇக்
கிழவோன் மேன வென்மனார் புலவர்.
17. காமத் திணையிற் கண்ணின்று வரூஉ
நாணும் மடனும் பெண்மைய வாதலிற்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை,
நெறிப்பட வாரா வவள் வயினான.
18. காமஞ் சொல்லா நாட்டம் இன்மையின்
ஏமற விரண்டும் உளவென மொழிப.
19. சொல்எதிர் மொழிதல் அருமைத் தாகலி
னல்ல கூற்று மொழியவள வயினான.
20. மறைந்த வற்காண்டல் தற்காட் டுறுத
னிறைந்த காலிற் சொல்லெதிர் மழுங்கல்
வழிபாடு மறுத்தல் மறுத்தெதிர் கோடல்
பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்
கைப்பட்டுக் கலங்கினும் நாணுமிக வரினும்
இட்டுப் பிரிவிரங்கினும் அருமைசெய் தயர்ப்பினும்
வந்தவழி யெள்ளினும் விட்டுயிர்த் தழுங்கினும்,
நொந்து தெளிவொழிப்பினும் அச்சம் நீடினும்
பிரிந்தவழிக் கலங்கினும் பெற்றவழி மலியினும்
வருந்தொழிற் கருமை வாயில் கூறினும்
கூறிய வாயில் கொள்ளாக் காலையும்
மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்த வழித்தோழிக்கு
நினைத்தல் சான்ற வருமறை யுயிர்த்தலும்,

முயிராக் காலத்து யிர்த்தலு முயிர்செல
வேற்று வரைவு வரினது மாற்றுதற்கண்ணு
நெறிபடு நாட்டத்து நிகழ்ந்ததை மறைப்பினும்,
பொறியி னயர்த்த புணர்ச்சி நோக்கி
யொருமைக் கேண்மையி னுறுகுறை தெளிந்தோ
ளருமை சான்ற நாலிரண்டு வகையிற்
பெருமை சான்ற வியல்பின் கண்ணும்
பெயர்தலை யடுத்த மடலின் கண்ணுங்
கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்
வெறியாட் டிடத்து வெருவின கண்ணும்
குறியி னொப்புமை மருட்டற் கண்ணும்
வரைவு தலைவரினும் களவறி வுறினுந்
தமர்தற் காத்த காரண மருங்கினுந்
தன்குறி தள்ளிய தெருளாக் காலை
வந்தனன் பெயர்ந்த வறுங்கள நோக்கித்
தன்பிழைப் பாகத் தழீஇத் தேறலும்
வழுவின்று நிலைஇய வியற்படு பொருளினும்
பொழுதுமாறும் புரைவ தன்மையி
னழிவுதலை வந்த சிந்தைக் கண்ணுங்
காமஞ் சிறப்பினு மவனளி சிறப்பினு
மேமஞ் சான்ற வுவகை கண்ணுந்
தன்வயி னுரிமையு மவன்வயிற் பரத்தையு
மன்னவு முளவே யோரிடத் தான.

21. வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினு
முரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணுந்
தானே கூறுங் காலமு முளவே.

22. உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவ னுளவழிப் படினுந்
தாவினன் மொழி கிழவி கிளப்பினு
மாவகை பிறவுந் தோன்றுமன் பொருளே.

23. நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்,
செய்வினை மறைப்பினுஞ் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி யெதிர்ப்பா டுள்ளுறுத்து வருஉ
முணர்ச்சி யெழினு முணர்ந்த பின்றை
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பலவேறு கவர்பொரு ணாட்டத் தானுங்
குறையுறற் கெதிரிய கிழவனை மறையுறப்

பெருமையிற் பெயர்ப்பினு முலகுரைத் தொழிப்பினு
மருமை யினகற்சியு மவளறி வுறுத்துப்
பின்வரு கென்றலும் பேதைமை யூட்டலு
முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தலு
மஞ்சி யச்சுறுத்தலு முரைத்துழிக் கூட்டமோ
டெஞ்சாது கிளந்த விருநான்கு கிளவியும்
வந்த கிழவனை மாயஞ் செப்பிப்
பொறுத்த காரணங் குறித்த காலையும்
புணர்ந்த பின்னவன் வயின் வணங்கற் கண்ணுங்
குறைந்தவட் படரினு மறைந்த வளருகட்
தன்னொடு மவளொடு முதன்மூன் றளைஇப்
பின்னிலை நிகழும் பலவேறு மருங்கினு
நன்னயம் பெற்றுழி நயம்புரி யிடத்தினு
மெண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்
புணர்ச்சி வேண்டினும் வேண்டாப் பிரிவினும்
வேளாண் பெருநெறி வேண்டிய விடத்தும்
புணர்ந்துழி யுணர்ந்த வறிமடச் சிறப்பினு
மோம்படை கிளவிப் பாங்கின் கண்ணுஞ்
செங்கடு மொழியாற் சிதைவுடைத் தாயினு
மென்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ
யன்புதலை யடுத்தவன் பொறைக் கண்ணு
மாற்றது தீமை யறிவுறு கலக்கமுங்
காப்பின் கடுமை கையறவு வரினுங்
களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக்
காதன் மிகுதி யுளப்படப் பிறவு
நாடு மூரு மில்லுங் குடியும்
பிறப்புஞ் சிறப்பு மிறப்பு நோக்கி,
யவன்வயிற் றோன்றிய கிளவியொடு தொகைஇ,
யனைநிலை வகையான் வரைதல் வேண்டினு,
மையச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப்,
பொய்யென மாற்றி மெய்வழி கொடுப்பினு,
மவன்விலங் குறினுங் களம்பெறக் காட்டினும்
பிறன்வரை வாயினு மவன்வரைவு மறுப்பினு
முன்னிலை யறனெனப் படுத்தலென் றிருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்
வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டினு
மாங்க தன்றன்மை யின்வன் புறையுளப்படப்
பாங்குற வந்த நாலெட்டு வகையுந்
தாங்கருஞ் சிறப்பிற் றோழி மேன.

24. களவில ராயினுங் காமமெய்ப் படுப்பினு
மன்புமிகத் தோன்றினுந் தலைப்பெய்து காணினுங்
கட்டினுங் கழங்கினும் வெறியென விருவரு

மொட்டிய திறத்தாற் செய்திக் கண்ணு
மாடிய சென்றுழி யழிவுதலை வரினுங்
காதல் கைம்மிகக் கனவின ரற்றலுந்
தோழியை வினாவலுந் தெய்வம் வாழ்த்தலும்,
போக்குடன் றந்தபிற் றோழியொடு கெழீஇக்
கற்பி னாக்கத்து நிற்றற் கண்ணும்
பிரிவி னெச்சத்து மகனெஞ்சு வலிப்பினு
மிருபாற் குடிப்பொரு ளியல்பின் கண்ணு
மின்ன வகையிற் பதின்மூன்று கிளவியோ
டன்னவை பிறவுஞ் செவிலி மேன.

25. தாய்க்கும் வரையா ருணர்வுடம் படினே.

26. கிழவோ னறியா வறிவின ளிவளென,
மையறு சிறப்பி னுயர்ந்தோர் பாங்கி
னையக் கிளவியி னறிதலு முரித்தே.

27. தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்த
லெண்ணுங் காலைக் கிழத்திக் கில்லைப்
பிறநீர் மாக்க ளின்றிய வாயிடை,
பெய்ந்நீர் போலு முணர்விற் றென்ப.

28. காமக் கூட்டந் தனிமையிற் பொலிதலிற்
றாமே தூது வராதலு முரித்தே.

29. அவன்வரம் பிறத்த லறந்தனக் கின்மையிற்
களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகுந்
தான்செலற் குரிய வழியா கலான.

30. தோழியின் முடியு மிடனு மாருண்டே.

31. முந்நா ளல்லது துணையின்று கழியா
தந்நா ளகத்து மதுவரை வின்றே.

32. பன்னூறு வகையினுந் தன்வயின் வரூஉ
நன்னய மருங்கி னாட்டம் வேண்டலிற்
றுணைச்சுட்டுக் கிளவி கிழவிய தாகுந்
துணையோர் கரும மாக லான.

33. ஆய்பெருஞ் சிறப்பி னருமறை கிளத்தலிற்
றாயெனப் படுவோள் செவிலி யாகும்.

34. தோழி தானே செவிலி மகளே.

35. சூழ்தலு முசாத்துணை நிலைமையிற் பொலிமே.

36. குறையுற வுணர்தன் முன்னுற வுணர்த
லிருவரு முளவழி யவன்வரவு ணர்தலென
மதியுடம் படுத்த லொருமூ வகைத்தே.

37. அன்ன வகையா னுணர்ந்த பினல்லது
பின்னிலை முயற்சி பெறாளென மொழிப.

38. முயற்சிக் காலத் ததற்பட நாடிப்
புணர்த்த லாற்றலு மவள்வ யினான.

39. குறியெனப் படுவ திரவினும் பகலினு,
மறியத் தோன்று மாற்ற தென்ப.
40. இரவுக் குறியே யில்லகத் துள்ளு
மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே
மனையகம் புகாக் காலை யான.
41. பகற்புணர் களனே புறனென மொழிப,
வவளறி வுணர வருவழி யான.
42. அல்ல குறிப்படுதலும் வளவயி னுரித்தே
யவன்குறி மயங்கிய வமைவொடு வரினே
43. ஆங்காங் கொழுகு மொழுக்கமு முண்டே
யோங்கிய சிறப்பி னொருசிறை யான.
44. மறைந்த வொழுக்கத் தோரையு நாளுந்
துறந்த வொழுக்கங் கிழவோர்க் கில்லை.
45. ஆறின தருமையு மழிவு மச்சமு
மூறு மளப்பட வதனோ ரன்ன.
46. தந்தையுந் தன்னையு முன்னத் தினுணர்ப.
47. தாயறி வுறுதல் செவிலி யோடொக்கும்.
48. அம்பலு மலருங் களவுவெளிப் படுத்தலி
னாங்கவன் முதலவன் கிழவ னாகும்.
49. வெளிப்பட வரைதல் படாமை வரைதலென்
றாயிரண் டென்ப வரைத லாறே.
50. வெளிப்படை தானே கற்பினோ டொப்பினு
ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக
வரையாது பிரிதல் கிழவோர்க் கில்லை.

களவியல் முற்றும்.

CHAPTER IV

கற்பியல்

LAWFUL MARRIAGE AND THE MATRIMONIAL STATE

1. கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்,
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே.

2. கொடுப்போ ரன்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான.

3. மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்
கீழோர்க் காகிய காலமு முண்டே

4. பொய்யும் வழுவுந் தோன்றிப் பின்ன
ரையர் யாத்தனர் கரண மென்ப.

5. கரணத்தின மைந்து முடிந்த காலை,
நெஞ்சு தளைய விழ்ந்த புணர்ச்சிக் கண்ணு,
மெஞ்சா மகிழ்ச்சி யிறந்து வருபருவத்து,
மஞ்ச வந்த வுரிமைக் கண்ணு,
நன்னெறிப் படருந் தொன்னலப் பொருளினும்,
பெற்ற தேஎத்துப் பெருமை யினிலைஇக்,
குற்றஞ் சான்ற பொருளெடுத் துரைப்பினு
நாமக் காலத் துண்டெனத் தோழி,
யேமுறு கடவு ளேத்திய மருங்கினும்
அல்ல நீரவார் வமோ டளைஇச்,
சொல்லுறு பொருளின் கண்ணுஞ் சொல்லென
வெனது(?)சுவைப்பினு நீகை தொட்டது
வானோ ரமுதம் புரையுமா லெமக்கென
வடிசிலும் பூவுந் தொடுதற் கண்ணு
மந்தணர் திறத்துஞ் சான்றோர் தேஎத்து
மந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினு
மொழுக்கங் காட்டிய குறிப்பினு மொழுக்கத்துக்
களவினு ணிகழ்ந்த வருமையைப் புலம்பி
யலமர லுள்ளமோ டளவிய விடத்து
மந்தரத் தெழுதிய வெழுத்தின மான
வந்த குற்றம் வழிகெட வொழுகலு
மழியலஞ் சலென் றாயிரு பொருளினுந்
தானவட் பிழைத்த பருவத் தானு,
நோன்மையும் பெருமையு மெய்கொள வருளிய
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித்
தன்னி னாகிய தகுதிக் கண்ணும்,

புதல்வற் பயந்த புனிறுசேர் பொழுதி
னெய்யணி மயக்கம் புரிந்தோ னோக்கி
யையர் பாங்கினு மமரர்ச் சுட்டியுஞ்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்
பயங்கெழு துணைவனைப் புல்லிய புல்லர்
துயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகிப்
புல்கென முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லன சீரடி புல்லிய விரவினு
முறலருங் குண்மையி னூடன்மிகுத் தோளைப்
பிறப்பிற் பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்
பிரிவி னெச்சத்துப் புலம்பிய விருவரைப்
பிரிவி னீக்கிய பகுதிக் கண்ணும்
நின்று நனிபிரி வினஞ்சிய பையுளுஞ்
சென்று கையிகந்து பெயர்த்துள்ளிய வழியுங்
காமத்தின் வலியுங் கைவிடி னச்சமுந்
தானவட் பிழைத்த நிலையின் கண்ணு
முடன்செறற் செய்கை யோடன்ன பிறவு
மடம் படவந்த தோழிக் கண்ணும்
வேற்று நாட்டகல் வயின் விழுமத்தானு,
மீட்டு வரவாய்ந்த வகையின் கண்ணு,
மவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்
பேரிசை யுர்திப் பாங்கர் பாங்கனும்,
காமக் கிழத்தி மனையோ ளென்றிவ
ரேமுறு கிளவி சொல்லிய வெதிருஞ்
சென்ற தேஎத் துழப்புந னிவிளக்கி,
யின்றிச் சென்ற தந்நிலை கிளப்பினு,
மருந்தொழின் முடித்த செம்மற் காலை,
விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணு,
மாலை யேந்திய பெண்டிரு மக்களுங்,
கேளி ரொழுக்கத்துப் புகற்சிக் கண்ணு,
மேனைவாயிலெதிரொடுதொகைஇப்
பண்ணமை பகுதிப் பதினொரு மூன்று
மெண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன.

6\. அவனறி வாற்ற வறியு மாகலி,
னேற்றற் கண்ணு நிறுத்தற் கண்ணு,
முரிமை கொடுத்த கிழவோன் பாங்கிற்
பெருமை யிற்றிரி யாவன்பின் கண்ணுங்
கிழவன் மகடூஉப் புலம்பு பெரிதாகலி
னலமரல் பெருகிய காமத்தின் மிகுதியு
மின்பமு மிடும்பையு மாகிய விடத்துங்

கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி
நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ
நளியி னீக்கிய விளிவரு நிலையும்
புகன்ற வுள்ளமொடு புதுவோர் சாயற்
ககன்ற கிழவனைப் புலம்புநனி காட்டி
யியன்ற நெஞ்சந் தலைப்பெயர்த் தருக்கி
யெதிர்பெயது மறுத்த லீரத்து மருங்கினுந்
தங்கிய வொழுக்கத் துக்கிழவனை வணங்கி,
யெங்கை யர்க்குரை யெனவிடுதற் கண்ணுஞ்,
செல்லாக் காலைச் செல்கென விடுத்தலு,
காமக் கிழத்தி தன்மகட் தழீஇ,
யேமுறு விளையாட் டிறுதிக் கண்ணுஞ்,
சிறந்த செய்கை யவ்வழித் தோன்றி,
யறம்புரி யுள்ளமொடு தன்வர வறியாமைப்,
புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானுந்,
தந்தை யரொப்பர் மக்களென் பதனா,
லந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலுங்,
கொடியோர் கொடுமை சுடுமென வொடியாது,
நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப்,
பகுதியி னீங்கிய தகுதிக் கண்ணுங்,
கொடுமை யொழுக்கங் கோடல் வேண்டி
யடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்,
காத லெங்கையர் காணி னன்றென,
மாதர் சான்ற வகையின் கண்ணுந்,
தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை
மாயப் பரத்தை யுள்ளிய வழியுந்,
தன்வயிற் சிறப்பினு மவன்வயிற் பிரிப்பினு
மின்னாத் தொல்சூ ளெடுத்தற் கண்ணுங்
காமக் கிழத்தியர் நலம்பா ராட்டிய,
தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணுங்,
கொடுமை யொழுக்கத்துத் தோழிக் குரிமைய,
மறுவறு சிறப்பிற் கற்பிற் றிரியாமைக்,
காய்தலு முவத்தலும் பிரிதலும் பெட்டலு,
மாவயின் வரூஉம் பலவேறு நிலையினும்,
வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக்,
கிழவோன் செப்பல் கிழவ தென்ப.

7\. புணர்ந்துடன் போகிய கிழவோ ளன்மனை,
யிருந்திடைச் சுரத்தி றைச்சியும் வினையுஞ்,
சுட்டி யன்புறுத் தற்குக்கிளத்த றானே,
கிழவோன் செய்வினைக் கெச்ச மாகும்.

8. தோழியுள் ளுறுத்த வாயில் புகுப்பினு,
மாவயி னிகழு மென்மனார் புலவர்.

9. பெறற்கரும் பெரும்பொருண் முடிந்த பின்வந்த,
தெறற் கருமரபிற் சிறப்பின் கண்ணு,
மற்ற வழியுரைப் பினுமற்ற மில்லாக்,
கிழவோட் சுட்டிய தெய்வக் கடத்தினுஞ்.
சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறைப்பினு,
மடங்கா வொழுக்கத் தவன்வயி னழிந்தோளை,
யடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்,
வணங்கியன் மொழியான் வணங்கற் கண்ணும்,
புறம்படு விளையாட்டுப் புல்லிய புகற்சியுஞ்,
சிறந்த புதல்வனைத் தேராது புலம்பினு,
மாணலந்தாவெனவகுட்தற்கண்ணும்,
பேணாவொழுக்கநாணியபொருளினுஞ்,
சூணயட்திறட்தாற்சோர்வுகண்டழியினும்,
பெரியோரொழுக்கம்பெரிதெனக்கிளந்து,
பெறுதகை யில்லாப் பிழைப்பினு மவ்வயி,
னுறுதகை யில்லாப் புலவியுண் மூழ்கிக்,
கிழவோன் பானின்று கெடுத்தற் கண்ணு,
முணர்ப்பு வயின் வாரா வூடலுற்றோள்வயி,
னுணர்த்தல் வேண்டிய கிழவோன் பானின்று,
தான்வெகுண் டாக்கிய தகுதிக் கண்ணு,
மருமைக் காலத்துப் பெருமை காட்டிய,
வெண்மைக் காலத் திரக்கத் தானும்,
பாணர் கூத்தர் விறலிய ரென்றிவர்,
பேணிச் சொல்லிய பிறவினை யேதிரு,
நீத்த கிழவனை நிகழுமாறு படீஇ
யாக்காத்தற் றமையிற் கண்ணின்று பெயர்ப்பினும்,
பிரியுங் காலை யெதிர்நின்று சாற்றிய
மரபுடை யேதிரு முளப்படப் பிறவும்,
வகைபட வந்த கிளவி யெல்லாந்
தோழிக் குரிய வென்மனார் புலவர்.

10. புல்லுதன் மயக்கும் புலவிக் கண்ணு,
மில்லோர் செய்வினை நிகழ்ச்சிக் கண்ணும்
பலவேறு புதல்வற் கண்டுநனி யுவப்பினு
மறையின் வந்த மனையோள் செய்வினைப்
பொறையின்று பெருகிய பருவரற் கண்ணுங்
காதற் சோர்விற் கடப்பாட் டாண்மையிற்,
றாய்போற் றழீஇக் கழறிய மனைவியைக்
காய்வின் றவன்வயிற் பொருட்தற் கண்ணு,

மின்னகைப் புதல்வனைத் தழீஇ யிழையணிந்து
பின்னவர் வந்த வாயிற் கண்ணு
மனையோ ளொத்தலிற் றன்னோ ரன்னோர்
மிகைபடக் குறித்த கொள்கைக் கண்ணு
மெண்ணிய பண்ணை யென்றிவற்றொடு பிறவும்,
கண்ணிய நாமக் கிழத்தியர் மேன.

11. கற்புங் காமமு நற்பா லொழுக்கமு
மெல்லியற் பொறையு நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தரு தலுஞ்சுற்ற மோம்பலும்,
பிறவு மன்ன கிழவோண் மாண்பு,
கண்முகம் புகன்ற முறையிற் கிழவோற் கிளத்த,
லகம்புகல் மரபின வாயில்கட் குரிய.

12. கழிவினும் நிகழ்வினு மெதிர்வினும் வழிக்கொள,
நல்லவை யுரைத்தலு மல்லவை கடிதலுஞ்,
செவிலிக் குரிய வாகு மென்ப.

13. சொல்லிய கிளவி யறிவர்க்கு முரிய.

14. இடித்து வரைநிறுத்தலு மவர தாகுங்
கிழவனுங் கிழத்தியு மவர்வரை நிற்றலின்.

15. உணர்ப்பு வரையிறப்பினுஞ் செய்குறி பிழைப்பினும்,
புலத்தலு மூடலுங் கிழவோற் குரிய.

16. புலத்தலு மூடலு மாகிய விடத்துஞ்
சொலத்தகு கிளவி தோழிக் குரிய.

17. பரத்தை மறுத்தல் வேண்டியுங் கிழத்தி
மடத்தகு கிழமை யுடைமை யானு
மன்பிலை கொடியை யென்றலு முரியள்.

18. அவன்குறிப் பறிதல் வேண்டியுங் கிழத்தி,
யகன்மலி யூடல கற்றியக் கண்ணும்,
வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே.

19. காமக் கடப்பினுட் பணிந்த கிளவி
காணுங் காலைக் கிழவோர்க் குரித்தே,
வழிபடு கிழமை யவட்கிய லான.

20. அருண்முந் துறுத்த வன்புபொதி கிளவி
பொருள்பட மொழிதல் கிழவோட்கு முரித்தே.

21. களவுங் கற்பு மலர்வரை லின்றே.

22. அலரிற் றோன்றுங் காமத்திற் சிறப்பே.

23. கிழவோன் விளையாட் டாங்கு மற்றே.

24. மனைவி தலைத்தாட் கிழவோன் கொடுமை
தம்முள வாதல் வாயில்கட் கில்லை.

25. மனைவி முன்னர்க் கையறு கிளவி
மனைவிக் குறுதி யுளவழி யுண்டே.

26. முன்னிலைப் புறமொழி யெல்லா வாயிற்கும்,
பின்னிலைத் தோன்று மென்மனார் புலவர்.

27. தொல்லவை யுரைத்தலு நுகர்ச்சி யேத்தலும்
பல்லாற் றானு மூடலிற் றணித்தலு
முறுதி காட்டலு மறிவுமெய்ந் நிறுத்தலு
மேதுவி னுணர்த்தலுந் துணிவு காட்டலு
மணிநிலை யுரைத்தலுங் கூத்தர் மேன.

28. நிலம்பெயர்ந் துரைத்தல் வரைநிலை யுரைத்தல்,
கூத்தற்கும் பாணற்கும் யாத்தவை யுரிய.

29. ஆற்றது பண்புங் கருமத்து விளைவு
மேவன்முடிவும் வினாவுஞ் செப்பு,
மாற்றிடைக் கண்ட பொருளு மிறைச்சியுந்,
தோற்றஞ் சான்ற வன்னவை பிறவு,
மிளையோர்க் குரிய கிளவி யென்ப.

30. உழைக்குறுந் தொழிலுங் காப்பு முயர்ந்தோர்க்கு,
நடக்கை வெல்லா மவர்கட் படுமே.

31. பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி யெதிர்ப் பாடாயினு,
மின்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினு
மிறந்தது நினைஇக் கிழவோ னாங்கட்,
கலங்கலு முரிய னென்மனார் புலவர்.

32. தாய்போற் கழறித் தழீஇக் கோட,
லாயமனைக் கிழத்திக்கு முரித்தென மொழிப,
கவ்வொடு மயங்கிய காலை யான.

33. அவன்சோர்பு காத்தல் கடனெனப் படுதலின்
மகன் றாயுயர்புந் தன்னுயர் பாகுஞ்,
சொல்வன பணி(னீ) மொழியியல் பாகலான.

34. எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார்.

35. புறத்தோ ராங்கட் புணர்வ தென்ப.

36. காமநிலை யுரைத்தலுந் தோழிநிலை யுரைத்தலுங்,
கிழவோன் குறிப்பினை யெடுத்தனர் மொழிதலு,
மாவொடு பட்ட நிமித்தமுங் கூறலுஞ்,
செலவுறு கிளவியுஞ் செலவழுங்கு கிளவிவு,
மன்ன பிறவும் பார்ப்பார்க் குரிய.

37. எல்லா வாயிலு மிருவர் தேஎத்தும்,
புல்லிய மகிழ்ச்சிப் பொருள வென்ப.

38. அன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றிற்
சிறைப்புறங் குறித்தன றென்மனார் புலவர்.

39. தற்புகழ் கிளவி கிழவன் முற்கிளத்த,
லெத்திறத் தானுங் கிழத்திக் கில்லை
முற்பட வகுத்த விரண்டலங் கடையே.

40. கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி,
கிழவோன் வினைவயி னுரிய வென்ப.
41. மொழியெதிர் மொழிதல் பாங்கற் குரித்தே.
42. குறித்தெதிர் மொழித லஃகித் தோன்றும்.
43. துன்புறு பொழுதினு மெல்லாங் கிழவன்,
வன்புறுத் தல்லது சேரலில்லை.
44. செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே
வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்.
45. கிழவிநிலையே வினையிடத் துரையார்
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்.
46. பூப்பின் புறப்பா டீரறு நாளு
நீத்த கன்றுறையா ரென்மனார் புலவர்,
பரத்தையிற் பிரிந்த காலை யான
வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது.
47. வேந்துறு தொழிலே யாண்டின தகமே.
48. ஏனைப் பிரிவு மவ்விய னிலையும்.
49. யாறுங் குளனுங் காவு மாடிப்
பதியிகந்து நுகர்தலு முரிய வென்ப.
50. காமஞ் சான்ற கடைக்கோட் காலை
யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றுத லிறந்ததன் பயனே.
51. தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி யிளையர் விருந்தினர்
கூத்தர் விறலி யறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில் களென்ப.
52. வினைவயிற் பிரிந்தோன் மீண்டு வருகாலை,
யிடைச்சுர மருங்கிற் றவிர்த லில்லை
யுள்ளம் போல வுற்றுழி யுதவும்
புள்ளியற் கலிமா வுடைமை யான.

CHAPTER V

பொருளியல்

EXPLANATION OF TERMS AND DISCREPANCIES

1. இசைதிரிந் திசைப்பினு மியையுமன் பொருளே,
யசைதிரிந் தியலா வென்மனார் புலவர்.
2. நோயு மின்பமு மிருவகை நிலையிற்,
காமங் கண்ணிய மரபிடை தெரிய,

எட்டன் பகுதியும் விளங்க வொட்டிய,
வுறுப்புடையது போலுணர் வுடைய துபோன்,
மறுத்து ரைப்பது போனெஞ்சொடு புணர்த்துஞ்
சொல்லா மரபின வற்றொடு கெழீஇச்,
செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியு,
மவர வருறுபிணி தமபோற் சேர்த்தியு,
மறிவும் புலனும் வேறுபட நிறீஇ,
யிருபெயர் மூன்று முரிய வாக,
வுவம வாயிற் படுத்தலு முவமமோ
டொன்றிடத் திருவர்க்கு முரியபாற் கிளவி.

3. கனவு முரித்தா லவ்விடத் தான.

4. தாய்க்கு முரித்தாற் போக்குடன் கிளப்பின்.

5. பால்கெழு கிளவி நால்வர்க்கு முரித்தே.

6. நட்பி னடக்கையா (ங்கலங்கடையே) மிரண்டலங் கடையே.

7. உயிரு நாணு மடனு மென்றிவை
செயிர்தீர் சிறப்பினா லவர்க்கு முரிய.

8. வண்ணந் திரிந்து(பசந்து) புலம்புறு காலை,
யுணர்ந்தது போல வுறுப்பினைக் கிழவி,
புணர்ந்த வையிற் புணர்க்கவும் பெறுமே.

9. உடம்பு முயிரும் வாடியக் கண்ணு
மெண்ணுற் றனள்கொ லிவையெ னினல்லது
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை.

10. ஒருசிறை நெஞ்சமோடு சாவுங் காலை
யுரிய் தாகலு முண்டெடன மொழிப.

11. தன்வயிற் காத்தலு மவன்வயின் வேட்டலு
மன்ன விடங்க ளல்வழி யெல்லா
மடனொடு நிற்றல் கடனென மொழிப.

12. அறத்தொடு நிற்குங் காலத் தன்றி
யறத்தியன் மரபில டோழி யென்ப.

13. எளித்த லேத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுத லுசாத லேதீடு தலைப்பா
டுண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ,
யவ்வெழு வகைய வென்மனார் புலவர்.

14. உற்றுழி யல்லது சொல்லின் மையி
னப்பொருள் வேட்கை கிழவி யினுணர்ப.

15. செறிவு நிறைவுஞ் செம்மையுஞ் செப்பு
மறிவு மருமையும் பெண்ப ாலான.

16. பொழுது மாறுங் காப்பு மென்றிவற்றின்
வழுவி னாகிய குற்றங் காட்டலுந்,
தன்னை யழித்லு மவனூ றஞ்சலு,

மிரவினும் பகலினு நீவர லென்றலுங்,
கிழவோன் றன்னை வார லென்றலு,
நன்மையுந் தீமையும் பிறிதினைக் கூறலும்,
புரைபட வந்த வன்னவை பிறவும்,
வரைதல் வேட்கைப் பொருள வென்ப.

17. வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தன்
மரீஇய மருங்கி னுரித்தென மொழிப.

18. தேரும் யானையுங் குதிரையும் பிறவு,
மூர்ந்த னரியங்கலு முரிய ரென்ப (உரியவென்ப.)

19. உண்டற் குரிய வல்லாப் பொருள்களை
யுண்டன போலக் கூறலு மரபே.

20. பொருளென மொழிதலும் வரைநிலை யின்றே
காப்புக் கைம்மிகு தலுண்மை யான.

21. அன்பே யறனே யின்பநா ணொடு
தறந்த வொழுக்கம் பழித்தன் றாகலி
னொன்றும் வேண்டா காப்பி னுள்ளே.

22. சுரமென மொழிதலும் வரைநிலை யின்றே
(காப்புக் கைம்மிகுத லுண்மை யான.)

23. உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்,
வழக்கு வழிப்படுதல் செய்யுட் கடனே.

24. அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின்.
வழக்கென வழங்கலும் பழித்தன றென்ப.

25. மிக்க பொருளினுட் பொருள்வகைபுணர்க்க,
நாணுட்தலைப்பிரியா நல்வழிப் படுத்தே.

26. முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொ,
னிலைக் குரிமர பினிற்கவும் பெறுமே.

27. தாயத் தினடை யாவீயச் செல்லா
வினைவயிற் றங்கா வீற்றுக் கொளப்படா
வெம்மென வரூஉங் கிழமைத் தோற்ற
மல்லா வாயினும் புல்லுவ் வுளவே.

28. ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும்
வருவன தாமே வழக்கென மொழிப.

29. எல்லா வுயிர்க்கு மின்ப மென்பது
தான மர்ந்து வரூஉ மேவற்றாகும்.

30. பரத்தை வாயி னால்வர்க்கு முரித்தே
நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர்.

31. ஒருதலை யுரிமை வேண்டினு மகடூஉப்,
பிரித லச்ச முண்மை யானு,
மம்பலு மலருங் களவுவெளிப் படுக்குமென்
றஞ்சவந்த வரங்கிரு வகையி(னும்) னோக்கொடு

வந்த விடையுறு பொருளினும்,
போக்கும் வரவு மனைவிக் கட்டோன்றும்.

32. வருத்த மிகுதி கட்டுங் காலை
யுரித்தென மொழிப வாழ்க்கை யுளிரக்கம்.

33. மனைவி யுயர்வுங் கிழவோன் பணிவு,
நினையுங் காலைப் புலவியு ளுரிய.

34. நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற்
புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே.

35. இறைச்சி தானே பொருட்புறத் ததுவே.

36. இறைச்சியிற் பிறக்கும் பொருளு மாருளவே,
திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே.

37. அன்புறு தகுன விறைச்சியுட் சுட்டலும்,
வன்பொறை யாகும் வருந்திய பொழுதே. (அன்புறுத்தவன,
அன்புறுத்துவன.)

38. செய்பொரு ளச்சமும் வினைவயிற் பிரிவு,
மெய்பெற வுணர்ந்ததுங் கிழவிபாராட்டே.
(மெய்பெறவுணர்ட்தும்.)

39. கற்புவழிப் பட்டவள் பரட்தை யேத்தினு,
முள்ளத் தூட லுண்டென மொழிப.

40. கிழவோள் பிறழ்குண மிவையெனக் கூறிக்,
கிழவோன் குறிப்பினை யுணர்தற்கு முரியள்.

41. தம்முறு விழுமம் பரத்தையர் கூறினு,
மெய்மை யாக வவர்வயி னுணர்ந்து,
தலைத்தாட் கற்ற மெதிர்பொழு தின்றே. (தாட்கழற்று.)

42. மலிதலு மூடலு மவையலங் கடையே.

43. பொழுது தலைவைத்த கையறு காலை
யிறந்த போலக் கிளக்குங் கிளவி,
மடனே வருத்த மருட்கை மிகுதியோ,
டவைநாற் பொருட்கணி கழுமென்ப.

44. இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி
நிரம்ப நீக்கி நிறுத்த லன்றியும்,
வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலு
நல்வகை யுடைய நலத்திற் கூறியும்,
பல்வகை யானும் படைக்கவும் பெறுமே.

45. உயர்மொழிக் கிளவி யுறழுங் கிளவி
(யையக்கிளவியாடூஉவிற்குரிட்தே)

46. உறுக ணோம்ப றன்னியல் பாகலி
னுரிய தாகுந் தோழிக ணுரனே.

47. உயர்மொழிக் கிளவியு முரிய வாலவட்கே.

48. வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்த
றாவின் றுரிய தத்தங் கூற்றே.

49. உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக்,
கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே.
50. அந்தமில் சிறப்பி னாகிய வின்பந்,
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே.
51. மங்கல மொழியு மவையல மொழியு
மாறி லாண்மையிற் சொல்லிய மொழியுங்,
கூறிய மருங்கிற் கொள்ளு மென்ப. (அவைஇய.)
52. சின்னே பேதமை நிலம்புரி நல்குர
வனைநால் வகையுஞ் சிறப்பொடு வருமே. (நிலம்பிரி.)
53. அன்னை யென்னை யென்றலு முளவே.
54. தொன்னெறி முறைமை சொல்லினு மெழுத்தினுந்,
தொன்றா மரபின் றென்மனார் புலவர். (மரபினவென்மனார்.)
55. ஒப்பு முருவும் வெறுப்பு மென்றா
கற்பு மேரு மெழிலு மென்றா,
சாயலு நாணு மடனு மென்றா,
நோயும் வேட்கையு நுகர்வு மென்றாங்
காவயின் வருஉங் கிளவி யெல்லா
நாட்டியன் மரபி னெஞ்சு கொளினல்லது
காட்ட லாகாப் பொருள வென்ப.
56. இமையோர் தேஎத்து மெறிகடல் வரைப்பினு,
மவையில் கால மின்மை யான.

CHAPTER VI

மெய்பாட்டியல்

OF PASSIONS.

1. பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளும்,
கண்ணிய புறனே நானான் கென்ப.
2. நாலிரண் டாகும் பாலு மாருண்டே.
3. நகையே யழுகை யிளிவரன் மருட்கை
யச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென்,
றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப.
4. எள்ள லிளமை பேதமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப.
5. இளிவே யிழவே யசைவே வறுமையென்
றிளிவில் கொள்கை யழுகை நான்கே.
6. மூப்பே பிணியே வருத்த மென்மையோ,
டியாப்புற வந்த விளிவர னான்கே.
7. புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே.

8. அணங்கே விலங்கே களவர் தம்மிறையெனப்,
பிணங்கல் சாலா வச்ச நான்கே.

9. கல்வி தறுகண் ணிசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமித நான்கே.

10. உறுப்பறை குடிகோ ளலைகொலை யென்ன,
வெறுப்ப வந்த வெகுளி நான்கே.

11. செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்,
றல்ல னீத்த வுவகை நான்கே.

12. ஆங்கவை யொருபா லாக வொருபா
லுடைமை யின்புற னடுவுநிலை யருள
றன்மை யடக்கம் வரைதலன் பெனாஅக்
கைமிக நலிதல் சூழ்ச்சி வாழ்த்த
னாணு தறுஞசலாற் றுக்கன வெனாஅ
முனித னினைதல் வெரூஉ தன்மடிமை
கருத லாராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅக்
கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொறமை
வியத்த லைய மிகைநடுக் கெனாஅ
விவையு முளவே யவையலங் கடையே.

13. புகுமுகம் புரிதல் பொறிநுதல் வெயர்த்த
னகுநய மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு
தகுமுறை நான்கே யொன்றென மொழிப.

14. கூழை விரித்தல் காதொன்று களைத
லூழணி தைவர லுடைபெயர்த் துடுத்தலொடு,
கெழீஇய நான்கே யிரண்டென மொழிப.

15. அல்கு றைவரல் அணிந்தவை திருத்த,
லில்வலி யறுத்த லிருகையு மெடுத்தலொடு,
சொல்லிய நான்கே மூன்றென மொழிப.

16. பாராட் டெடுத்தன் மடந்தப வுரைத்த,
லீரமில் கூற்ற மேற்றலர் நாணல்,
கொடுப்பவை கோட லுளப்படத் தொகைஇ,
யெடுத்த நான்கே நான்கென மொழிப.

17. தெரிந்து உடம் படுதல் திளைப்பு வினை மறுத்தல்
கரந்து இடத்து ஒழிதல் கண்ட வழி உவத்தலொடு
பொருந்திய நான்கே ஐந்து என மொழிப.

18. புறஞ் செயச் சிதைத்தல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையறவு உரைத்தலொடு
விளம்பிய நான்கே ஆறு என மொழிப.

19. அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
மன்னிய வினைய நிமித்தம் என்ப.

20. வினை உயிர் மெலிவு இடத்து இன்மையும் உரித்தே.

21. அவையும் உளவே அவை அலங்கடையே.

22. இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்
எதிப் பெய்து பரிதல் ஏதம் ஆய்தல்
பசியட நிற்றல் பசலை பாய்தல்
உண்டியிற் குறைதல் கனவொடு மயங்கல்
பொய்யாக் கோடல் மெய்யே என்றல்
ஐயஞ் செய்தல் அவன்று அமர் உவத்தல்
அறன் அளித்து உரைத்தல் ஆங்கு நெஞ்சு அழிதல்
எம் மெய் ஆயினும் ஒப்புமை கோடல்
ஒப்பு வழி உவத்தல் கூறு பெயர் கேட்டல்
நலத்தக நாடிற் கலக்கமும் அதுவே.

23. முட்டு வயிற் கழறல் முனிவு மெய்ந் நிறுத்தல்
அச்சத்தின் அகறல் அவன் புணர்வு மறுத்தல்
தூது முனிவு இன்மை துஞ்சிச் சேர்தல்
காதல் கைம் மிகல் கட்டுரை இன்மை என்று
ஆ இரு நான்கே அழிவில் கூட்டம்.

24. தெய்வம் அஞ்சல் புரை அறந் தெளிதல்
இல்லது காய்தல் உள்ளது உவர்த்தல்
புணர்ந்துழி உண்மை பொழுது மறுப் பாக்கம்
அருள் மிக உடைமை அன்பு தொக நிற்றல்
பிரிவு ஆற்றாமை மறைந்தவை உரைத்தல்
புறஞ் சொல் மாணாக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்தும் செப்பிய பொருளே.

25. பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருஎன
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.

26. நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொல் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
இன்புறல் ஏழைமை மறப்போடு ஒப்புமை
என்று இவை இன்மை என்மனார் புலவர்.

27. கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நல் நயப் பொருள்கோள் எண்ண அருங்குரைத்தே,

CHAPTER VII

உவமவியல்

OF ANALOGY

1. வினை பயன் மெய் உரு என்ற நான்கே
வகை பெற வந்த உவமத் தோற்றம்.
2. விரவியும் வரூஉம் மரபின என்ப.
3. உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை.
4. சிறப்பே நலனே காதல் வலியொடு
அந் நாற் பண்பும் நிலைக் களம் என்ப.
5. கிழக்கிடு பொருளொடு ஐந்தும் ஆகும்.
6. முதலும் சினையும் என்று ஆ இரு பொருட்கும்
நுதலிய மரபின் உரியவை உரிய.
7. சுட்டிக் கூறா உவமம் ஆயிற்
பொருள் எதிர் புணர்த்துப் புணர்ந்தப் புணர்த்தன கொளலே.
8. உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்.
9. பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருள் அது சிறப்பின் அஃது உவமம் ஆகும்.
10. பெருமையும் சிறுமையும் சிறப்பிற் தீராக்
குறிப்பின் வரூடம் நெறிப்பாடு உடைய.
11. அவை தாம்
அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை எனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
என்ற வியப்ப என்றவை எனாஅ
எள்ள விழைய விறப்ப நிகர்ப்ப
கள்ளக் கடுப்ப ஆங்கவை எனாஅக்
காய்ப்ப மதிப்பத் தகைய மருள
மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅப்
புல்லப் பொருவப் பொறப்பப் போல
வெல்ல வீழ ஆங்கவை எனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஒடப் புரைய என்றவை எனாஅ
ஆறாறு அவையும் அன்ன பிறவும்
கூறுங்காலைப் பல் குறிப்பினவே.
12. அன்ன ஆங்க மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப் பால்உவமம்.
13. அன்ன என் கிளவி பிறவொடும் சிவணும்.

14. எள்ள விழைய‌ப் புல்லர் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
என்று ஆங்கு எட்டே பயனிலை உவமம்.
15. கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய
ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப என்று
அப்பால் எட்டே மெய்ப் பால் உவமம்.
16. போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்த என்று
ஒத்து வரு கிளவி உருவின் உவமம்.
17. தத்த மரபிற் றோன்றுமன் பொருளே.
18. நாலி ரண்டாகும் பாலு மாருண்டே.
19. பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டென
வழிமருங் கறியத் தோன்று மென்ப.
20. உவமப் பொருளி னுற்ற துணருந்
தெளிமருங் குளவே திறத் தியலான.
21. உவமப் பொருளை யுணருங் காலை
மரீஇய மரபின் வழக்கின வாகும்.
22. இரட்டைக் கிளவி யிரட்டை வழித்தே.
23. பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்ன மரபிற் கூறுங் காலைத்
துணிவொடு வரூஉந் துணிவினோர் கொளினே.
24. உவமப் போலி யைந்தென மொழிப.
25. தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின
வினையினும் பயத்தினு முறுப்பினு முருவினும்
பிறப்பினும் வரூஉந் திறத்த வென்ப.
26. கிழவி சொல்லி னளவறி கிளவி
தோழிக் காயினிலம் பெயர்ந்து ரையாது.
27. கிழவோற் காயி னுரனொடு கிளக்கும்.
28. ஏனோர்க் காயி னிடம்வரை வின்றே.
29. இனிதுறு கிளவியுந் துனியுறு கிளவியு
முவம மருங்கிற் றோன்று மென்ப.
30. கிழவோட் குவம மீரிடத் துரித்தே.
31. கிழவோற் காயி னிடம்வரை வின்றே.
32. தோழியுஞ் செவிலியும் பொருந்து வழிநோக்கிக்
கூறுதற் குரிய கொள்வழி யான.
33. வேறுபட வந்த வுவமத் தோற்றல்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்.
34. ஒரீஇக் கூறலு மரீஇய பண்பே.
35. உவமத் தன்மையு முரித்தென மொழிப
பயனிலை வந்த வழக்கத் தான.

36. தடுமா றுவமங் கடிவரை யின்றே.

37. அடக்கிய தோற்றம் விடத்தல் பண்பே
நிரனிறுத் தமைத்த னிரனிறை சுண்ணம்
வரன்முறை வந்த முன்றலங் கடையே.

CHAPTER VIII

செய்யுளியல்.

OF VERSIFICATION

1. மாத்திரை யெழுத்திய லசைவகை யெனஅ,
யாத்த சீரே யடியாப் பெனாஅ,
மரபே தூக்கே தொடை வகையெனஅ,
நோக்கே பாவே யளவிய லெனாஅத்,
திணையே கைகோள் கூற்றுவகை யெனாஅக்,
கேட்போர் களனே கால்வகை யெனாஅப்,
பயனே மெய்ப்பா டெச்சவகை யெனாஅ
முன்னம் பொருளே துறைவகை யெனாஅ
மாட்டே வண்ணமோ டியாப்பியல் வகையி
னாறுதலை யிட்ட வந்நா லைந்து
மம்மை யழகு தொன்மை தோலே
விருந்தே யியைபே புலனே யிழையெனாஅப்
பொருந்தக் கூறிய வெட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யுளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்து ரைத்தனரே.

2. அவற்றுள்
மாத்திரை வகையு மெழுத்தியல் வகையு
மேற்கிளந் தன்ன வென்மனார் புலவர்.

3. குறிலே நெடிலே குறிலிணை குறினெடி
லொற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி,
னேரு நிரையு மென்றி சினோரே.

4. இருவகை யுகரமோ டியைந்தன வரினே,
நேர்பு நிரைபு மாகு மென்ப.

5. குறிலிணை யுகர மல்வழி யான.

6. இயலசை முதலிரண் டேனைய வுரியசை.

7. தனிக்குறின் முதலசை மொழிசிதைந் தாகாது.

8. ஒற்றெழுத் தியற்றே குற்றிலிகரம்.

9. முற்றிய லுகரமு மொழிசிதைத்துக் கொள்ளா
நிற்ற லின்றே யீற்றடி மருங்கினும்.

10. குற்றிய லுகரமு முற்றிய லுகரமு
மொற்றெடுந் தோன்றி நிற்கவும் பெறுமே.
11. அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
வகுத்தன ருணர்த்தலும் வல்லோ ராறே.
12. ஈரசை கொண்டு மூவசைப் புணர்ந்துஞ்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே.
13. இயலசை மயக்க மியற்சீ ரேனை
யுரியசை மயக்கமா சிரிய வுரிச்சீர்.
14. முன்னிரை வரினு மன்ன வாகும்.
15. நேரவ ணிற்பி னியற்சீர்ப் பால.
16. இயலசை யீற்று முன்னுரி யசைவரினே
நிரையசை யியல வாகு மென்ப.
17. அளபெடை யசைநிலை யாகல முரித்தே.
18. ஒற்றள பெடுப்பினு மற்றென மொழிப.
19. இயற் சீரிறுதி முனேர வணிற்பி
னுரிச்சீர் வெண்பா வாகு மென்ப.
20. வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா மூவசை யென்ப. (மூவசையான.)
21. தன்பா வலவழித் தானடை வின்றே.
22. வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய.
23. வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீ
ரின்பா நேரடிக் கொருங்கு நிலையிலவே.
24. கலித்தளை மருங்கிற் கடியவும் படாஅ.
25. கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே.
26. வஞ்சி மருங்கினு மிறுதி நில்லா.
27. இசைநிலை நிறைய நிற்குவ் வாயினு,
மசைநிலை வரையார் சீர்நிலை பெறலே.
28. இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினர் கொளலே,
தளைவகை சிதையாத் தன்மை யான.
29. வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே.
30. இன்சீ ரியைய வருகுவ தாயின்,
வெண்சீர் வரையா ராசிரிய வடிக்கே.
31. அந்நிலை மருங்கின் வஞ்சி யுரிச்சீ,
ரொன்று தலுடைய வொரோவொரு வழிக்கே.
32. நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே.
33. அடியுள் ளனவே தளையொடு தொடையே.
34. அடியிறந்து வருத லில்லென மொழிப.
35. அடியின்சிறப்பே பாட்டெனப் படுமே.
36. நாலெழுத் தாதி யாக வாறெழுத்
தேறிய நிலைத்தே குறளடி யென்ப.

37. ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
யீரெழுத் தேற்ற மல்வழி யான.

38. பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
யொத்த நாலெழுத் தொற்றலங் கடையே.

39. மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
யீரெழுத்து மிகுதலு மியல்பென மொழிப.

40. மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
யீரெழுத்து மிகுதலு மிவட்பெறு மென்ப.

41. சீர்நிலை தானே யைந்தெழுத் திறவாது

42. நேர்நிலை வஞ்சிக் காறு மாகும்.

43. எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப.

44. உயிரில் லெழுத்து மெண்ணப் படாஅ,
வுயிர்த்திற மியக்க மின்மை யான.

45. வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்.

46. தன்சீ ரெழுத்தின் சிறுமை மூன்றே. (சின்மைமூன்றே.)

47. முச்சீரானும் வருமிடனு டைத்தே.

48. அசை கூனா குமவ்வயி னான.

49. சீர்கூ னாத னேரடிக் குரித்தே.

50. ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைத்த பதினேழ் நிலத்த
வெழுபது வகையின் வழுவில வாகி
யறுநூற் றிருபத் தைந்தா கும்மே.

51. ஆங்கனம் விரிப்பி னளவிறந் தனவே
பாங்குற வுணர்ந்ததோர் பன்னுங் காலை.

52. ஐவகை யடியு மாசிரியக் குரிய.

53. விராஅ யவரினு மொரூஉ நிலையிலவே.

54. தன்சீர் வகையினுந் தளைநிலை வகையினு,
மின்சீர் வகையினைந் தடிக்கு முரிய.

55. தன்சீ ருளவழித் தளைவகை வேண்டா
சீரிய மருங்கி னோரசை யொப்பி,
னாசிரியத் தளையென் றறியல் வேண்டும்.

56. குறளடி முதலா வளவடி காறு
முறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப.

57. அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய,
தளைவகை யொன்றாத் தன்மை யான.

58. அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி,
யிருநெடி லடியுங் கலியிற் குரிய.

59. நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை தட்டல்
வரைநிலை யின்றே யவ்வடிக் கென்ப.

60. விராய தளையு மொரூஉ நிலையின்றே.
61. இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கி
னிலைக்குரி மரபி னிற்கவும் பெறுமே.
62. வெண்டளை விரவியு மாசிரியம் விரவியு
மைஞ்சீ ரடியு முளவென மொழிப.
63. அறுசீ ரடியே யாசிரித் தளையொடு
நெறிபெற்று வரூஉ நேரடி முன்னே.
64. எழுசீ ரடியே முடுகி யனடக்கும்.
65. முடுகியல் வரையார் முதலீ ரடிக்கும்.
66. ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்
மூவகை யடியு முன்னு தலிலவே.
67. ஈற்ற லடியே யாசிரிய மருங்கிற்
றோற்ற முச்சீர்த் தாகுமென்ப.
68. இடையும் வரையார் தொடையுணர் வோரே.
69. முச்சீர் முரற்கையு ணிறையவு நிற்கும்.
70. வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே.
71. வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும்
அசைசீ ராகு மவ்வயி னான,
72. நேரீற் றியற்சீர் நிரையு நிரைபுஞ்
சீரேற் றிறூஉ மியற்கைய வென்ப,
73. நிரையவ ணிற்பி னேரு நேர்பும்
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்.
74. எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே.
75. வெண்பா வியலினும் பண்புற முடியும்.
76. எழுத்து முதலா வீண்டிய வடியிற்,
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்.
77. பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
யங்கதமுது சொலோ டவ்வேழ் நிலைத்தும்
வண்புகழ் மூவா தண்பொழில் வரைப்பி,
னாற்பெய ரெல்லை யகத்தவாய் வழங்கும்
யாப்பியன் மொழிய வென்மனார் புலவர்.
78. மரபேதானு நாற்சொல் லியலான் யாப்புவழிபட்டன.
79. அகவ லென்ப வெண்பா யாப்பே.
80. அஃதாஅன் றென்ப வெண்பா யாப்பே
81. துள்ள லோசை கலியென மொழிப.
82. தூங்க லோசை வஞ்சி யாகும்.
83. மருட்பா வேனை யிருசார் பல்லது,
தானிது வென்னுந் தனிநிலை யின்றே.
84. அவ்வியல் பல்லது பட்டாங்கு கிளவார்.

85. தூக்கியல் வகையே யாங்கென மொழிப.
86. மோனை யெதுகை முரணே யியைபென
நூனெறி மரபின் றொடைவகை யென்ப.
87. அளபெடை தலைப்பெய வைந்து மாகும்.
88. பொழிப்பு மொரூஉவுஞ் செந்தொடை மரபு
மமைத்தனர் தெரியி னவையு மாருளவே
89. நிரனிறுத் தமைத்தலு மிரட்டை யாப்பு
மொழிந்த வற்றியலான் முற்று மென்ப.
90. அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை
91. அஃதொழித் தொன்றி னெதுகை யாகும்
92. ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய.
93. மொழியினும் பொருளினு முரணுதன் முரணே.
94. இறுவா யொப்பினஃ தியைபென மொழிப.
95. அளபெழி னவையே யளபெடைத் தொடையே.
96. ஒருசீ ரிடையிட் டெதுகை யாயிற்,
பொழிப்பென மொழிப புலவ ராறே.
97. இருசீ ரிடையிடி னொரூஉ வெனமொழிப.
98. சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்
சொல்லிய புலவர் செந்தொடை யென்ப.
99. மெய்பெறு மரபிற் றொடைவகை தானே
யையீ ராயிரட் தாறைந் நூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற்,
றொன்பஃ தென்ப வுணர்ந்தி சினோரே.
100. தெரிந்தனர் விரிப்பின் வரம்பில பல்கும்.
101. தொடைநிலை வகையே யாங்கென மொழிப.
102. மாத்திரை முதலா வடிநிலை காறு
நோக்குதற் காரண நோக்கெனப் படுமே.
103. ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே.
104. அந்நிலை மருங்கி னறமுத லாகிய,
மும்முதற் பொருட்கு முரிய வென்ப.
105. பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பி,
னாசி ரியப்பா வெண்பா வென்றாங்,
காயிரு பாவினு ளடங்கு மென்ப.
106. ஆசிரிய நடைத்தே வஞ்சி யேனை
வெண்பா நடைத்தே கலியெனப் படுமே.
107. வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே.
108. வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்,
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ.

109. வாயுறை வாழ்த்தே யவையடக் கியலே,
செவியறி வுறூஉ வென்றவையு மன்ன.

110. வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்,
வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்
றாங்கு தலின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே.

111. அவையடக் கியலே யரிறபத் தெரியின்
வல்லார் கூறினும் வகுத்தனர் கொண்மினென்
றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தனரே.

112. செவியறைதானே
பொங்குத லின்றிப் புரையோர் நாப்ப
ண்விலுதல் கடனெனச் செவியுறுத் தற்றே.

113. ஒத்தா ழிசையு மண்டில யாப்புங்,
குட்டமு நேரடிக் கொட்டின வென்ப.

114. குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்.

115. மண்டிலங் குட்ட மென்றிவை யிரண்டுஞ்
செந்தூக் கியல வென்மனார் புலவர்.

116. அகவ லிசையன வகவன் மற்றவை,
எஔஈ ஆஎன் னையென் றிறுமே

117. நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே,
கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோ
டொத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின.

118. கைக்கிளை தானே
வெண்பா வாகி யாசிரிய வியலான் முடியவும் பெறுமே.

119. பரிபா டல்லே தொகைநிலை வகையா
னிதுபா வென்னு மியனெறி யின்றிப்
பொதுவா நிற்றற்கு முரித்தென மொழிப.

120. கொச்சக மராகஞ் சுரிதக மெருத்தொடு
செப்பிய நான்குந் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.

121. சொற்சீ ரடியு முடுகி யலடியு
மப்பா னிலைமைக் குரியவு மாகும்.

122. கட்டுரை வகையா னெண்ணொடு புணர்ந்து,
முட்டி யின்றிக் குறைவு சீர்த்தாகிய
மொழியசை யாகியும் வழியசை புணர்ந்துஞ்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே.

123. அங்கதந் தானே யரியபத் தெரியிற்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே.

124. செம்பொரு ளாயின் வசையெனப் படுமே.

125. மொழிகரந்து சொல்லி னதுபழிப் பாகும்.

126. செய்யுட் டாமே யிரண்டெனு மொழிப.

127. புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயின்,
செவியுறைச் செய்யு ளதுவென மொழிப.

128. வசையொடு நசையொடும் புணர்ந் தன்றாயி
னங்கதச் செய்யு ளென்மனார் புலவர்.

129. ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே,
கொச்சக முறழொடு கலிநால் வகைத்தே.

130. இருவகை யினொத்து மொவ்வா வியலினுந்,
தெரியிழை மகளிரொடு மைந்தரிடை வரூஉங்
கலப்பே யாயினும் புலப்பே யாயினு,
மைந்திணை மரபினறிவு வரத்தோன்றிப்
புணர்ப்பொடு புணர்ந்த பொருட்டிற முடையது
கலியெனப் படூஉங் காட்சித் தாகும்.

131. அவற்றுள்
ஒத்தாழிசைக் கலியிரு வகைத் தாகும்.

132. இடைநிலைப் பாட்டொடு தரவுபோக் கடையென,
நடைநவின் றொழுகு மொன்றென மொழிப.

133. தரவே தானு நாலடி யிழிபா
யாறி ரண்டுயர் பேறவும் படுமே.

134. இடைநிலைப் பாட்டே
தரவகப் பட்ட மரபின வென்ப.

135. இடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகு மாங்கென் கிளவி.

136. போக்கியல் வகையே வைப்பெனப் படுமே.

137. தரவிய லொத்து மதனகப் பட்டும்
புரைதீ ரிறுதி நிலையுரைத் தன்றே

138. ஏனை யொன்றே, தேவர்ப்பராவு முன்னிலைக் கண்ணே.

139. அதுவே,
வண்ணக மொருபோ கெனவிரு வகைத்தே.

140. வண்ணகந்தானே,
தரவே தாழிசை யெண்ணே வாரமென்,
றந்நால் வகையிற் றோன்று மென்ப.

141. தரவே தானு, நான்குமாறு மெட்டுமென்ற
நேரடி பற்றிய நிலைமைத் தாகும்.

142. ஒத்து மூன்றாகு மொத்தா ழிசையே
தரவிற் சுருங்கித் தோன்று மென்ப.

143. அடக்கியல் வாரந் தரவோ டொக்கும்

144. முதற்றொடை பெருகிச் சுருங்கும னெண்ணே.

145. எண்ணிடை யொழித லேத மின்றே
சின்ன மல்லாக் காலை யான.

146. ஒருபோ கியற்கையு மிருவகைத் தாகும்.
147. கொச்சக வொருபோகம் போதரங் கமென்,
றொப்ப நாடி யுணர்தல் வேண்டும்.
148. அவற்றுட் டரவின் றாகித் தாழிசை
பெற்றுந் தாழிசை யின்றித் தரவுடைத்தாகியு,
மெண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியு,
மடக்கிய லின்றியடி நிமிர்ந்தொ ழுகியும்,
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது,
கொச்சக வொருபோ காகு மென்ப.
149. ஒருபான் சிறுமை யிரட்டிய தனுயர்பே.
150. அம்போ தரங்க மறுபதிற் றடித்தே
செம்பால் வாரஞ் சிறுமைக் கெல்லை.
151. எருத்தே கொச்சக மராகஞ் சிற்றெ
ணடக்கியல் வாரமோ டந்நிலைக் குரித்தே.
152. ஒருபொரு ளுதலிய வெள்ளடி யியலாற்,
றிரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே.
153. தரவும் போக்கு மிடையிடை மிடைந்து
மைஞ்சீ ரடுக்கியு மாறுமெய் பெற்றும்,
வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்.
154. பாநிலை வகையே கொச்சகங் கலியென
நூனவில் புலவர் நுவன்ற றைந்தனரே.
155. கூற்று மாற்றமு மிடையிடை மிடைந்தும்,
போக்கின் றாதலு றழ்கலிக் கியல்பே.
156. ஆசிரியப் பாட்டி னளவிற் கெல்லை,
யாயிர மாகு மிழிபு மூன்றடியே.
157. நெடுவெண் பாட்டே முந்நா லடித்தே,
குறுவெண் பாட்டிற் களவெழு சீரே.
158. அங்கதப் பாட்டளவ் வற்றோ டொக்கும்.
159. கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுட்,
புறநிலை வாயுறை செவியறி வென்றிவை,
தொகுநிலை யளவி னடியில வென்ப.
160. புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்,
திறநிலை மூன்றுந் திண்ணிதிற் றெரியின்,
வெண்பா வியலினு மாசிரிய வியலினும்,
பண்புற முடியும் பாவின வென்ப.
161. பரிபாட்டெல்லை,
நாலீ ரைம்பது யர்வடி யாக
வையைந் தாகு மிழிபடிக் கெல்லை.
162. அளவியல் வகையே யனைவகைப் படுமே
163. எழுநிலத் தெழுந்த செய்யுட் டிரியி
னடிவரை யில்லன வாறென மொழிப.

164. அவைதாம்,
நூலினான வுரையினான,
நொடியொடு புணர்ந்த பிசியி னான,
வேது நுதலிய முதுமொழி யான,
மறைமொழி கிளந்த மந்திரத் தான,
கூற்றிடை டவைத்த குறிப்பி னான.
165. அவற்றுள்
நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலு முடிவு மாறுகொ ளின்றித்,
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
யுண்ணின் றகன்ற வுரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே.
166. அதுவே தானு மீரிரு வகைத்தே.
167. ஒருபொரு ணுதலிய சூட்திரத் தானு,
மினமொழி கிளந்த வோத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானு
மூன்று றுப்படக்கிய பிண்டத் தானுமென்
றாங்கனை மரபி னியலு மென்ப.
168. அவற்றுட் சூத்திரந் தானே
ஆடிநீழலி னறியத் தோன்றி,
நாடுத லின்றிப் பொருணனி விளங்க,
யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே.
169. நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்.
170. ஒருநெறி யின்றி விரவிய பொருளாற்
பொதுமொழி தொடரி னதுபட லமாகும்.
171. மூன்று றுப்படக்கிய தன்மைத் தாயிற்
றோன்று மொழிப்புல வரது பிண்டமென்ப.
172. பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப.
173. அதுவே தானு மிருவகைத் தாகும்.
174. ஒன்றே மற்றுஞ் செவிலிக் குரித்தே.
175. ஒன்றே யார்க்கும் வரைநிலை யின்றே.
176. ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானுந்
தோன்றுவது கிளந்த துணிவி னானுமென்
றிருவகைத் தென்ப பிசிநிலை வகையே.

177. நுண்மையுஞ் சுருக்கமு மொளியுடை முடைமையு,
மென்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉ
மேது நுதலியது முதுமொழி யென்ப.
178. நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப.
179. எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்,
பொருட்புறத் ததுவே குறிப்பு மொழியென்ப.
180. பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டி னியலபண் ணத்தினியல்பே. (பண்ணத்தியியல்,
பண்ணத்திய்யே.)
181. அதுவே தானும் பிசியொடு மானும்.
182. அடிநிமிர் கிளவி யீரா றாகும்.
183. அடியிகந்து வரினுங் கடிவரை யின்றே.
184. கிளரியல் வகையிற் கிளந்தன தெரியி
னளவியல் வகையே யனைவகைப் படுமே.
185. கைக்கிளை முதலா வெழுபெருந் திணையு
முற்கிளந் தனவே முறைமை யினான.
186. காமப் புணர்ச்சியு மிடந்தலைப் பாடும்
பாங்கொடு தழாலுந் தோழியிற் புணர்வுமென்
றாங்கநால் வகையினு மடைந்த சார்வொடு
மறைபென மொழிதன் மறையோ ராறே.
187. மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலு
பாங்கொடு தழாலுந் தோழியிற் புணர்வுமென்
றாங்க நால்வகையினு மடைந்த சார்வொடு
மறைபென மொழிதன் மறையோ ராறே.
188. மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலு
மிவைமுத லாகிய வியனெறி திரயாது
மலிவும் புலவியு மூடலு முணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே.
189. மெய்பெறு வகையே கைகொள் வகையே.
190. பார்ப்பான் பாங்கன் றோழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோ
டளவியன் மரபி னறுவகை யோருங்
களவினிற் கிளவிக் குரிய ரெனப.
191. ஊரு மயலுஞ் சேரி யோரு
நோய்மருந் தறிநருந் தந்தையுந் தன்னையுங்
கொண்டெடுத்து மொழியப் படுத லல்லது
கூற்ற வணின்மை யாப்புறத் தோன்றும்.
192. கிழவன் றன்னொடுங் கிழத்தி தன்னொடு
நற்றாங் கூறன் முற்றத் தோன்றது.

193. ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மகிழ்தல் கண்ட தென்ப.
194. இடச்சுர மருங்கிற் கிழவன் கிழத்தியொடு
வழக்கிய லாணையிற் கிளத்தற்கு முரியன.
195. ஒழிந்தோர்கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங் குரியர் முன்னத்தி னெடுத்தே.
196. மனையோள் கிளவியுங் கிழவன் கிளவியு
நினையுங் காலைக் கேட்குந ரவரே.
197. பார்ப்பா ரறிவ ரென்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே.
198. ஒருநெறிப் பட்டாங் கோரியன் முடியுங்
கரும நிகழ்ச்சி யிடமென மொழிப.
199 பரத்தை வாயி லெனவிரு கூற்றுங்
கிழத்தி சுட்டாக் கிளப்புப் பயனிலவே.
200. வாயி லுசா வேதம்மு ளுரிய.
201. ஞாயிறு திங்க ளறிவே நாணே
கடலே கானல் விலங்கே மானே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
யவையல் பிறவு நுதலிய நெறியாற்
சொல்லுந போலவுங் கேட்குந போலவுஞ்
சொலில யாங்கமையு மென்மனார் புலவர்.
202. இறப்பே நிகழ்வே யெதிர்வே பகலெனுந்
திறத்தியன் மருங்கிற் றெரிந்தென ருணரப்
பொருணிகழ் வுரைப்பது கால மாகும்.
203. இதுநனி பயக்கு மிதன்மா றென்னுந்
தொகைநிலைக் கிளவி பயனெனப் படுமே.
204. உய்த்துணர் வின்றித் தலைவரும் பொருளின்,
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்.
205. எண்வகை யியனெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிபின ததுவே.
206. சொல்லொடுங் குறிப்பொடு முடிவு கொளியற்கை,
புல்லிய கிளவி யெச்ச மாகும்.
207. இவ்விடத் திம்மொழி யிவரிவர்க் குரியவென்,
றவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்.
208. இன்பமு மிடும்பையும் புணர்வும் பிரிவு
மொழுக்கமு மென்றிவை யிழுக்கநெறி யின்றி
யிதுவாகித் துணைக் குரிப்பொரு ளெனுமது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை யென்ப.
209. அவ்வ மாக்களும் விலங்கு மின்றிப்
பிறவவண் வரினுந் திறவதி னாடித்

தத்த மியலான் மரபொடு முடியி
னத்திறந் தானே துறையெனப் படுமே
210. அகன்று பொருள்கிடப்பினு மணுகிய நிலையினு,
மியன்று பொருண்முடி யத்தந்தனருணர்த்தன்
மாட்டென மொழிதல் பாட்டியல் வழக்கே.
211. மாட்டு மெச்சமு நாட்ட லின்றி
யுடனிலை மொழியினுந் தொடர்நிலை பெறுமே.
212. வண்ணந் தானே நாலைந் தென்ப.
213. அவைதாம்;
பாஅ வண்ணந் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ண மெல்லிசை வண்ண
மியைபு வண்ண மளபெடை வண்ணம்,
நெடுஞ்சீர் வண்ணங் குறுஞ்சீர் வண்ணஞ்
சித்திர வண்ண நலிபு வண்ணம்
அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ண
மொழுகு வண்ண மொரூஉ வண்ண
மெண்ணு வண்ண, மகைப்பு வண்ணந்
தூங்கல் வண்ண மேந்தல் வண்ண
முருட்டு வண்ண முடுகு வண்ண
மென்றாங் கவையென்ப வறிந்திசி னோரே.
214. அவற்றுள்,
பாஅவண்ணஞ் சொற்சீர்த் தாகிநூற் பாற்பயிலும்.
215. தாஅவண்ண,
மிடையிட்டு வந்த வெதுகைத் தாகும்.
216. வல்லிசை வண்ணம் வல்லெழுத்துப் பயிலும்.
217. மெல்லிசை வண்ண மெல்லெழுத்து மிகுமே.
218. இயைபு வண்ண மிடையெழுத்து மிகுமே.
219. அளபெடை வண்ண மளபெடை பயிலும்.
220. நெடுஞ்சீர் வண்ண நெட்டெழுத்துப் பயிலும்.
221. குறுஞ்சீர் வண்ணங் குற்றெழுத்துப் பயிலும்.
222. சித்திர வண்ண
நெடியவுங் குறியவு நேர்ந்துடன் வருமே.
223. நலிபு வண்ண மாய்தம் பியலும்.
224. அகப்பாட்டுவண்ண
முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே.
225. புறப்பாட்டுவண்ண
முடிந்தது போன்று முடியா தாகும்.
226. ஒழுகு வண்ண மோசை யினொழுகும்.
227. ஒரூஉ வண்ண மொரூஉத் தொடைதொடுக்கும்.

228. எண்ணு வண்ண மெண்ணுப் பயிலும்.
229. அகைப்பு வண்ண மறுத்தறுத் தொழுகும்.
230. தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.
231. ஏந்தல் வண்ணஞ்,
சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்.
232. உருட்டு வண்ண மராகம் தொடுக்கும்.
233. முடுகு வண்ண
மடியிறந் தோடி யதனோ ரற்றே.
234. வண்ணந் தாமே யிவையென மொழிப.
235. வனப்பிய றானே வகுக்குங் காலை
சின்மென் மொழியாற் றாய பனுவலி
னம்மை தானெ யடிநிமிர் பின்றே.
236. செய்யுண் மொழியாற் சீர்ப்புனைந் தியாப்பி,
னவ்வகை தானே யழகெனப் படுமே.
237. தொன்மை தானே,
யுரையொடு புணர்ந்த பழமை மேற்றே.
238. இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்,
பரந்த மொழியா னடிநிமிர் தொழுகினுந்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்.
239. விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே.
240. ஞகாரை முதலா ளகார வீற்றுப்,
புள்ளி யிறுதி யியைபெனப் படுமே.
241. தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து,
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்,
புலனென மொழிப புலனுணர்ந் தோரே.
242. ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா வைந்தடி யொப்பித்
தோங்கிய மொழியா னாங்கன மொழுகி,
னிழை பினிலக்கண மியைந்த தாகும்.
243. செய்யுண் மருங்கின் மெய்பெற நாடி
யிழைத்த லிலக்கணம் பிழைத்தன போல
வருபவுள வெனும் வந்தவற் றியலாற்,
றிரிபின்றி முடித்த றெள்ளியோர் கடனே.

CHAPTER IX

மரபியல்

MISCELLANEA

1. மாற்றஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்
பார்ப்பும் பறழுங் குட்டியுங் குருளையுங்,
கன்றும் பிள்ளையு மகவு மறியு,
மொன்பதுங் குழவியோ டிளமைப் பெயரே.

2. ஏறு மேற்றையு மொருத்தலுங் களிறுஞ்
சேவுஞ் சேவலு மிரலையுங் கலையு,
மோத்தையுந் தகரு முதளு மப்பரும்,
போத்துங் கண்டியுங் கடுவனும் பிறவும்,
யாத்த வாண்பாற் பெயரென மொழிப.

3. பெடையும் பேடையும் பெட்டையும்பெண்ணு,
மூடுநரகுங்கடமையுமளகு,
மந்தியும்பாட்டியும் பிணவும்பிணையு,
மந்தஞ்சான்ற பிடியொடு பெண்ணே.

4. அவற்றுட், பார்ப்பும்பிள்ளையும் பறப்பவற்றிளமை.

5. தவழ்பவைதாமு மவற்றோரன்ன.

6. மூங்காவெருகெலி மூவரியணிலோ
டாங்கவைநான்குங் குட்டியென்ப.

7. பறழெனப்படினு முறழாண்டில்லை.

8. நாயேபன்றி புலிமுயனான்கு
மாயுங்காலைக் குருளையென்ப.

9. நரியுமற்றே நாடினர்கொளினே.

10. குட்டியம்பறழுங் கூற்றவண்வரையார்.

11. *பிள்ளைப்பெயரும் பிழைப்பாண்டில்லைக்*
கொள்ளுங்காலை நாயலங்கடையே.

12. யாடுங்குதிரையு நவ்வியுமுழையு
மோடும்புலவர் யுளப்படமறியே.

13. கோடுவாழ்குரங்குங் குட்டிகூறும்.

14. மகவும்பிள்ளையும் பறழும்பார்ப்பு
மவையுமன்ன வப்பாலான.

15. யானையுங்குதிரையுங் கழுதையுங்கடமையு
மானோடைந்துங் கன்றெனற்குரிய.

16. எருமையுமரையும் வரையாராண்டே.
17. கவரியுங்கராமு நிகரவற்றுள்ளே.
18. ஒட்டகமவற்றோ டொருவழிநிலையும்.
19. குஞ்சரம்பெறுமே குழவிப்பெயர்க்கொடை.
20. ஆவுமெருமையு மதுசொலப்படுமே.
21. கடமையுமரையு முதனிலையொன்றும்.
22. குரங்குமுசுவு மூகமுமூன்று
நிரம்பநாடி னப்பெயர்க்குரிய.
23. குழவியுமகவு மாயிரண்டல்லவை
கிழவவல்ல மக்கட்கண்ணே.
24. பிள்ளைகுழவி கன்றேபோட்டெனக்
கொள்ளவும்மையு மோரறி வுயிர்க்கே.
25. நெல்லும்புல்லு நேராராண்டே.
26. சொல்லியமரபி னிளமைதானே
சொல்லுங்காலை யவையலதிலவே.
27. ஒன்றறிவதுவே யவற்றொடுமூக்கே
நான்கறிவதுவே யவற்றொடுகண்ணெ
யைந்தறிவதுவே யவற்றொடுசெவியே
யாறறிவதுவே யவற்றொடுமனமென
நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே.
28. புல்லுமானு மோரறிவினவே
பறவுமளவே யக்கிளைப்பிறப்பே.
29. நந்துமுரணுமீரறிவினவே,
பிறவுமளவேயக்கிளைப்பிறப்பே(முரளும்)
30. சிதலுமெறும்பு மூவறிவினவே
பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே.
31. வண்டும்தும்பியு நான்கறிவினவே
பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே.
32. மாவும்புள்ளு மையறிவினவே
பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே.
33. மக்கடாமே யாறறிவுயிரே
பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே.
34. ஒருசார்விலங்கு மதுபெறற்குரிய.
35. வேழக்குரிட்தே விதந்துகளிறென்ல்
கேழற்கண்ணுங் கடிவரையின்றே.
36. புல்வாய்புலிபுழை மரையேகவரி
சொல்லியகராமோ டொருட்தலொன்றும்.

37. வார்நகோட்டியானையும் பன்றியுமன்ன.

38. ஏற்புடைத் தென்ப வெருமைக் கண்ணும்.

39. பன்றி புல்வா யுழையே கவரி
யென்றி வைநான்கு மேறெனற் குரிய.

40. எருமையு மரையும் பெற்றமு மன்ன.

41. கடல்வாழ் சுறவு மேறெனப் படுமே.

42. பெற்ற மெருமை புலிமரை புல்வாய்
மற்றிவை யெல்லாம் போத்தெனப் படுமே.

43. நீர்வாழ் சாதியு ளறுபிறப் புரிய.

44. மயிலு மெழாஅலும் பயிலத் தோன்றும்.

45. இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய. (புல்வாய்க்குரிய)

46. கலையென் காட்சி யுழைக்கு முரித்தே.

47. நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்.

48. மோத்தை யந்தகரு முதளு மப்பரும்
யாத்த வென்ப யாட்டின் கண்ணே.

49. சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணு
மாயிருந் தூவிய மயிலலங் கடையே.

50. ஆற்றலொடு புணர்ந்த வாண்பாற் கெல்லா
மேற்றைக் கிளவி யுரித்தென மொழிப.

51. ஆண்பா லெல்லா மாணெ னற்குரிய
பெண்பா லெல்லாம் பெண்ணெ னற்குரிய
காண்பவை யவையவை யப்பா லான.

52. பிடியே பெண்பெயர் யானை மேற்றே.

53. ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை
பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய.

54. புள்ளு முரிய வப்பெயர்க் கென்ப.

55. பெடையும் பேடையும் நாடினென்றும்.

56. கோழி கூகை யாயிரண் டல்லவை
சூழுங் காலை யளகென லமையா.

57. அப்பெயர்க் கிழமை மயிற்குமுரித்தே.

58. புல்வாய் நவ்வி யுழையே கவரி,
சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே.

59. பன்றி புல்வாய் நாயென மூன்று
மொன்றின வென்ப பிணவின் பெயர்க்கொடை.

60. பிணா வலெனினு மவற்றின் மேற்றே.

61. பெற்றமு மெருமையு மரையு மாவே.

62. பெண்ணும் பிணாவு மக்கட் குரிய.

63. எருமையு மரையும் பெற்றமு நாகே.
64. நீர்வாழ் சாதி யுணந்து நாகே.
65. முடுவலுங் கடமையு மாடல் பெறாஅ.
66. பாட்டி யென்ப பன்றியும் நாயும்.
67. நரியு மற்றே நாடினர் கொளினே.
68. குரங்கு முசுவு மூகமு மந்தி.
69. குரங்கி னேற்றினைக் கடுவ னென்றலு
மரம்பயில் கூகையைக் கோட்டா னென்றலுஞ்,
செவ்வாய்க் கிளியைத் தத்தை யென்றலும்,
வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலுங்,
குதிரை யுளாணினைச் சேவ லென்றலு,
மிருணிறப் பன்றியை யேன மென்றலு,
மெருமையு ளாணினைக் கண்டிய னெறலு,
முடிய வந்தன வவ்வழக் குண்மையிற்,
கடிய லாகா கடனறிந் தோர்க்கே.
70. பெண்ணு மாணும் பிள்ளையு மவையே.
71. நூலே கரக முக்கோன் மனையே
யாயுங் காலை வந்தணர்க் குரிய.
72. படையுங் கொடியுங் குடையு முரசு
நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்
தாரு முடியு நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய.
73. அந்த ணாளர்க் குரியவு மரசர்க்,
கொன்றிய வரூஉம் பொருளு மாருளவே.
74. பரிசில் பாடாண் டிணைத்துறைக் கிழப்பெயர்,
நெடுந்தகை செம்ம லென்றிவை பிறவும்
பொருந்தச் சொல்லுத லவர்க்குரித் தன்றே.
75. ஊரும் பேரு முடைத்தொழிற் கருவியும்
யாருஞ் சார்த்தி யவையவை பெறுமே.
76. தலைமைக் குணச்சொல்லுந் தத்தமக் குரியதோர்,
நிலைமைக் கேற்ப நிகழ்த்துப வென்ப.
77. இடையிரு வகையோ ரல்லது நாடிற்
படைவகை பெறாஅ ரென்மனார் புலவர்.
78. வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.
79. மெய்தெரி வகையி னெண்வகை யுணவின்
செய்தியும் வரையா ரப்பா லான.
80. கண்ணியுந் தாரு மெண்ணின ராண்டே.

81. வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.

82. வேந்து விடுதொழிலிற் படையுங் கண்ணியு
மாய்ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே.

83. அந்தணாளர்க் கரசு வரைவின்றே.

84. வில்லும் வேலுங் கழலுங் கண்ணியுந்
தாரு மாரமுந் தேரு மாவு
மன்பெறு மரபினே னோர்க்கு முரிய.

85. அன்ன ராயினு மிழிந்தோர்க் கில்லை.

86. புறக்கா ழனவே புல்லென மொழிப.

87. அகக் கழனவே மரமெனப் படுமே.

88. தோடே மடலே யோலை யென்றா
வேடே யிதழே பாளை யென்றா
வீர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்.

89. இலையே முறியே தளிரே தோடே
சினையே குழையே பூவே யரும்பே
நனையுள் ளுறுத்த வனையவை யெல்லா
மரனொடு வரூஉங் கிளவி யென்ப.

90. காயே பழமே தோலே செதிளே
வீழோ டொன்றாங் கவையு மன்ன. (வீழோடுடன்றாங் கவையுமன்ன)

91. நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்க முலக மாதலி
மிருதிணை யைம்பா லியனெறி வழாமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்.

92. மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழி பட்ட சொல்லி னான.

93. மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்.

94. வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே,
நிகழ்ச்சி யவர்கட் டாகலான.

95. மரபுநிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூறா மிருவகை யியல
முதலும் வழியுமென் நுதலிய நெறியின. (நூல்தாம் = நூறாம்)

96. வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

97. வழியெனப் படுவ தன்வழித் தாகும்.

98. வழியி னெறியே நால்வகைத் தாகும்.

99. தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்த்,
ததற்பட யாத்த லோடனை மரபினவே.

100. ஒத்த சூத்திர முரைப்பிற் காண்டிகை,
மெய்ப்பட்க் கிளந்த வகைய தாகி,
யீரைங் குற்றமு மின்றி நேரிதின்,
முப்பத் திருவகை யுத்தியொடு புணரி
நூலென மொழிப நுணங்கு மொழிப்புலவர்.

101. உரையெடுத் ததன்முன் யாப்பினுஞ் சூத்திரம்,
புரைதப வுடன்படக் காண்டிகை புணர்ப்பினும்,
விதித்தலும் விலக்கலு மெனவிரு வகையொடு
புரைதப நாடிப் புணர்க்கவும் பெறுமே.

102. மேற்கிளந் தெடுத்த யாப்பினிற் பொருளொடு,
சில்வகை யெழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை யுரையகத் தடக்கி
நுண்மை யொடுபுணர்ந்த வொண்மைத் தாகித்
துளக்க லாகாத் துணைமை யெய்தி
யளக்க லாகா வரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்றெரி வுடையது
சூட்திரத் தியல்பென யாத்தனர் புலவர்.

103. பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்,
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்.

104. விட்டகல் வின்றி விரியொடு பொருந்திச்
சுட்டிய சூத்திர முடித்தற் பொருட்டா,
வேதுநடையினு மெடுத்துக் காட்டினு
மெய்யாங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே.

105. சூட்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற,
வின்றி யமையா தியல்பவை யெல்லா,
மொன்ற வுரைப்ப துரையெனப் படுமே.

106. மறுதலை கடாஅவு மாற்றமு முடைத்தாய்த்
தன்னூ லானு முடிந்த நூலானு
மையமு மருட்கையுஞ் செவ்விதி னீக்கித்,
தெற்றென வொருபொரு ளொற்றிமைக் கொளீஇத்
துணிவொடு நிற்ற லென்மனார் புலவர்.

107. சொல்லப் பட்டன வெல்லா மாண்பு

மறுதலை யாயினு மற்றது சிதைவே.
108. சிதைவில வென்ப முதலவன் கண்ணே.
109. முதல்வழி யாயினும் யாப்பினுட் சிதையும்
வல்லோன் புணரா வாரம் போன்றே
முதனூ லோடு மறுதலைப் படுத்தல்
110. சிதைவெனப் படுபவை வசையற நாடிற்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
பொருளில மொழிதல் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியா லிழுக்கங் கூறல்
தன்னா னொருபொருள் கருதிக் கூறல்
என்ன வகையினு மனங்கோ ளின்மை
அன்ன பிறவு மவ்ற்றோ ரன்ன.
111. எதிர்மறுத் துணரிற் றிறத்தவு மவையே.
112. ஒத்த காட்சி யுத்திவகை விரிப்பி,
னுதலிய தறித லதிகார முறையே,
தொகுத்துக் கூறல் வகுத்து மெய்ந்நிறுத்தல்,
மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின்,
மொழியா தனைமுட் டின்றி முடித்தல்,
வாராத தனால் வந்தது முடித்தல்,
வந்தது கொண்டு வாராது முடித்தல்,
முந்து மொழிந்ததன் றலைதடு மாற்றே,
யொப்பக் கூற லொருதலை மொழியே,
தன்கோட் கூறன் முறைபிழை யாமை,
யுடம்படு புணர்த்தல் பிறனுடம் பட்டது,
தானுடம் படுத லிறந்த துகாதத,
லெதிரது போற்றல் மொழிவா மென்றல்
கூறிற் றென்றல், தான்குறியிடு லொருதலை யன்மை,
முடிந்தது காட்ட லாணை கூறல்
பலபொருட் கேட்பி னல்லது கோடல்,
தொகுத்த மொழியின் வகுத்தனர் கோடல்,
மறுதலை சிதைத்துத் தன்றுணி புரைத்தல்,
பிறன்கோட் கூற லறியா துடம்படல்,
பொருளிடை யிடுத லெதிர்பொரு ளுணர்த்தல்,
சொல்லி னெச்சஞ் சொல்லி யாங்குணர்த்தல்

தந்து புணர்ந்து ணர்த்தன் ஞாபகங் கூற,
லுய்த்துக் கொண்டுணர்த லொடுமெய்ப்பட நாடிச்,
சொல்லிய வல்ல பிறவவண் வரினுஞ்
சொல்லிய வகையாற் சுருங்க நாடி,
மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்,
டினத்திற் சேர்த்தி யுணர்த்தல் வேண்டு,
நுணித்த புலவர் கூறிய நூலே.

END OF THE THIRD BOOK

OF THE

THOLCAPYA-NUNNOOL

MEMORANDA BOOKS II AND III

1.The Second Book(சொல்லதிகாரம்) ***ETYMOLOGY,*** forming in this volume, **'Book ii Tholcapya - Nannool'** from Page 1 to 21 is published the origional text with a few refe rence only,that simply students may have the advantage of the hithrto unpublished manuscript.The Book itself, however,with English translation'Examples, and Notes,is being rapidly prepared for thepres,and will be issued in a Second volume,togther with the (சொல்லதிகாரம்) of the Nannool, the two compared after the model of Book- I

2.Book - III the last grand divison of **Tholcapyam,** forming pp32 to 69, the end of this Volume, is also published in the original text only, for the benefit of such students as might wish to puruse it.This Grammar of General Knowledge also contains 9 chapters like the First and Second Books:of these the 1st Chapter lays down the division and system of the books, as also some general rules and facts relayive to the differnt seasons pf the year,varieties of soil,produc tions,people and their modes of life.The subject of this Chapter is termed அகப் பொருள் Internal or immediate knowle dge. The Second Chapter contains புறப் பொருள் External or remote knowledge, and relates to kings and their military operations. The Third Chapter gives adetailed account of a custom (களவியல்) "Clandestine Marriage" peculiar to a Class of people denominated கந்தர்வர் Gandervas, who appear to have become intermingled with the Hindus at a subsequents period. The fourth Chapter explains (கற்பியல்) the customs,manners, and line of conduct of Hindus after marrige.In the fifth (called பொருளியல் Chapter of things) are laid down further explanations of the above manners and customs.The Sixth Chapter treats of the passions of Human nature as bearing upon the subjects already enumerated. And the Senenth and Eigth Chapters are Rhetoric and Prosody. The last or Ninth Chapter is an excellent Miscellany,somewhat similar to the பொதுப்பாயிரம் and சிறப்புப் பாயிரம் of the Nannool, and contains Rules for composi tions,and criticism.

3.The knowledge or study of this book and of its commentary,which wouled occupy above 300 Octavo pages is very important and not without use to every Oriental Scholar, for it would not only assit him in understanding Tamil classical writings of every description,but would also put him in possession of materials which would enable him to understand varietics of Hindoo mind and character from the remotest ages.

4.There are a few subordinate teeatises on individual subjects of the Tholcapyam Grammar of general knowledge, such as the இறையனாரகப் பொருள் whose author is said to have been Siva himself ,நம்பியகப் பொருள் by Nambi, a Jain ,ஐயனாரிதனார் வெண்பாமாலை A King,(ஐயனாரிதனார்)on the subject of warfare, and புறப்பொருட் பன்னிருபடலம் a joint work on thesame subject by the twelve disciples of Agastyan. All these are however,as above said, subordinate to the Tholcapyam.

5.The Seventh Chapter of the பொருளதிகாரம் by Tholcapyam,viz.Analogy,hasalso been amplified by தண்டி and மாறன் (Dand and Maran) These works are called தண்டியலங்காரம் and மாறனலங்காரம் Rhetoric by Dandi,and Rhetoric by Maran.

6.The Eighth Chapter or Versification, received amplified explanation in காரிகை Karigai a book published by அமுதசாகர முனிவர் and now generally studied,and in யாப்பருங்கலம் Yapprungalam more ancient than Karigai, lately published by the Rev. Mr.Pope.

7.The Editions of the Nannool to be had at present

1. vizagaperumal lyers Succinct (kandigai) Commentary,at his Depository.

2. Ramanuja - Kandigai,from Ramanja Cavirayers Agent at Royapooram.

3.Ramasawmy Moodaelliar's Edition of the large Commentary,at the Salay street Depository .

4.Pope's excellent and neat Edition of the Sootrum and examples, at the American Mission Press.

5.Joye's Grammatica Tamuliensis,to be had of himself. 6. The present Edition of the nannool and the ichole of the hilherto unpublished Tholcapyam, at the Vepery Mission Press.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை-ஒப்பனையியல்	250.00
தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி	225.00
அரங்கேற்றுகாதை ஆராய்ச்சி	140.00
பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள்	45.00
Essays and Tributes on Tirukkural (1886-1986)	100.00
இந்தியச் சூழலில் மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை	60.00
நீறணி பவளக் குன்றம்	35.00
உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார்	35.00
கலீலியோ முதல் கலாம் வரை	35.00
குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம்	60.00
தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள்	30.00
நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி	30.00
ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம்	30.00
சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை	30.00
சங்கத் தமிழ் பகுதி 1	100.00
சங்கத் தமிழ் பகுதி 2	100.00
சங்கத் தமிழ் பகுதி 3	115.00
சங்கத் தமிழ் பகுதி 4	130.00
சங்கத் தமிழ் பகுதி 5	110.00
ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள்	60.00
தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும்	160.00
இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்)	50.00
திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு	40.00
பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம்	70.00
காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு	40.00
Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study	125.00
இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல்	290.00
தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு	310.00
பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும்	170.00
தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள்	185.00
மனிதப் புனிதர் கக்கன்	110.00
மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை	75.00
மூவர்தமிழ் மூன்று பார்வைகள்	50.00
காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள்	100.00
அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா	145.00
அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு	160.00
இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள்	55.00
கடலடியில் தமிழர் நாகரிகம்	55.00
கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்)	150.00
சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள்	55.00
சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று	170.00

---

706 நன்னூல் உரைவளம் 18 (தொல்காப்பிய நன்னூல்)120.00